# தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
## 2004

TAMIL NADU STATE DEPARTMENT
LIBRARY.
Acc No. - - - -
Date - - - -
MADRAS

# தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
# 2004

பதிப்பாசிரியர்
**தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.**
**சிறப்பு ஆணையர்**

தொகுப்பாசிரியர்கள்
**கி. ஸ்ரீதரன் - ஆ. பத்மாவதி - அர. வசந்தகல்யாணி**

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
தரமணி, சென்னை - 600 113

முதற்பதிப்பு 2004
வெளியீடு எண் : 155

அச்சிட்ட தாள் – மேப்லீத்தோ தாள்
தாள் அளவு - டபுள் டெம்மி-1 × 16

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. MADRAS.
LIBRARY.
Acc No. 11762
Date
417.4

மொத்த புத்தகம் - 500 படிகள்
மொத்த பக்கங்கள் - 288

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

விலை : ரூ. 132.00

அச்சிட்டோர்
தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை
தரமணி, சென்னை-600 113

# பதிப்புரை

இந்தியாவிலுள்ள கல்வெட்டுகளில் அறுபது விழுக்காடு தமிழகத்தில் காணப் படுகின்றன. அவற்றையெல்லாம் படியெடுத்துப் படித்துத் தொகுத்து வரலாற்றுக்குத் தேவையான அடிப்படைத்தரவுகளாக ஆய்வுலகிற்கு அளித்து வரும் சிறந்த பணி யினைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆற்றி வருகிறது. இதுவரை 20 தொகுதிகளில் 2300 கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளைக் கண்டறிந்து, பாதுகாக்கும் பணியில் இன்னும் வேகம் கொண்டு செயல்பட வேண்டும். அப்போதுதான் காலத்தாலும் மனிதனாலும் கல்வெட்டுகளுக்கு ஏற்படும் சிதைவுகளைத் தடுத்து அவற்றை முறையாகப் பதிவு செய்து எதிர்காலச் சந்ததியினருக்கு அளித்திட இயலும் என்ற எண்ணத்தில் 2004-ஆம் ஆண்டு முதல் கல்வெட்டு முனைப்புத் திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டுத் துறை அலுவலர்கள் அனைவரும் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்ந்து கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியினைச் செய்து வருகின்றனர். அதன்படி மாதந்தோறும் 500 கல்வெட்டுகளுக்குக் குறையாமல் படியெடுக்கப்பட்டு அவற்றை உடனுக்குடன் படிக்கும் பணியும் செய்யப்படுகிறது. (பிரிக்கப்படாத) தஞ்சாவூர், தருமபுரி, மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணி முழுமையாக நிறைவடைந்துள்ளது.

துறை படியெடுத்த கல்வெட்டுகளை உடனுக்குடன் புத்தகமாக வெளியிடும் பணி தொடர்ந்து நடைபெற்றாலும் நிர்வாகக் காரணங்களால் வெளியிடுவதில் தாமதம் ஏற்படும் நிலை இருந்து வந்தது. தற்போது அவற்றை அச்சிடும் பணி விரைவுபடுத்தப் பட்டுள்ளது. இடையீடின்றித் தொடர்ந்து அவற்றை வெளியிடும் வகையில் பணியில் முன்னேற்றம் ஏற்பட வகை செய்யப்பட்டுள்ளது.

துறையில் முன்னர் வெளியிட்ட கல்வெட்டுத் தொகுதிகள், குடந்தை வட்டக் கல்வெட்டுகள், நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள், தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் என்பன போன்ற தலைப்புகளில் ஒரு குறிப்பிட்ட வட்ட அல்லது ஊர்க் கல்வெட்டு களாக வெளியிடப்பட்டன. தற்போது அவ்வமைப்பைச் சற்று மாற்றி தமிழ்நாட்டி லுள்ள பல மாவட்டங்களில் படியெடுத்த கல்வெட்டுகளை, ஊர், கோயில் வாரியாகத் தொகுத்து, அதில் அச்சிடப்படும் ஆண்டும் குறிக்கப்பட்டு வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதலாவதாக வெளிவரும் இந்தக் கல்வெட்டுத் தொகுதியினை **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 2004** என்ற பெயரில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தொகுதியில் திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், மாவட்டங்களிலுள்ள 18 ஊர்க் கல்வெட்டுகள் தொகுத்து வெளியிடப்படுகின்றன.

இப்பணி தொடர்பாகத் திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஊராய்வு செய்து கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ள கல்வெட்டாய்வாளர்கள் திரு பொ. இராசேந்திரன், முனைவர் ஆ. பத்மாவதி, திருமதி அர. வசந்தகல்யாணி, திரு கோ. முத்துசாமி ஆகியோரைப் பாராட்டுகிறேன். இக்கல்வெட்டுகளைப் பதிப்புச் செய்வதற்கு உதவிய கல்வெட்டாய்வாளர்கள் முனைவர் சு. இராசகோபால், திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோரையும் பாராட்டுகிறேன். சோழமாதேவிக் கல்வெட்டு களை முதன்முறையாகக் கண்டறிந்து துறைக்குத் தகவல் தந்த பதிவுஅலுவலர் திரு கி. ஸ்ரீதரன் அவர்கள் பாராட்டுக்குரியவர். குறித்த காலத்திற்குள் இந்நூலை அச்சிட்ட அச்சுப் பிரிவினரும், நூலில் இடம்பெறும் நிழற்படங்களை எடுத்த நிழற்படப் பிரிவினரும் பாராட்டுக்குரியவர்கள்.

அறிஞர் பெருமக்களும் ஆய்வு மாணாக்கரும் தமது அடிப்படை ஆய்வினுக்கு இந்நூலைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

23/12/04

**( தி. ஸ்ரீ. ஸ்ரீதர் )**

சிறப்பு ஆணையர்

# முன்னுரை

திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள் இந்நூலில் இடம் பெறுகின்றன. பல புதிய செய்திகளையும், வரலாற்றுச் சிறப்பையும் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சோழமாதேவி என்ற ஊரிலுள்ள திருக்கயிலாசமுடையார் கோயிற் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு வெளியுலகின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வூரிலுள்ள கல்வெட்டுகள், சோழர் கால அரசியல், தத்துவ, சமய, கலை வரலாற்றிலும், சமூக வரலாற்றிலும், மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சோழமாதேவி சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் இந்த ஊர் முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சோழமாதேவி என்ற பெயரில் இராஜராஜசோழனின் அரசி ஒருவர் இருந்ததைத் தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது. இத்தேவி பெரிய கோயிலில் பல செப்புத் திருமேனிகளைச் செய்து வைத்திருக்கின்றார். அவர் பெயரில் ஏற்படுத்தப் பட்டதுதான் இவ்வூர்.

இங்குள்ள பதினைந்து கல்வெட்டுகளில் இரு கல்வெட்டுகளைத் தவிர பிற அனைத்தும் சபா விவஸ்தை (விவாதம் செய்து முடிவெடுத்தல்) செய்த செய்தியைக் குறிப்பிடுகின்றன. அவ்வூரில் பேரம்பலம், பிரம்மஸ்தானம் என்று கூறப்பட்ட மண்டபம் இராஜராஜன் பெயரில் அமைக்கப்பட்டிருந்தது, அங்குதான் சபை கூடி ஊர் நிர்வாகம், கோயில் நிர்வாகம் பற்றிப் பேசி முடிவெடுத்தது. அவ்வூரிலுள்ள பெருமாள் கோயிலிலும் சில சமயம் சபை கூடியிருக்கிறது.

இவ்வூர்ச் சிவன் கோயில் ஸ்ரீகைலாஸமுடையார் கோயிலென்றும், பெருமாள் கோயில்கள் நடுவில் ஸ்ரீகோயிலென்றும், திருமாதிருஞ்சோலை ஆழ்வார் கோயிலென்றும், அழைக்கப்பட்டன.

ஊருக்கு நடுவில் இராஜராஜன் பெயரில் பிரம்மஸ்தானம் அல்லது பேரம்பலம் இருந்தது போல, ஊருக்கு வடக்கில் இராஜராஜன் தண்ணீர்ப்பந்தல் இருந்தது. ஸ்ரீகைலாஸமுடையார் கோயிலின் மேலைத் திருச்சுற்றாலைக்குத் தென் மேற்கில் வைத்யர், உவச்சர், காவிதி ஆகியோருக்குக் குடியிருப்புகள் இருந்தன. மதிள், திருச்சுற்று ஆகியவற்றைச் சுற்றிலும் திரு நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தது.

இவ்வூர்க் கோயில்களில் இசை முழக்கத்துடன் வழிபாடு நிகழ்த்தப்பட்டது. உவச்சர் களுக்கு உவச்சபுறமாக நிலமளித்து, அவர்கள் கோயில் வழிபாட்டின் போது பஞ்ச மகாசப்தம் எனக் கூறப்பட்ட ஐந்து வித இசைக் கருவிகளின் மூலம் இசையெழுப்ப ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது, இவ்வூர்க் கோயில்களில் மொத்தம் 20 உவச்சர்கள் இசை முழக்க நியமிக்கப் பட்டிருந்தனர். இவர்களுக்கு நிலமளித்ததுடன், வீட்டுமனையும் கொடுக்கப்பட்டுப் பேருவச்சன் என்ற பட்டமும் அளிக்கப்பட்டிருந்தது.

அடுத்து மெய்க்காட்டு என்றோர் அரிய நிகழ்ச்சி இவ்வூரிலும் நடைபெற்றிருக்கின்றது. மெய்க்காட்டி பிரஸஸ்தியைப் பூஜிப்பானுக்குப் பொன் வழங்கப்பட்டிருக்கின்றது. கும்பகோணம் அருகில் திருவிசலூர்க் கல்வெட்டில் வேதமந்திரங்கள் கற்ற பிராமணர் ஐந்துபேர் ஐப்பசித்திங்கள் உத்திராடத்து நாளன்று மெய்க்காட்ட வேண்டுமென்றும், அவ்வாறு மெய்க்காட்டினார் ஐவர்க்கும் தினந்தோறும் குறுணி நெல் வீதம் கொடுக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டும், மெய்க்காட்டி ஒக்க பகுத்துண்பதாகப் பொன் தானமளிக்கப்பட்டிருந்ததாக மற்றொரு கல்வெட்டும் கூறுவதைக் காணலாம்.

இவ்வூர் சிறந்ததொரு தத்துவ மையமாகவும் செயல்பட்டிருக்கின்றது. இதுவரையிலும் அறியப்படாத் அத்வைத உரை நூலொன்றின் பெயரும் அதன் ஆசிரியரின் பெயரும் இவ்வூர்க் கல்வெட்டால் அறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வேத உபநிஷதங்கள் விரிவாக உள்ளதால் அதனைச்சுருக்கி பிரம்மசூத்ரம் என்ற பெயரில் நூல் எழுதியவர் கௌடபாதர். இவரது மாணவர் கோவிந்தபாதர். அவருடைய மாணவர்தான் ஆதிசங்கரர். பிரம்மசூத்ரம் மிக்வும் சுருக்கமாக இருப்பதால் பொருள் புரிந்து கொள்வதில் உள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்காக, இவர் எழுதிய உரைதான் பிரம்மசூத்ர பாஷ்யம். இந்த உரைக்கும் விளக்கம் தேவைப்பட்டதால் பலரால் உரை எழுதப்பட்டது. அவர்களுள் ஒருவர் சிதானந்த பிடாரர் என்பதை இவ்வூர்க் கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது. ஆதிசங்கரர் எழுதிய பிரம்மசூத்ர பாஷ்யத்திற்கு இவர் எழுதிய உரையின் பெயர் பிரதீபகம் ஆகிற வார்த்திகம் என்று அறிய முடிகிறது. இந்த நூலின் பொருள்தான் இவ்வூரில் விளக்கிக் கூறப்பட்டது (வக்கணிக்கப் பட்டது). சங்கரர் எழுதிய பிரம்மசூத்ர பாஷ்யம் இக்கல்வெட்டில் பகவத் பாதீயம் சாரீரக பாஷ்யம் என்று கூறப்பட்டுள்ளது. (பின் அட்டை (ம) படம் 1, தொ, எண் 9/1990)

இதில் பகவத் என்பது ஆதிசங்கரரையும், பாதீயம் (பாஷ்யம்) என்பது அவர் எழுதிய உரை என்பதையும் குறிக்கும். அந்த பகவத்பாதீயம் என்ற உரை சாரீரக பாஷ்யம் என்றும் அழைக்கப்பட்டது என்றும் அறியப்படுகிறது. சாரீரக பாஷ்யம் என்பதில் சாரீரக என்பது வேத உபநிஷதங்களைக் குறிக்கும் என்கிறார் டாக்டர் இரா. நாகசாமி. விளக்கமளித்தல் என்பதற்கு வக்கணித்தல் என்ற சொல் கல்வெட்டுகளில் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காண முடிகிறது.

இவ்வூர்ப் பெருமாள் கோயில்களில் வைகானஸ ஆகமத்தின்படி வழிபாடுகள் நிகழ்த்தப் பட்டன. அவ்வூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் தாங்கள் கூடிப் பேசி எடுத்த ஆணையை (ஸ்ரீமுகம்), அவ்வூர் வைகானஸர்களிடம் சென்று தருகின்ற போது வணங்கிக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. அத்வைதமும், வைகானஸமும் எவ்வாறு ஒரே ஊரில் கை கோத்திருந்தது என்பதற்கு இவ்வூர்க்கல்வெட்டு மிகச்சிறந்த சான்றாகும்.

கும்பகோணம் வட்டம் திருவிசலூரில் வேதம் வக்கணிக்கப் பட்டது. திருவொற்றியூரில் சுந்தரரின் ஸ்ரீபுராணம் வக்கணிக்கப்பட்டது. கழுகுமலைச் சமணப் பள்ளியில் சித்தாந்தம் வக்கணிக்கப்பட்டது. அதுபோன்று இங்கும் மேற்கூறிய விளக்கவுரை தவிரப் பிற வேத நூல் களுக்கும் விளக்கமளிக்கப்பட்டன என்பதை இவ்வூரிலுள்ள மற்றொரு கல்வெட்டு கூறுகிறது.

இவ்வூராட்சியை நிர்வகித்து வந்த சதுர்வேதிமங்கலத்துச் சபையினர், ஊராட்சியைப் பல வாரியங்களாகப் பிரித்துச் சிறப்பாக நிர்வாகம் செய்தனர். ஆற்றுவாரியம், ஊர்வாரியம்

போன்ற வாரியங்களில் பணி புரிந்தோர், ஓராண்டு காலமே பணிபுரிய வேண்டும் என்றும், அவர்கள் எதிர் வரும் ஐந்து ஆண்டுகளுக்கு அந்த வாரியங்களில் பணிபுரியப் பெறார் என்றும் கிராம நிர்வாகச் சட்டம் இயற்றப்பட்டிருந்தது. அவ்விரு வாரியங்கள் போல மேலும் பல வாரியங்கள் இருந்திருத்தல் வேண்டும். அக்கல்வெட்டு துண்டுக் கல்வெட்டாக உள்ளதால் முழுத் தகவல்களும் நமக்குக் கிடைக்கவில்லை. இந்த நிர்வாக முறை புகழ் பெற்ற உத்தரமேரூர் நிர்வாக முறையைப் போன்றதுதான். இவ்வூரில் அமைந்திருந்த உய்யக்கொண்டான் ஆற்றுவாரியம் என்பது உத்தரமேரூர் ஏரி வாரியம் போல் செயல்பட்டிருத்தல் வேண்டும். உத்தரமேரூர் ஏரி வாரியம் ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. ஏரி, குளம், ஊருணி முதலிய நீர் நிலைகளைப் பாதுகாத்தல், நீர்ப்பாசனத்தை ஒழுங்கு படுத்துதல், போன்றவை ஏரி வாரியத்தின் கடமையாக இருந்தது. அதுபோலத்தான் இவ்வூர் உய்யக்கொண்டான் ஆற்று வாரியமும் செயல் பட்டிருக்க வேண்டும்.

முதலாம் பராந்தக சோழன் காலத்தில் (கி.பி. 921-ல்) உத்தரமேரூரில் வாரிய உறு ப்பினர் கள் குடவோலை முறைப்படிதான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற அரசனது ஆணையைக் கொண்டு வந்த அரசு அதிகாரியின் முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. (இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1899 முன்னுரை பக்கம்-27, பிற்காலச் சோழர் வரலாறு, பக்கம் 495 மற்றும் 511)

சோழமாதேவி என்ற இவ்வூரில் நடைபெற்ற தேர்தலின் போதும் அரசு அதிகாரி முன்னிலை வகித்தார். பராந்தக சோழனின் அதிகாரி தேர்தல் நடத்தும் முறை பற்றிய ஆணையைக் கொண்டு வரவில்லை. மாறாக, சதுர்வேதி மங்கலத்து மகாசபையார், தங்களது கிராம சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்தையே முதலாம் இராஜராஜசோழனின் அதிகாரி கொண்டு வந்தார். அதுமட்டுமல்ல, அச்சபையால் முன்னதாக நடைமுறைப்பப்படுத்தபட்ட தீர்மானம் அழிய, இத்தீர்மானம் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற அரச ஆணையுடன் வந்தார். இவ்வூர்க் கல்வெட்டுகள் தவிர இக்கோயிற் சிற்பங்களும் மிகவும் எழிலானவை. கலைநேர்த்தி மிக்கவை. (படம் 2)

காருகுடி என்ற ஊரிலுள்ள கல்வெட்டொன்று, அந்த ஊருக்குப் பிறந்த நாளின் நட்சத்திரத் தைக் கூறுகிறது. (படம் 6)

குண்டூர் ஏரிக்கரையில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தும் இராஜகேசரிவர்மன் முதலாம் ஆதித்தசோழன் காலத்தைச் சேர்ந்தவை. அவ்வூரில் குமிழியைச் செய்தவன் மாறன் குவாவன் என்பதை இரு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இப்பெயர் செந்தலைக் கல்வெட்டில் உள்ள முத்தரையர்களின் பெயர்களுள் ஒன்றாகும். (படம் 3)

கீழ்க்குறிச்சியிலுள்ள பௌத்தப் பள்ளிக் கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வீரதாவளத்திலுள்ள பௌத்தப்பள்ளிக்குச் செந்தாமரைக்கண்ண நல்லூர் என்ற ஊரைப் பள்ளிச்சந்த மாகக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பௌத்தம் மீண்டும் தலைதூக்கியிருந்தது என்பதற்குச் சிறந்த சான்றாகும். (படம் 4)

வடசேரி நடுகல் மிகவும் வித்தியாசமானது, ஒரு வீரன் தனது ஊரைச் சேர்ந்த ஆநிரை களை மாற்றான் வந்து கவர்ந்து சென்றபோது அதைக் காப்பாற்றுவதற்காக அந்நிரைகளின் பின்பு ஓடி இறந்த இடம் என்று கூறுகிறது. ஆகையால் அக்கல் நடப்பட்டுள்ள இடமே அவ்வீரன் இறந்த இடம் என்று தெரிய வருகிறது. அவ்வீரன் பெயர் கொற்றம்பூதி. அவன் பெயரே அவன் கொடும்பாளூர் வேளிர் குலத்தைச் சேர்ந்தவன் என்பதைத் தெரிவிக்கிறது.

சோழமாதேவிக்கு அடுத்ததாகப், புகழ் பெற்ற திருவேள்விக்குடிக் கல்வெட்டுகள் முக்கியத்துவம், வாய்ந்தவை. சோழ மன்னர்களான, கோவிராஜகேசரிவர்மன், கோப்பரகேசரிவர்மன், கோப்பரகேசரி உத்தமசோழன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், இரண்டாம் இராஜேந்திரன். முதலாம் குலோத்துங்கன், விக்ரமசோழன், இரண்டாம் இராஜராஜன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.

காவிரியாற்றின் வடகரையில் உள்ள இரண்டு பிரமதேயங்களைப் பற்றித்தான் இவ்வூர்க் கல்வெட்டுகள் பேசுகின்றன. வடகரை நல்லாற்றூர் நாட்டில், பிரமதேயம் விடேல்விடுகு சதுர்வேதி மங்கலம் என்ற பெயரிலும், அதே வடகரை குறுக்கை நாட்டில், பிரமதேயம் விடேல் விடுகு தேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரிலும் இரண்டு ஊர்கள் இருந்தன.

விடேல் விடுகு என்பது பல்லவமன்னன் மூன்றாம் நந்திவர்மனின் பெயராகும். அவன் பெயரிலும், அவனது அரசியின் பெயரிலும் அமைந்த இரு சதுர்வேதிமங்கலங்கள் தாம் இவை விடேல் விடுகு என்பது மூன்றாம் நந்திவர்மனின் பெயர் என்பதைப் பல கல்வெட்டுகளும் நந்தி கலம்பகமும் கூறுகின்றன.

மேற்கூறிய இரு சதுர்வேதி மங்கலங்களில் குறுக்கை நாட்டு பிரமதேயம் விடேல் விடுகு தேவிச் சதுர்வேதி மங்கலத்தில்தான் திருவேள்விக்குடி உடையார் கோயில் இருந்தது.

திருவேள்விக்குடி உடையார் கோயிலில் இராஜகேசரிவர்மனின் 3, 4, 15, 16-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், பரகேசரிவர்மனின் 12, 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு களும் உத்தமசோழனின் கல்வெட்டுகளும் முற்காலக் கல்வெட்டுகள், கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மன்னன் பெயரில்லாத பல்வேறு கல்வெட்டுகளும் உள்ளன. இவற்றில் பல இக்கோயிலின் கட்டடப்பகுதிகள், கற்கள் ஆகியவற்றைக் கொடையளித்தது பற்றியும் துவாரபாலகர்கள் தட்சிணா மூர்த்தி ஆகிய சிலைகளை அமைத்தது பற்றியும் கூறுகின்றன.

மேற்கூறிய கல்வெட்டுகளில் பொதுவாக கோவிராஜகேசரி என்ற மன்னனை முதலாம் ஆதித்தசோழன் என்றும் கோப்பரகேசரி என்ற மன்னனை முதலாம் பராந்தக சோழன் என்றும் கருதுவர்,

கோப்பரகேசரியின் சிதைந்த ஒரு கல்வெட்டில்தான் இத்திருக்கற்றளியின் நாலில் ஒரு பகுதியை [நாலோபாதி வளஞ்சியரும், நானாதேசி திசையாயிரத்தைஞ்ஞூற்றுவரும், இவர்கள் மக்களும் எடுப்பித்தனர் என்றும், அந்தக் கட்டுமானப்பணியை நிறைவேற்றியவர்கள் 'திருவேள்விக்குடி நம்பியாகிய திருவையாறு யோகியாரும் அவர் மகன் ஸ்ரீகரணத் திருக்கற்றளிப் பித்தரும்' ஆவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

கோப்பரகேசரியின் 4, 6, 12, 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இவ்வூர்க் கோயிலில் உள்ளன என்று பார்த்தோம், கோப்பரகேசரி என்ற முதலாம் பராந்தக சோழன் அவனது 3-ஆவது ஆட்சியாண்டிற்கு முன்னதாகவே 'மதிரை கொண்ட பரகேசரி என்ற விருதுப் பெயரைப் பெற்றிருக் கிறான். ஆனால் அதற்குப் பின்னர் கிடைக்கும் இவ்வூர்க் கல்வெட்டுகளில் ஒன்றில்கூட

அவ்விருது பெயரைக் காண முடியவில்லை. எனவே இக்கோயிலில் உள்ள கோப்பரகேசரிவர்மன் கல்வெட்டுகள், முதலாம் பராந்தகசோழன் காலத்தைச் சார்ந்தவை அல்ல. அவனுக்குப்பின்

ஆட்சி செய்த பரகேசரிவர்மன் அரிஞ்சய சோழன் ஆவான். அவன் மொத்தம் ஆறு ஆண்டுகளே ஆட்சி செய்துள்ளான். ஆகையால் அவனது கல்வெட்டுகளுமல்ல. அடுத்த பரகேசரி உத்தமசோழன். இவனுக்கு அடுத்த பரகேசரி முதலாம் இராஜேந்திர சோழன். இவன் கால எழுத்தமைதி வேறுபட்டது. ஆனால் இக்கல்வெட்டுகளின் எழுத்தமைதி, முதலாம் இராஜராஜன் காலத்திற்கு முந்தியவை எனவே இக்கோயிலில் உள்ள கோப்பரகேசரி கல்வெட்டுகள் உத்தம சோழனுடையவை என்று கருதலாம்.

உத்தமசோழர்னின் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இளையவாள் பெற்ற கைக் கோளர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அது போன்ற கைக்கோளர்கள் மன்னன் பெயர் கூறப்படாத கல்வெட்டிலும் கூறப்பட்டிருக்கின்றனர் என்பதால் இக்கல்வெட்டும் உத்தமசோழன் கல்வெட்டாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ஆறாவது - எனத்தொடங்கும் கல்வெட்டில் உத்தமசோழனின் தாயார் செம்பியன்மாதேவி இக்கோயிலுக்குக் கொடையளித்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது. ஆனால் பரகேசரி என்றோ, உத்தமசோழன் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றாலும் இக்கல்வெட்டு உத்தமசோழன் கல்வெட்டுதான் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் கோப்பரகேசரி என்றோ உத்தமசோழன் என்றோ கூறப்படாமலும் இம்மன்னன் காலக் கல்வெட்டுகள் இவ்வூர்க் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. (படம் 8)

மன்னர் பெயர் கூறப்படாத மேலும் இரு கல்வெட்டுகளில் கண்டராதித்த சோழர் தெரிந்த கைக்கோளர்கள் இக்கோயில் கட்டுவதற்குக் கல் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

உத்தமசோழன் தன் தந்தையான கண்டராதித்த சோழன் பெயரில் கைக்கோளப்படை அமைத்திருந்தான் எனலாம்.

திருவேள்விக்குடி உடையார் கோயிலைக் கட்டிய செய்தியைக் கூறும் கல்வெட்டும் கோப்பரகேசரியின் கல்வெட்டேயாகும். (க.எண். 27) இக்கோயிலைக் கட்டிய நபர் மன்னர் பெயர் கூறப்படாத மேலும் இருகல்வெட்டுகளில் கட்டடக்கலைப் பகுதிகளை அளித்தது பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆகவே அக்கல்வெட்டுகளும் கோப்பரகேசரியின் கல்வெட்டுகளே என்பதில் ஐயமில்லை.

கல்வெட்டுகளின் எழுத்தமைதியும் உத்தமசோழன் காலத்ததுதான்; முதலாம் இராஜராஜசோழன் ஆட்சிக்கு முந்திய காலத்தை சார்ந்ததுதான். திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் 'இக்கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்ததாகக் கொள்ள முடியாது என்றும் உத்தமசோழன் காலத்தவையாக இருக்கலாம்' என்றும் கூறியுள்ளார்.

ஆக இப்போதுள்ள கோயிற் கட்டடப்பகுதி உத்தமசோழன் காலத்தைச் சார்ந்ததாகும் எனக் கொள்ளலாம்.

உத்தமசோழன் காலத்திற்கு முன் அங்கு கோயில் இருந்ததா? என்ற கேள்வியும் எழும். இதற்குப் பதில் கோவிராஜகேசரிவர்மனின் கல்வெட்டுகளிலேயே உள்ளன. இங்குள்ள இராஜகேசரியின் கல்வெட்டுகள் 15, 16ஆம் ஆட்சியாண்டுகளைச் சார்ந்தவை முதலாம் இராஜராஜன் எழுத்தமைதி காலத்திற்கு முந்தியவை.

அக்கல்வெட்டுகளுள் ஒன்றில் [எண். 35] 'அழிவு சொலக் கற்றளிக்கு இட்ட காசு' என்று குறிப்பிடப்படுகின்றது. இதனைத் திருக்கற்றளியின் திருப்பணிச் செலவுகளுக்குக் கொடுக்கப்பட்ட தானம் எனலாம்.

துவாரபாலகர் அருகிலுள்ள பெயர் கூறப்படாத ஒரு கல்வெட்டு மகாகாளன் என்ற துவாரபாலகரைச் செய்வித்த செய்தியைக் கூறுகிறது. செய்வித்தவன், கரிகால கன்ன மூவேந்த வேளாந்' [க. எண். 47] என்பான். இதே பெயருடைய நபர் கோவிராஜகேசரியின் கல்வெட்டொன்றில் [எண். 52] விளக்கெரிக்க ஆடுகள் தானமளித்துள்ளான்.

முதலாம் ஆதித்த சோழனுக்குக் கரிகாலன் என்ற பெயர் இருந்திருக்கிறது. அதனால்தான் சுந்தரசோழனுடைய மகன் ஆதித்த கரிகாலன் என்ற பெயரைக் கொண்டிருந்தான். இந்த கோவிராஜகேசரிவர்மன் ஏன் சுந்தரசோழனாக இருத்தல் கூடாது என்றும் எண்ணலாம். சுந்தர சோழன் அவனது 5-ஆம் ஆட்சியாண்டு முதல் 17-ம் ஆட்சியாண்டு வரை உள்ள கல்வெட்டுகளில் 'மதிரை கொண்ட இராஜகேசரி' என்ற விருதுப்பெயர் காணப்படும், ஆனால் இவ்வூர்க் கல்வெட்டுகளில் அவ்விருதுப்பெயர் இல்லை.

'அழிவு சொலக் கற்றளிக்கு இட்ட காசு' எனக் கூறம்படும் கோவிராஜகேசரி கல்வெட்டில் ஆட்சியாண்டு கூறப்பட்டுள்ள பகுதி சிதைந்து விட்டது. ஆதலால் அக்கல்வெட்டை ஏன் சுந்தர சோழன் கல்வெட்டாகக் கொள்ளக்கூடாது எனக் கேட்கலாம். இக்கல்வெட்டையும் மகாகாளனை எடுத்ததாகக் கூறப்பட்ட கரிகாலக்கன்ன மூவேந்த வேளான் கல்வெட்டுகளையும் இவன் காலத்த தாகக் கொண்டுவிட்டால், 15, 16-ஆம் ஆட்சியாண்டு கோவிராஜகேசரி கல்வெட்டுகளில் 'மதிரை கொண்ட' என்ற விருதுப் பெயர் இல்லாதால் அவற்றை வேறோர் இராஜகேசரி கல்வெட்டுகள் என்று கொள்ள வாய்ப்பில்லை.

சுந்தரசோழனுக்கு முன்னர் இரு இராஜகேசரிகள். ஒருவன் கண்டராதித்தன். அவன் ஏழு ஆண்டுகளே ஆட்சி புரிந்தான் [கி.பி. 950-957] அவனுக்கு முன்னர் உள்ள இராஜகேசரி முதலாம் ஆதித்தன். கி.பி. 871 முதல் 907 வரை 36 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன். பின்னர் கட்டப்பட்ட கோயிலில் முன்னர் வாழ்ந்தவன் கல்வெட்டு இருக்குமேயாயின் அது பழங்கல் படியாகவே இருக்கும். ஆனால் இங்கு அப்படி இல்லை.

இக்கோயிலின் கட்டட அமைப்பு முதலாம் ஆதித்தசோழன் காலப் பாணியிலும் உள்ளது. எனவே பழைய கற்றளி, உத்தமசோழன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது எனலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள், இக்கல்வெட்டுகளை முதலாம் ஆதித்த காலத்தையோ அல்லது சுந்தர சோழன் காலத்தையோ சார்ந்ததாக இருக்கலாமென்கிறார். [Early Chola Art]

இவ்வூர்க் கோயில் கட்டிய செய்தியைக் கூறும் கோப்பரகேசரி கல்வெட்டில் [எண் 27],

'திருவேழ்விக்குடி கூடிப் பிரியக்கடவ வளஞ்சியரும்

நானாதேசி திசையாயிரத்தைஞ் ஞூற்றுவரும் . . . .

என்று கூறியிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வெளிநாடு செல்ல இவ்வூரிலிருந்து பிரியவும், மீண்டும் ஊரோடு கூடவும் உரிமையுடையவர்கள் என்பதால் இரட்டைக் குடியுரிமைப் பெற்றிருந்தனர் என்ற செய்தி தெரியவருகிறது.

முதலாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்த ஐந்து கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் அவனது மகன் முதலாம் இராஜேந்திரசோழனின் மெய்க்கீர்த்தியைத் தொடர்ந்து, அவனது 6-ஆம் ஆட்சியாண்டில் - இராஜேந்திரசிம்ம வளநாட்டுக் குறுக்கை நாட்டு பிரம்மதேயம் கடலங்குடிபால் திருவெருதுபாடி மகாதேவர் இறையிலி நிலங்கள் கல்லில் வெட்டியது- என்று கூறி மேற்கூறிய 5 கல்வெட்டுகளும் வெட்டப்பட்டுள்ளன. எனவே அதுவரை இராஜ ராஜன் காலத்தில் செய்யப்பட்ட தானங்கள் குறித்த ஆவணங்கள் கல்லில் வெட்டப்படாமல் இருந்திருக்கின்றன எனத் தெரிகிறது.

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் இராஜேந்திரசிம்ம வளநாடு என்ற புதிய நிர்வாகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதன் கீழ் குறுக்கைநாடு செயல்பட்டிருக்கிறது. ஊரின் பெயரும் கங்கைகொண்ட சோழச் சதுர்வேதிமங்கலம் என்று மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் இராஜாதிராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு பிரம தேயம் கடலங்குடியான திருஎருதுபாடி மகாதேவர் என்றும் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் விருதராஜ பயங்கர வளநாட்டுக் கங்கைகொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்துத் திருவேழ்விக்குடி மகாதேவர் என்றும், விக்கிரமசோழன் காலத்தில் நல்லாற்றூர் நாடு பிரமதேயம் பூலோக மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்றும் அழைக்கப்பட்டதைக் காணமுடிகிறது.

திருவாவடுதுறைக் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர் அழகவிடங்கன் உய்ய வந்தானான ஞானசிவர் என்பவர், இவர் இவ்வூரில் நிலம் விலைக்கு வாங்கி ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார். இவர் எடுத்த கோயிலின் பெயர் திருக்கேதாரம். மன்னனின் குலத்துக்கும் உடல்நலனுக்கும் பூஜை செய்பவர் இவர் என்பதையும் கல்வெட்டொன்று கூறுகிறது.

திருவேள்விக்குடி மகாதேவர் கோயிலில் அமைக்கப்பட்ட பல திருவுருவங்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் உள்ள ஆடவல்லான் செப்புத்திருமேனி (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) உலகப்புகழ் வாய்ந்தது (அட்டைப்படம்)

ஆத்தூர்க் கோயிலில் இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு பிரமதேயம் ஸ்ரீராஜநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்ற இந்த ஊரின் பெயரும் வளநாட்டின் பெயரும் முதலாம் குலோத்துங்கனின் பெயர்கள் என்று தெரிகிறது. ஆனால் முதலாம் குலோத்துங்கனின் ஒரு கல்வெட்டுக்கூட காணப்படவில்லை. இறைவனின் பெயரும் கோயிலின் பெயரும் 'திருவிடைத் திட்டையுடையார் கோயில்' என்று வழங்கப்பட்டதைக் காணமுடிகிறது. க.எண். 10ல் மட்டும் குறுக்கை நாட்டு ஆற்றூரான ராஜநாராயண சதுர்வேதிமங்கலம் என்று இவ்வூர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாகவும், தேவதானமாகவும் கொடுக்கபட்ட நிலங்கள். இச்சதுர்வேதி மங்கலத்தினின்றும் வேறுபிறிந்து இராஜராஜன் மத்தளங்குடி என்று அழைக்கப்பட்டிருந்ததைப் பெரும்பான்மையான கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள கல்வெட்டுகளின்படி இந்த ஊரின் பெயர், இரண்டாம் இராஜராஜன் காலம் முதல் இராஜராஜன் மத்தளங்குடி என்று அழைக்கப்பட்டது எனலாம்.

கல்வெட்டு எண் 10, 13 ஆகியவை மன்னனின் நேரடி ஆணையைக் குறிப்பதால், கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்குகின்றன. அக்கல்வெட்டுகளிலும் இராஜராஜன் மத்தளங்குடி என்ற பெயரே காணப்படுகிறது.

இவ்வூர்ப்பிடாகை கானூரில் அபிமுக்தீஸ்வரர் கோயில் இருந்ததையும், சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவராகிய முதலாம் குலோத்துங்க சோழனின் 16-ஆவது ஆண்டு நிகழ்ச்சியையும் க. எண். 10 குறிப்பிடுகிறது. இவ்வூர் நிலங்களிலிருந்து வரும் வருமானங்கள் செவ்வாரம், மேல்வாரம் என்று பிரித்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இந்த வாரங்களின்படி நெல்லை வாரியப் பெருமக்களின் இலட்சினையின்படி அளக்க வேண்டும் என்று க. எண். 1 தெரிவிப்பது சுவையான செய்தி.

கல்வெட்டுகளில் அடிமைகள் பற்றிய அரிய கல்வெட்டொன்று உள்ளது. மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்தில், தன் காலத்திலும் தன் தந்தை மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் அவருக்கு முன்னர் ஆட்சிபுரிந்த இரண்டாம் இராஜாதிராஜன் காலத்திலும் விலைக்கு வாங்கிய அடிமைகள், மற்றும் தானமாகப் பெற்ற அடிமைகள் என நூறு பேரின் பெயர்களும் அவர்களின் உறவுமுறைகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. இக்காலத்தில் குடும்பம் குடும்பமாகத் தங்களை அடிமைகளாக விற்றுக்கொண்டது ஏன் என்பது சமூக இயல் ஆய்வாளர்களைச் சிந்திக்க வைக்கும் கருத்தாகும்.

இவ்வூரிலுள்ள குறிப்பிடத்தக்க பிற கல்வெட்டுகள் விஜயநகர மன்னர்களின் காலத்தைச் சார்ந்தவை. வலங்கை 98-ம் இடங்கை 98-ம் தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு செயல்பட்ட விதம் பற்றி க.எண். 15 கூறுகிறது.

மன்னர் கிருஷ்ணதேவராயர் விஜய யாத்திரையாக. விஜயநகரத்திலிருந்து தெற்கே வருகையில் சோழ மண்டலத்திலுள்ள சிவ, விஷ்ணு ஸ்தானங்களுக்குக் கொடையளித்தது பற்றி க. எண்:16 கூறுகிறது.

மேலப்பாதி என்ற ஊரில் சில கல்வெட்டுகளே காணப்பட்டாலும் அவை வரலாற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற தலைசிறந்த கடமையை நமக்குத் தெரிவிப்பதாகவும் உள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் இருந்ததால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கோயில் திருப்பணி செய்யப்பட்டபோது அழிந்துபோன கற்களை நீக்கிவிட்டுப் புதிய கற்களைச் சேர்த்துக்கட்டினர். இதனைப் பின்வரும் சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில் இக்கல் அழிவு என்று குறிப்பிட்டதோடு கற்களை அடுக்கும்போது கல்வெட்டின் தொடர்ச்சி அற்றுப்போய்விடக்கூடாது என்று ஒவ்வொரு கல்லிற்கும் தமிழில் எண்கள் இடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது (படம் - 11)

இம்முன்னுரையில் கூறப்பட்டவை தவிர இன்னும் ஏராளமான வரலாற்றுச் செய்திகள் இத்தொகுதியிலுள்ள கல்வெட்டுகளில் பொதிந்து கிடக்கின்றன. ஆய்வாளர்கள் படித்தறிந்து பயன்பெறுவார்களாக.

# உள்ளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | சோழமாதேவி | .... | 1 |
| 2. | காருகுடி | .... | 33 |
| 3. | துவாக்குடி | .... | 43 |
| 4. | திருச்சிராப்பள்ளி | .... | 44 |
| 5. | கீழ்க்குறிச்சி | .... | 48 |
| 6. | குண்டூர் | .... | 49 |
| 7. | நாவலூர் குட்டப்பட்டு | .... | 54 |
| 8. | வடசேரி | .... | 55 |
| 9. | காளியாம்பட்டி | .... | 57 |
| 9. | பழூர் | .... | 59 |
| 10. | ஆமூர் | .... | 61 |
| 11. | இனாம் குளத்தூர் | ... | 62 |
| 12. | நாகை நல்லூர் | .... | 63 |
| 13. | தேவிமங்கலம் அக்கரைப்பட்டி | ... | 64 |

**நாகப்பட்டினம் மாவட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவேள்விக்குடி | .... | 65 |
| 2. | ஆத்தூர் | .... | 154 |
| 3. | மேலப்பாதி | ... | 193 |
| 4. | நல்லாடை | ... | 198 |
| 5. | கொறுக்கை | ... | 202 |

# SUMMARY

## Thiruchirappalli District

**Cholamadevi**

Pages 1 to 32 Sl. Nos 1/1990 to 15/1990

Summaries of fifteen inscriptions of Kailāsamudaiyār Temple at Chōḷamādēvi of Thiruchirāppalli Taluk and District are given. All the records are in Tamil language and script, few are written with some Grantha words. [see the text] King's name, Regnal year and Historical year are only given below.

1/1990 Rājēndra chola I - 3rd regnal year - 1015 A.D.

Mentions a gift of 10 cey of cultivable land for celebrating the seven days annual festival during the month of Cittirai in the temple of Kailāsamudaiyār at Chōḷamādēvi-catur-vēdimaṅgalam, a brahmadeya in Pāndi Kulāsani Valanāḍu on the Southern bank [of the river Kaveri]. The Sabha of the village agreed to pay 15 kalanju of gold towards the annual lease cost of above said land. The assembly decision was taken in the temple complex.

2/1990 Rājarāja chōlā I - 8th regnal year - 993 A.D.

Records the formation of a flower garden by Ēran Kūttan a arbitrator of Chōḷamādēvi Chaturvēdimaṅgalam to the deity of Kailāsamuḍaiyār temple, for making garlands with varieties of flowers. The system of irregation and channels are also mentioned in detail.

3/1990 Rājarāja chōḷa I - 15th regnal year - 1000 A.D.

Records an order issued by the Sabha members of chōḷamādēvicaturvēdi maṅgalam, a brahmadēya village in Southern bank (of river Kāveri) after having discussion at the Brahmasthānā named Rājarājan, constructed in the centre of the village, to the Vaishnavite group of men called Vaikanasas who had being done the worship in the temple of Sri VīrachōlaVinnagar Alwar with the allotment of 24 shares as Archanābhōga. The order contains, the Vaikānasas have to pay 1/4kalanju of gold for each and every share in one crop, the total amount of gold was 12 kalañju per year. And for the 12 kalanju of gold 120 kalam of paddy was collected [as interest]. The rice for food offerings daily in the three times used from the total amount of paddy to the deities of Alwar, Sridevi and Bhudevi in the temple of Sri Virachōla vinnagara Ālwār. If they have failed to do, they must be punished by the governing body of the village administration.

4/1990 Rajaraja chola I - 26th regnal year - 1011 A.D.

Registers the gift of land as Uvachchapuram to the musicians who mute music instruments, to make the five kind of music called Panchamahā sabdha in the temple of Naḍuvil Srikōyil, a Vishnu temple in the name of Sri Virachola Viṇṇagar and the Sri Kayilāsa muḍaiyar, a Siva temple in this village, by Sabha members of the Brahmadeya village Chōḷamādevi chaturvēdi mangalām, in Pāndy Kulāsani Valanāḍu of Southern Bank [of the river Kaveri]. The decision has been made by the Sabha members, after having deliberation at ṭhe watershed called Rājarajan in the north of the Village. According to it lands were given in the South and northern hamlets of this village. It is said that the music performance should have taken place in both the temples by the musicians with the instruments like Karaḍigai, Maththaḷam, Sanku and Kālam.

5/1990 Rajaraja Chola I - 13th regnal year - 998 A.D

Records a gift of tax free land to the four musicians of this village to mute [drums] in the temple of Sri Kailāsamuḍaiyār, in the Brahmadēya Village, known as Chōlamādevi chaturvēdimangalam, belongs to the Pandi Kulasani Valanadu, on the southern Bank [of the river Kaveri] by the Sabha members of the same village. The instrumental music should be performed by the musicians in the temple without fail. If they failed to do their duty, they should have to offer oil of such specified quantity to the temple on that day.

6/1990 Rajaraja Cholā I - 8th regnal year - 933 A.D.

It is stated that Parāntakan Āditta pidari, a Queen of Virachōla Ilangōvaraiyar [a chief of Kodumbalur[] donated gold to the Sabha members of chōlamahādēvi chaturvēdi-mangalam, a brahmadēya village, on the southern Bank, for the performances of showing Valour [மெய்க்காட்டுதல்], infront of the deity of SriKayilāsamuḍaiyār, during the worship of prasasthi, at the days of Aviṭṭa nakshatra in every month.

The total interest of the gold was calculated and one kalanju of gold should be given to the person who performed this meykkāttu during the pooja and rest of the gold should go to the chaturvēdi bhaṭṭās of this village.

It is mentioned that if the performance of meykkāttu does not occur, the gold should not be given for it to that person.

7/1990 Rajaraja Chola I - 13th regnal year - 998 A.D.

Registers the gift of seven shares to the persons [Sri koyiludaiyar] those who are perftorming the duty of worship in this temple, by the temple Sṭhānapathys [Temple authorities]. The decission has been taken by the Mahasabha members of the Choḷamadevi chaturvedimangalam after having the discussions with them at the big ambalam called Rajarajan. According to that decission the person

who received the gift should do the worship to the goddess Umabhattarki of Sri Kailasam with the food offerings of rice. a side dish [Kari] ghee, curd and arrecanuts. The tax called irai, which was levied for that seven shares is said to be paid by Sabha members of that village.

8/1990 Rajendra chola I - 2nd regnal year - 1014 A.D.

Records a gift for burning a Sandhi lamp to the deity Paramēsvara in the temple of Sri Kailāsam by certain .... Sattan Nilakanda ..... It is unable to find out what kind of donation was made since the portion of record is highly damaged. Those who were performing puja in the temple called Sri Koyiluḍaiyar, took the responsibility to burn this Sandhi lamp in this temple of Sri Chōḷamādēvi caturvedimaṅgalam, a brahmadeya village in Pāndi Kulāsani valanāḍu of Southern bank [of the river Kaveri].

9/1990 Vira Rajendra Chola - Regnal year lost - 1063-70 A.D.

The first two lines are the eulogy of the king in sanskrit language and it follows with usual Tamil prasasthi which Commenes with, "Veerame thunaiyaaga".

A particular philosophical work was carried out and expounded in the village by its assembly. That work [Since it is unknown] was called Prathīpikam alias Vārthikam written by certain Chidānanda Bhatārar. That Prathīpikam is mentioned a commentary work on Sārīraka Bhāshyam, which is also a pāthēyam [Bhashyam] written by the Bhagavath i.e. the great Ādi Śankara.

This record reveals a land grant by the assembly of Chōlamādēvi Chaturvēdi mangalam, a brahmadēya village in Pāndikulāsani Valanādu, on the southern bank, after the assembly met and had deliberation for the scholarly person who had been expounding the work of Chidanandha Bhaṭārar at the courtyard of the Thirumādhiruñjōlai Ālwār temple of this same village.

10/1990 Rājendra chola I - Regnal year Lost - 1012-1044 A.D.

This record belongs to the period of the Chola king Rajendra chola I and begins with his eulogy 'Thirumanni Valara' etc. This record seems damaged in some portions. Registers the decission taken by the Sabha of Chōlamādēvi chaturvēdi mangalam, regarding the additional lands to be given to the teachers who were explaining such subjects and of the expenses for the oil to burn the lamp. It is stated that the taxes of the lands will be paid by the Sabha itself. All the Sabha members have signed at the end of the record.

11/1990 King's name and regnal year are lost - 10th century A.D.

The beginning and end of the record are lost. States that the musicians a group of fourteen persons have to mute [The instruments] during the pōja performances of three Sandhis [times], ardha yama puja and morning awakening of god, and also at the other occassions of Sankranthis [first day of the every month], Grahanas [both solar and Lunar eclipses] and sacred marriage days [of the deities]. If they fail to do so, the temple administration will have to collect paddy as fine and deposite it to the temple treasury. Since, the record is found without beginning ānd end, it is unable to know to which temple these arrangements belonged. Since the term ,'tirukkalyānaṅgal'' [The sacred marriages] occurs we can infer it might be the Naduvil Srikoyil. i.e. Vishnu temple of the village.

12/1990 Rajendra Chola I - 20th regnal year - 1032 A.D.

Incomplete. The eulogy of the King alone is preserved. Rest of the record is lost.

13/1990 Rajendra chola I - 7th regnal year - 1019 A.D.

The inscription of Rajendra chōla I consists of three bits. Few portions only are restored and the major portions are missing. Mentions that the Mahasabha undertook some activities of Village administration at the instance of Siṛṛaiyur Uḍaiyān, who was a special officer for tax collection. The Brahmadeya Sabha of this village might have had many committees called variyams to look after the different subject of Administration. One among them was Āṛṛuvāriyam i.e. River committee which is referred to in this record. [See No: 14]

According to the 'Thiruvānai', i.e. the order of the King, the persons who have worked in the River - Committee for a one year term, they should not contest for a post in the same Committee for another five years. So the above mentioned special officer must have been present at the Sabha meetings as a royal representative who brought the order of the King.

14/1990 Rejendra Chola I - Regnal year lost - 11th century A.D.

Records the decision taken by the village assembly at the meeting about the restriction of the appointment of the Ūṛ-vāriyam [village committee] and Uyyakondan Āṛṛu-variyam [River Committee], according to the royal order at the instance of certain Siṛṛaiyur Uḍaiyān, as special officer for tax collection. It is also told that the royal order was executed after the decision of the assembly is found annulled. The arbitrator of this village has signed at the end of this document. This record in two bits commences with 'Thiru Manni Valara' etc. the eulogy of the king.

15/1990 Rajaraja chola I - regnal year lost - 10th century A.D.

This damaged fragment inscription belongs to the Chola king Rajaraja I. It commences with his eulogy. Mentions an ornament named Pattam weighing six Kalanjus of gold.

**Karukudi**

Pages 33 to 42 Sl. Nos. 16/1990 to 20/1990

Summaries of five inscriptions of Thirukkayilasanathar' temple at Karukudi, Musiri Taluk, are given. All the records are in Tamil Language and Script.

16/1990 Hoysala Vira Ramanathadeva - 11th regnal year - 1254-1295 A.D.

Registers the sale of village Uranthai alias Vira Chōḷanallur to the temple accountant on behalf of Sri Kailāsamuḍaiyār temple in Thirukkārikuḍi alias Vikrama Chōlapuram, by certain Sri Rāmanchakravarti, the agent of Somaiya Dannāyaka [Daṇḍa nāyaka] a commander of the Hoysaḷa King Vīrarāmanātha.

17/1990 Kings name lost - Sakā 1541 - 1619 A.D.

Gift of land to the temple in the name of temple accountant by certain Immadi Rāmachandra Nāyakkar.

18/1990 - 12th Century A.D.

States that this village came in to existence in the name of Thirukkārikkuḍi on the day of asterism Rēvati.

19/1990 Vīra pandya - 22nd regnal year - 1318 A.D.

Registers the gift of village Uṟṟakkarai alias Aḻakiya Kutta nallur, to the temple of Kailāsamudaiyār at Thirkkārikuḍi alias Vikramachoḻapuṟam, as taxfree dēvadāna, for daily offerings and the special offerings on the Cittirai festival days and renovation works. The village was given to the temple accountant on behalf of the temple.

20/1990 -

Kāsi - Bodināyaka set up the image of Bhairava and provided some gift for its worship.

**Thuvakudi**

Page : 43

This inscription is found on the Sluice of a tank at Thūvakuḍi, Thiruchirappalli Taluk. Language and Script are in Tamil.

21/1990 Kutōttunga chola dēva - I 3rd regnal year - 1073 A.D.

Seems to be the sale of land to certain Ulaga Vitanga Pēraraiyan, by the members of the village sabha. The sold land might have been irrigated from the three sluces of this village.

**Thiruchirappalli**

Pages 44 to 47 . Sl. Nos. 22/1990 to 25/1990

Summaries of four inscriptions at various locations of Thiruchirappalli are given. All of them are in Tamil Language and Script.

22/1990 Found on a stone at vestry School.

Kulottuga Chola III - Regnal year not given - 12th century A.D.

It is stated that certain Nāraṇan alias Kāṛai Kaṛpagam, a chief of Vēlur Kuṛṛam, a sub division of Rājēndrachōḷa Vaḷanādu, was instrumental for the construction of this Maṇḍapa.

23/1990 Found on a rock, north side of Rock fort.

Hoysala King Vīra Somēsvara - Regnal year not given - 13th century A.D.

States that a Guru [priest] named Guru Maruḷadēvar has declared at the time of his entrance in to the underground chamber, he did not have any greed in to the landed and golden values, but only because of attaining Siddhi [Moksha] he involved in this job. So, he expressed his wish, the door of the underground chamber should not be opened by any body at any cause.

This record has been engraved at the bottom of a pair of footsteps.

24/1990 Found on a stone called Kalingu, at the confluence of the two rivers called Uyyakondan and Koraiyaru.

King's name is not given - Saka year 1711-1789 A.D.

Damaged bit inscription. Both Saka [1711] and Kali [4848] Eras are referred. The rest of the portion except this are badly damaged.

25/1990 Found on the British period mile stones, kept in the Post Office.

On the front side, it is mentioned both in English and Tamil that there is 80 miles to Madurai, and on the back side, also in English and Tamil that there is two miles from Trichnopoly.

**Kilkurichi**

Page No: 48:

26/1990 This inscription is found on a separate stone planted at the land of this village Kilkurichi. Thiruchirappalli Taluk. Language and Script are in Tamil.

King's name is not given - 11th century A.D.

Mentions that a gift of tax free lands at Senthamaraikkaṇṇanallur, to a Buddhist temple situated in Vīratāvalam.

Auspices symbols of Buddhist and trade guild are engraved in four layers. 1) umbrella in between whisks 2) Holy wheel (Dharma chakkaram) in between sword and bow and arrow 4) Holy pot in between lamps.

**Guntur**

Page Nos: 49 to 53; Sl. Nos: 27/1990 - 31/1990

27/1990 Chola King Rajakesarivarman - 19th regnal year - 9th century A.D.

Summaries of five inscriptions of this village is given. This record is found on a sluice at the bank of a tank in Guntur, Thiruchirappalli Taluk.

Mentions that this sluice was constructed by a architect called Māran Kuvāvan of Guṇṭūr village.

28/1990 Found on the pedestal of Iyyanār sculpture of this village.

King's name is not given - 9th century A.D.

Mentions that this image was gifted by Māran Kuvāvan of Peruṅguṇdur village.

29/1990 Found on a stone slab lying on the bank of a tank.

King's name is not given - 12th century A.D.

Mentions a road namely panpa[rai]yār Vaḻi was caused to made by Vēṭṭai Viccātirar.

Crescent and leaf shaped arrows are engraved below this inscription.

30/1990 Found on a stone slab at the land of Kalattu mēdu.

King's name is not given - 16th century A.D

Mentions a gift of land Nayinar Nambi by one Soundrapathi Nayakkar as Bhaṭṭa Vṛitti. The figures of sun and moon engraved in a line drawing at the top of the stone.

31/1990 Found on a stone slab infront of the Vellala Gaṇda Iyyanār temple.

King's name is not given - 17th century A.D.

Mentions a gift of land as sarvamanya by group of people known as Āvanamār and others.

**Navalur Kuttappattu**

Page No: 54

Only one inscription copied from a pillar of a sluice in the tank of this village, Thiruchchirappalli Taluk.

32/1990 Records the word Pathrē Ālam, and the number 1166, which refers the higiri era written in Arabic script, equalent to the christian era 1746 A.D.

Pathri means full moon
Ālam means world

The word is engraved below the higiri era and a bas relief of full moon is embedded below the two.

A person named Pathrē Ālam might have done the services of setting the stones for the construction of this sluice.

**Vadacheri**

Page No. 55 Sl. No. 33/1990 to 34/1990

Summaries of two inscriptions of Vadacheri, Trichirapalli Taluk are given. Language and Script are in Tamil.

33/1990

This inscripiion is found on a hero stone under the tree on the road leads to Vadacheri. Name of the King is not given -10th century A.D.

Records that it is the place, where the hero Sri Koṟṟampūdi, who lost his life, when he ran behind the cattle to save them from the riots. The name of the hero indicates that he was belong to the line of Irukkuvēl chief of Koḍumbālūr.

34/1990 This record is found on a stone in the bank of the tank

Kulōttunga chola I - 8th regnal year - 1178 A,D.

Records the gift of land, irrigated from a tank by Kanda Sattan Virachola peraiyan.

The imprecatory portion is also seen in this record, that the sin of destroying a tank would be fall on those who abolish this charity. So this gift might have been made for the maintenance of the tank.

**Kaliyampathy**

Page No. 57 to 58 Sl. Nos. 35/1990 to 36/1990

Summaries of two inscriptions from kāliyampatti, Thuraiyūr Taluk are given.

This inscription is found on a stone in front of the Amman temple near Naththakkādu

35/1990 King's name is not given - 10th century AD.

It is a slab inscription. Contains nine lines, in which the first 6 lines are in Sanskrit with grantha script, and the last 3 lines are in Tamil language and script. The Sanskrit portion is a eulogy of the Merchantile community and the Tamil portion mentions that a corporate body of Ayyappolil Aññurruvar were the sons of the goddess Sri Batāraki, i.e. Kāli.

Above the record there are some symbols of that community. At the centre a pedlar's sack is seen and both sides of it are pinackle and lamp embeded. Then spear, shield, sickle, spring sickle are seen.

36/1990 This inscription is found in the samē place

Rajaraja chola III - 22nd regnal year - 1238 A.D.

States that the village Kandārrur, situated in Mel Valluvappādinādu has become under the administrative body called Srikaranattār, since from the date of 22nd regnal year of the King i.e. 1238 A.D. The accurate astronomical data of the day is also given. And the name of the village also has been changed as Srikarananallur.

**Palur**

Page No : 59

This inscription is found in a stone at the bank of a tank, belongs to the temple of Ērīsvaraswāmy of this village in Mannachanallur Taluk

The language and script are in Tamil.

37/1990 Name of the King is not given - 1742 A.D

Records the gift of the yielding from the coconut trees planted in the flower garden to the Eswaran temple by certain Ramakrishnan, son of Thangamuttā pillai

**Amur**

Page No : 61

Copied from a sluice of North bank of river Kaveri, at the high road of Amur, Musiri Taluk.

38/1990 Name of the King is not given - A.D. 1879

Refers the construction of a Sluice [on the northern bank of the river Kaveri?]

**Inam Kulathur**

Page No : 62

This inscription is found on a pillar, under the tree of Pillaiyar temple which is situated in the eastern side of this village, Thiruchi rappalli Taluk.

Language and script are in Tamil

39/1990 Name of the King is not given - 10th century A.D.

States that this stone called 'Thalainnaḻi' was planted by certain Nambi Kiḻaththiyar of Uṟathur Kuṟṟam.

**Nagainallur**

Page No : 63

This record is found in a slab stone under the tree at the bank of a Tank. Language and script are in Tamil.

40/1990 Name of the king is not given 10, 11th century AD.

It is an incomplete slab inscription. The corporate bodies of traders one are mentioned. i.e. Koṟṟavan ko muṉṉuṟṟuvar - means three hundred people of the king. [might be the body guard of the King] and another group of Imperunkulu which was higher than the former

At the bottom of this record there are 11 symbols engraved, such as horse goad, conch, sickle, spring knife spear, bow and arrow and pruning-knife.

**Devimangalam Akkaraippalli :**

Pege No : 64

41/1990 Kulottunga chola III - 20th regnal year - 1198 A.D.

This inscription is found on a natural rock at the bank of a tank in this village, Lalgudi Taluk.

States that this tank was repaired by Kulottunga cholaVanavaraiyan, which had been unused for ā long time. The work was carried out by certain Kodum pavanan Thyāgavinōda velan The Bank was also called as Añjātha perumāḷ might be the name of Kulottunga chola Vanavaraiyar, It is to be noted that the later also had the title 'talaikonda'.

## Nagappattinam District

**Thiruvelvikkudi**

Page Nos : 65 to 153; Sl. Nos : 1/1997 to 52/1997

Summaries of 52 inscriptions of Manavālēsvarar temple at Thiruvēlvikkuḍi, Mayiladuthurai Taluk. Language and Script of all the inscriptions are in Tamil. Grantha Script is also used in some of the inscriptions.

1/1987 Vikramachola - 4th regnal year - 1122 A.D.

Records the sale of land as tax free to the temple of Thiruvaduthuṟai by the assembly of Bhūlōkamānikka chaturvēdimangalam, which assembled at the temple of Tiruvelvikkuḍi. This land was sold for feeding the Apurvins, who used to come to the temple for worship and the Māhēsvarās in the temple of Tirukkēdāram, which was erected by Gñāna siva The price [90 kasu] being inclusive of the amount to be remitted in lieu of the land tax.

It is said that this dharma has to be protected by the Gnānasivā, his successors and the Māhēsvarās who come forward with the intension to do it.

2/1997 Vikramacōhḷa - 4th regnal year - 1122 A.D.

Records the sale of land to the temple of Tiruvavaḍuturai in the name of Ādichandēsvara by the assembly of Bhūlōkamānikka chaturvēdimangalam, which assembled at the temple of Tiruvēḷvikkudi. This land was purchased for installing

a Sivalinga in the name of Tirukkēdara Isvaramudaiyār by Alagavitangan Uyyavanthān alias Gñānasivar of Pundi in Paravainadu of Rājarājavalanādu.

Also mentions that the assembly received 20 Kasu from Gñānasivar and made the land as taxfree and he was permitted to erect a temple, Courtyard, flower garden, Tirvmadaivilāgam and watertank etc. in this land.

And this taxfree land should be enjoyed by Gñānesivā, his successors and the Māhēswarās who come forward to look after the temple in the future. The members of the assemply have signed at the end of this record.

3/1997 Name of the king and regnal year are last - 11th century AD.

6. பெரும் குழுவுக்கும் செங்
7. . . . . ஞ்க்குஅவ
8. . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | திருச்சிராப்பள்ளி | ஆட்சி ஆண்டு : | 20 |
| வட்டம் : | லால்குடி | வரலாற்று ஆண்டு : | கி.பி.1198 |
| ஊர் : | தேவிமங்கலம் அக்கரைப்பட்டி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | — | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஏரிக்கரையில் இயற்கையாய் அமைந்த பாறையில் காணப்படும் கல்வெட்டு.

குறிப்புரை : இவ்வூர் ஏரியின் கரை உடைந்து கிடந்தமையால் இவ்வுடைப்பைத் தலைகொண்ட குலோத்துங்க சோழ வாணவதரையன் என்பவன் சரிசெய்ய ஏற்பாடு செய்தான், ஏரிக்கரையைச் சரிசெய்யும் பணியைச் செய்து முடித்தவர் கொடும்பனவன் தியாகவினோத வேளான் என்பவனாவான். சரிசெய்யப்பட்ட ஏரிக்கரைக்கு அஞ்சாத பெருமாள் என்று பெயரிடப்பட்டது. இப்பெயர் குலோத்துங்கசோழ வாணவதரையன் பெயராக இருக்கலாம். மேலும் இவன் ' தலைகொண்ட' என்ற அடைமொழியைத் தன் பெயருக்கு முன்னால் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்[த்*]தி
2. கள் ஸ்ரீகுலோத்துங்க சோழ
3. தேவற்கு யாண்டு இருபதாவ
4. து தலைகொண்ட குலோத்துங்
5. க சோழவாணவதரையன் ப
6. ணியால் இக்குளம் உடைந்து இற
7. ங்கிக் கிடந்தமையில் இவ்வு
8. டைப்பு அடைத்தான் கொடு
9. ம் பனவன் தியாகவினோத வேளா
10. ன் இக்கரைக்குப் பேர் அஞ்சாத
11. பெருமாள்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1122 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 145/1926 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | விக்கிரம சோழன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் நடராஜர் சன்னதி வடக்குச் சுவர்.

குறிப்புரை : பூலோக மாணிக்க சதுர்வேதிமங்கலத்துச் சபையார் திருவேள்விக்குடிக் கோயிலில் கூடியிருந்து, திருவாவடுதுறைக் கோயிலுக்கு இறையிலியாக நிலம் விற்றுக் கொடுத்தனர். கல்வெட்டு எண்: 2ல் கூறப்பட்ட ஞானசிவர் என்பவர் எடுத்த திருக்கேதாரம் என்னும் கோயிலில் கும்பிட வருகின்ற அபூர்விகள் மற்றும் மாஹேஸ்வரர்கள் ஆகியோருக்கு உணவளிப்பதற்காக இந்நிலம் வாங்கப்பட்டது. இந்நிலத்திற்கான விலையும், இந்நிலத்தின் மேல் விதிக்கப்பட்டிருக்கிற வரிகளை நீக்கித் தருவதற்காகவும் சேர்த்து 90 காசுகள் கொடுத்து நிலம் வாங்கப்பட்டது. இந்நிலத்திற்கான வரிகளுக்கும் சேர்த்து காசு பெற்றுக் கொண்ட பூலோக மாணிக்கச் சதுர்வேதிமங்கலத்துச் சபையாரே செலுத்தினர். இந்நிலத்தை ஞான சிவரும் அவர் வற்கத்தாரும், முன்னின்ற மாகேஸ்வரர்களாகிய சிவனடியார்களும், இத்தர்மத்தைப் பராமரிக்கும் பொறுப்பை அனுபவித்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவற்கு யாண்டு ௪
2. ஆவது மகர நாயற்று ௨௰௫வக்ஷத்து ஷஷ்டியும் நாயற்றுக் கிழமையு
3. ம் பெற்ற அத்தத்து நாள் விருதராஜ ஹயங்கர வளநாட்டு நல்லாற்றூர்
4. நாட்டு ஸ்ரீஹஜேயம் பூலோக மாணிக்கச் சருப்பேதி மங்கலத்து மஹா ஸ

5. ஹையோம் திருவேள்விக்குடி உடையார் கோயிலிலே கூட்டங் குறை வறக் கூடியிரு

6. ந்து திருவாவடுதுறையுடையார்க்கு ஸகலவ்ரதரான ஸ்ரீவண்ணுஸூரதேவர் [க்குஇறை]

7. யிலி ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது திருவாவடுதுறையில் திருவாய் மொழிந்தருளித் திருமேனிக்கு ஸ்ரீரு

8. க்குலத்துக்கும் நன்றாக மஹாதேவரை வ[ஷி]த் திருக்கும் தவஸியர் ராஜராஜ வளநாட்டுப் பரவை ந

9. [ா]ட்டுப்(பரவை நாட்டு) பூண்டியுடையாந் அழகவிடங்க உய்யவந் தானான ஞானஸிவர் இவூரிலே திருக்கேஷாா மெ,

10. . . . . . . . . . . . . . . . , . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . , . . . . . . . , . . . . . . . .

11. ளக்கும் இக்கோயிலில் கும்பிடவஹ அவரவிஷ ஈஹேஸூரர்க்குண்ண . . . [ஞுழதளக] விஜாவிரி[தகளுக்கும்] . . . .

12. ழக்கும் நிமஹங்களுக்கும் இத்தேவர்க்கு விற்றிறையிலி செய்து குடுத் [தார் இத்தே]வர்க்காக இஞ் ஞாநஸிவர்

13. கையால் நாங்கள் விற்ற விலைப் பொருளுக்கும் இறையிலி(பெறப் பட்ட) பொருளுக்கு மணவாளன் . .

14. ஸநப்படியே கொண்ட காசு கூடு இக்காசு [தொண்ணூறுங் கைக்] கொண்டு நாங்கள் விற்று இறையி

15. லி செய்து குடுத்[த வி]லையாவது ராஜராஜ வதிக்குக் கிழக்கு இதேவர் . . விறையிலிக்குக் கிழக்குப் பூ

16. லோக மாணிக்க வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ்சதிர பாண பெருவழி

17. க்கு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

18. ஹ பெருநான்[கெல்]லையுள் திருஉலகளந்தருளின பன்னீரடிக் கோலால் பலதடியால் விளைநிலமுங் கொல்[லையும்]உ

19. ட்பட நிலம் . . தலை, ஒன்றே முக்காலே இரண்டு மாக்காணியிலு மேநோக்கிய மரமுங் கீணோக்கிய

20. கிணறு[ம்*]மனையு[ம்*] மனைப்படப்பையு[ம்*] மற்று மின்னிலங்களாலே தஞ எப்பேற்பட்ட உரிமைகளும் விற்று இறை

21. யிலி செய்து குடுத்து நாங்கள் கொண்ட [நிலத்தில்] இக்காசு தொண்ணூறுங் கொண்டு இந்நிலத்

22. துக்கு ஸ்ரீமாஹேஸ்வரர் நாங்களே யெச்சோறு[ங்] திருவாயிலில் போந்த[1] குடிமை எப்பேற்பட்ட குடிமை[ம] வ[ற்க*]ங்க

23. ளும் இறுக்கவு[ம் செ]ய்யவும் இன்னிலம் இத்தேவர்க்காக இனாந ஸிவருமிவர் வற்மத்தாரு முன்னின்ற ஊர்ஹோஸ்

24. ரருஞ் ஸ்ரீமாஹேஸ்வரரை இறையிலியே ‘கடவோமாக’[2] ஸநுஹவிப்பார்களாக ஸஂகதித்து ஆதிவராஹஸ்வர தேவர்க்கு இவ்வி

25. ....கொண்டு பண்ணி ........................... ........

26. ....... பண்ணிக்குடுத்தோம் இம்மஹாஸபையோ[. ஸத]யுள்[ளி*]ருந்து பணித்தார் [இராயூர்]

27. தொண்டயபட்டரும் இராயூர் சீராமபட்டரும் இராயூர் நாராயண பட்டரும் குண்டூர்த் திட்டை அக்குமாரபட்டரும்

28. ..சீராமஹட்டரும் வற்றலூர்ச் சக்க[ர*]பாணி பட்டரும் கிடாம்பில் புருஷோத்தமபட்டரும் அரணைப்புரத்து..

29. [ட்டரும்]...ரும் பணிக்கப் பணிகேட்டு விலையிறையிலி ப்ரமாணம் எழுதிநேன் இவ்வூர் மத்[ய*]ஸ்தந் கண்ணிறங்க..

30. ...... ஐய்யாறன் சங்கரநாராயண நெழுத்தும் இப்படிக்கு இரையூ[ர்] தொண்டய பட்டநெழுத்தும் இப்படிக்கு

31. [சீ]ராமப[ட்ட] ரெழுத்தும் இப்படிக்கு இராயூர் நாராயண பட்ட ரெழுத்தும் இப்படிக்கு வற்றலூர் ஜனநா[த]

32. பட்டரெழுத்தும் இப்படிக்கு கிடாம்பில் புருஷோத்தம பட்டரெழுத்தும் இப்படிக்கு குண்டூர் திட்டை நாராயண பட்ட

33. .......

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1122 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 144/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | விக்கிரம சோழன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் நடராஜர் சன்னிதி பின்புறம் மகாமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : பூலோக மாணிக்கச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருவேள்விக்குடி உடையார் கோயிலில் கூடியிருந்து திருவாவடுதுறைக் கோயில் ஆதிசண்டேஸ்வரர்க்கு இறையிலியாக நிலம் விற்றுக் கொடுத்தனர். திருவாவடுதுறைக் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருக்கும் தபஸ்வியாகிய இராஜராஜ வளநாட்டுப் பரவை நாட்டு அழகவிடங்கன் உய்ய வந்தானான ஞானசிவர் என்பவர், இவ்வூரில் திருக் கேத்தாரம் என்ற பெயரில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து கோயில் எடுப்பதற்காக இந்நிலம் வாங்கப்பட்டது, இந்நிலத்திற்காக ஞானசிவரிடமிருந்து 20 காசுகள் பெற்றுக்கொண்டு இறையிலி செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலத்தில் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் திருநந்தவனமும் திருமடைவளாகமும் திருக்குளமும் உள்ளிட்டு வேண்டுவன செய்து கொள்ளலாம் என்பதும் அந்நிலத்திற்கு எல்லைகளும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. இந்த நிலத்தை ஞானசிவரும், அவர் வர்க்கத்தாரும் முன்னின்ற மாஹேஸ்வரருமே இறையிலியாக அனுபவிக்கப் பெறுவார்கள் என்று வரையறுக்கப்பட்டிருந்தது. மஹாசபை உறுப்பினர்கள் இறுதியில் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணர புவிமாது வளர நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன்னிருப் பதம
2. லர் மன்னவர் சூட மந்[நி*]ய உரிமையில் மணிமுடி சூடி செங்கோல் சென்று திசை தோறும் வளர்ப்

3. ப வெங்கலி நீக்கி மெய்யறந் தழைப்ப கலிங்க மிறியக் கடர்மலை நடாத்தி

4. வலங் கோளாழி வரை யாழி நடாத்தி விரிசுடரளவு மொரு குடை நிழற்றி வீரஸிம்ஹாஸநத்து

5. கோக்கிழாநடிகளோடும் வீற்றிருந்தருளிய கோராஜகேஸரி[1] பந்மரான சக்கரவத்திகள் விக்ரமசோ

6. ழ தேவர்க்கு யாண்டு ௪ ஆவது மகர நாயற்று ஸுவா பக்ஷத்து ஷ

7. ஷ்டியும் நாயற்றுக்கிழமையும் பெற்ற அத்தத்திநாள் விருதராஜ பயங்

8. கர வளநாட்டு நல்லாற்றூர் நாட்டு ஸ்ரீஊதேயம் பூலோக மாணிக்க சரு[ப்*]பேதிம

9. ங்கலத்து உஹாஸபையோம் இந்நாட்டு திருவேள்விக்குடி உடையார் கோயில்லெடுத்துக் க

10. ட்டியிலே கூட்டங் குறைவ[றக் கூடியிருந்]து திருவாவடுதுறை யுடையார் மூலஸ்தாநரா

11. கிய ஸ்ரீவண்ணப்பாஷேவர்[க்*]கு நாங்கள் விற்றுத்[தந்த] விறையிலி ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரி

12: சாவது திருவாவ(வ)டுதுறையில் திருவாய்மொழி[ந்த]ருள திருமேனிக்கு ஞிருக்குலத்துக்கு நன்றாக இவரை பூஜித்தி

13. ருக்குந்தபஸியர் ராஜராஜ வளநாட்டு[பரவை]நாட்டு [பூ]ண்டி உடையானழகவிடங்க உய்யவந்தா

14. னான ஞாநஶிவ

15. ரிவ்வூரிலே தி

16. [ருக் கேதாரமென்]

17. னு திருநாமத்

18. தால் பரிவஷம்

19. ம ப்ரதிஷ்டை ப

20. ண்ணக்கடவ

21. ராகக் கொள்கிற

22. நில[ம்*] நாங்கள் வி

23. ற்று இறை இ

24. றுக்கத் தா[கத]

25. டைக்கும் தர

26. விறையிலி ப

27. ண்ணிக்குடுத்து ம

28. ணவாள நம்பி ஸ

29. ஹிஷியிலே இ

30. தேவர்க்காக இ

31. [ஞ்ஞான]ஶிவர்கையால் நாங்கள் கொண்ட காசு[2] உ௰ இக்காசிருபதுங் கொண்டு . . . . . ற்று

32. த்தர விறையிலி பண்ணிக்குடு[த்*]த நிலம் ஒன்றரையே யிரண்டு மாக்காணி இரண்டு மாவிநால் [பஃர]தரம் நில

33. மரைக்காணி முந்திரிகைக் கீழே மும்மாவுக்கும் கீழ்பாற்கெல்லை ராஜராஜ வதிக்குக் கிழக்கும் பூலோக ம

34. ாணிக்க வாய்க்காலுக்கு தெற்க்கும் இரண்டாத்தர[ரு] ௬ கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து இ . . . வரி

35. [இ]றையிலி நிலத்துக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை கற்பக மாணிக்க வாய்க்காலுக்கு . . , . க்கும் மே[ல்]

36. பாற்கெல்லை ராஜராஜவதிக்கு மேற்குங் கிழக்கும் இரண்டாங் கண்ணாற்று இரண்டாஞ்சதிரித்

37. து[3]க்கு கிழக்குமாக [இவ்வி]சைத்த பெருநான் கெல்லையுள் நடுவுட்பட்ட கொல்லை மி[கு]திக்குறைவுள்

38. ளடங்கத் திருவுலகளந்தருளின பன்னீரடிக் கோலாலே நிலம் ஒன்றரையே யிரண்டு [மா]க்காணிக் கீழிர

39. ண்டு மாவிலு[ம் மே] நோக்கிய மரமுங் கீணோக்கிய கிணறும் மனையும் மனைப்படைப்பையு[ம்] மடுப்பு இன்

40. னிலத்தால் வஜு வுரிமைகளும் விற்று விலைப்பொருளுக்கும் தரத் தடைக்கும் கொண்ட இறைப்பொருளுக்கு

41. மிஞ்ஞாநஶிவர் கையால் நாங்கள் கொண்ட காசு உ௰ இக்காசிருபதுங் கொண்டு விற்றுத்தர[இ]றையிலியாக ஸ்ரீகோயிலுஷிரு

42. முற்ற[ந்*] திருநஜுவான திருமடை விளாகமுஷிருக்குளமு முள்ளிட்டு வேண்டுவந செய்து கொள்ளக் கடவராக

43. இதேவர்க்கு விற்று தரமின்றி இறையிலியை வ ஜாதி . , . . நுஹவிக்கக் கடவராகவுமி நில பொத் . . . .

44. மொபூகிலுங் கணக்கிலு தரமிலியாகப் போக்கிட்டு இன்னிலத்தால் வஜு பெரு[வரி] வாசல் வரி[மற்றும் வா]யலி

45. ல் போஜு குடிமையுள் எப்பேற்பட்டனவும் நாங்களே ஸர்வாதித்தவத் இறுக்கவுஞ் செய்யவுங் கடவோமா

46. கவும் தேவர்க்காக ஸர்வாதித்தவத் இறையிலியே இஞ்ஞாநஶிவருமிவர் வற்கத்தாரு முன்னின்ற மாஹேஸ்வரருமே இ

47. றையிலியே யநுஹவிக்கப் பெறுவார்கள் இப்பரிசு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவா

48. ர்களாகவு மிப்பரிசு ஸூதித்து இந்நிலம் இஶேவர்க்கு விற்றுத்தர விறையிலி செய்து இப்ரமாணம்

49. பண்ணிக்குடுத்தோம் இவனேய் பஹஶேவர்க்கு இஉமஹாஸ[ஸ*]ஹ சொல்[லை] ஸஹையுளிருஞ பணித்தார் இராயூர் தொண்

50. [ட]ய பட்டரும் இராயூர் நாராயண பட்டரும் இராயூர் சீராம பட்டரும் குண்டூர்த் திட்டை அக்குமார பட்டரும் உறுப்புட்

51. டூர் வெண்ணெய பட்டருங் கடாம்பில் புருஷோத்தம பட்டரும் வற்றலூர் சக்கரபாணிபட்டரும் பணி

52. க்கப் பணி கேட்டு இத்[திரு]விறையிலி ஷமாணம் எழுதினேன் இவ்வூர் மலைவிதந் கண்ணமங்கல

53. முடையான் அய்யாறன் சங்கர நாராயணனெழுத்தும் இப்படிக்கு இராயூர் தொண்டயப்பட்டரெழுத்தும் இப்படிக்கு ராயூர் மிராம

54. ரெழுத்தும் இப்படிக்கு மிராயூர் நாராயணப்பட்ட(ன)ர் எழுத்தும் இப்படிக்கு வற்றலூர் ஜனநயபட்ட ரெழுத்

55. தும் இப்படி

56. க்கு கிடாம்பில்

57. வ⁻ ⁻ஷோத்த

58. [ம பட்டர் எழுத்து]

59. ம் குண்டூர்த் திட்டை

60. ட நாராயண பட்ட

61. ரெழுத்தும் இ

62. ப்படிக்கு இராயூ

63. ர் வாமந பட்டரெ

64. ழுத்தும் இப்ப

65. டிக்கு உறுப்

66. புட்டூர் வெண்

67. [ணய பட்டரெழு]

68. த்தும் உள்ளிட்

69. டார் பலரெழு

70. த்தும் இப்படி

71. அறிவார் புறவா

72. ர் பலர்ரெழுத்து

73. ம் பந்மாயே

74. பவூர இரக்ஷைக்ஷ.

---

1. பரகேசரி - என்பதற்குப் பதிலாக ராஜகேசரி என தவறுதலாக கல்லில் எழுதப்பட்டிருக்கிறது. பரகேசரி என்று கொள்ளவும்.
2. 'காசு' என்று படிக்கவும்.
3. சதிரத்துக்கும் என்று படிக்கவும்.

மாவட்டம் : நாகப்பட்டினம்
வட்டம் : மயிலாடுதுறை
ஊர் : திருவேள்விக்குடி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : சோழர்
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 11-ம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 3

இடம் : மணவாளேசுவரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை : இச்சிதைந்த துண்டு கல்வெட்டுகள் மூன்றும் ஒரே கல்வெட்டின் பகுதிகள் ஆகும் ஐஞ்ஞூற்றுவப் பிள்ளையார் மற்றும் ஆளுடைப் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் ஆகியோருக்குச் சிலைகள் எடுக்கப்பட்ட செய்தியும், அச்சிலைகளின் வழிபாட்டுச் செலவுகளுக்குத் திருநாமத்துக் காணியாக இறையிலி நிலங்கள் கொடையளிக்கப் பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு

I

1. ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ
2. . . . . . . . . . நல்லாற்றூர் நாட்டு அகரம் . . . வீரச்சதுப்பேதி மங்கலத்து . . .
3. . . . . . . . த்து வேழ்விக்குடி . . . . . . .
4. . . . . . . ஐஞ்ஞூற்றுவப் பிள்ளையார் கோயிலில் எழுந்தருள . . . .
5. . . . . . . . . . . திரு அமுதுக்கும் நம்மூர் பிடாகை மே . சவிக்
6. . . . . . க்கு வடக்குக் கருணாகர வாய்க்காலுக்கு தெற்க்கு
7. . . . இறையிலி நத்தத்து மேற்க்கும் ஊர் சே[சர்]த்து வாங்கிய நத்[தத்துக்*]கு

## II

1\. . . . . . ,

2\. . . . . . .

3\. . . . . . .

4\. . . . . நம்மூர் பாடிகாவல் காணியுடைய குலவன் சூற்றி

5\. . . . . . .பிள்ளை இன்னாயனார் கோயிலில் எழுந்தருளிவித்த . . . . .

6\. . . . பேரில் விலை கொண்டு இந்த ஆளுடைப் பிள்ளையாருக்குத் திருநாமத்துக் காணியாக

7\. விட்ட நிலம் நான் செவிடரையே யரைக் காணியும் தாங்களிவற்கு ஊர்க் கீழிறையிலியாக கு

8\. டுத்தோம் இன்னிலங்குழி நானூற்று பந்நிரண்[ட*]ரையும் நாலாவது கார் முதல் இ[வரு]க்கு

9\. நிலம் நாற்பத்தேழே சின்னத்திலே விழிக்காட்டு கொண்டு பேர் வழியே கூட்டிக் கடமை குடிமை கொள்ளக் க

10\. டவதாகவும் இப்படி சந்திராதித்தவரை இறையிலியாக அனுபவிக்கக் கடவதாகவும் சொன்னோம் இப்படி

11\. செய்க பணியால் ஊற்கணக்கு செ[வ்]ள்ள மங்கல முடையான் . . . . . . . .

## III

[1. முதல் 7 வரிகள் மிகவும் சிதைந்து விட்டன.]

8\. டையான் . .

9\. யாண . .

10\. தேவப்ப

11\. கோயில் . .

12\. சொன்ன ம . .

13\. யாலும் . . .

14\. . . . . .

15\. . . . த்து ரூ

16\. ன் படனும் . . .

17\. னாயக பட்ட . . .

18\. து இட்டு . . .

19\. த்திலே இப் . . .

20\. ஐஞ்ஞூற்று . .

21\. இன்னாயனா . . .

22\. . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | தஞ்சாவூர் | ஆட்சி ஆண்டு : | 5 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1123 |
| ஊர் : | இளாம் குளந்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 146/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| மன்னன் : | விக்கிரம சோழன் | | |

இடம் : மணவாளேசுவரர் கோயில் நடராஜர் சன்னதி பின்புறம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு எண் : 2, மற்றும் 3-ல் கூறப்பட்ட அதே ஞானசிவர் எடுப்பித்த திருக்கேதாரம் என்ற கோயிலில் பிரதிஷ்டை பண்ணின இறைவனுக்குத் திருவமுது உள்ளிட்ட நிமந்தங்கள் படைப்பதற்கும், அக்கோயிலில் கும்பிட வந்த மாஹேஸ்வரர் களுக்கு வேண்டிய செலவுகள் தொடர்பாகவும் அதே பூலோக மாணிக்கச் சபையார் நிலம் விற்றுக் கொடுத்தனர். இந்நிலமும் முன்னர் கூறியபடி இறையிலியாக வழங்கப்பட்டதால் விலைப் பொருளும் இறைப் பொருளும் சேர்த்து 61 காசுகள் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய 3 கல்வெட்டுகளும் ஞானசிவரால் எடுக்கப்பட்ட திருக்கேதாரம் என்னும் கோயில் தொடர்பாக உள்ளது. மேலும் இந்த ஞானசிவர் பற்றிக் கல்வெட்டு குறிப்பிடும்போது, ''திருவாவடுதுறையில் திருவாய்மொழிந்தருளி திருமேனிக்கும் திருக்குலத்துக்கும் நன்றாக பூஜித்திருக்கும் ஞானசிவர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது முக்கியமானது. திருவாய்மொழிந்தருளி - என்பது மன்னனின் ஆணையையே குறிப்பிடல் வேண்டுமாதலால், அரசனது நன்மைக்காகவும் அரசனது குலமாகிய சோழ குலத்தின் நன்மைக்காகவும் ஞானசிவர் திருவாவடுதுறையில் பூஜித்து வந்தார் என்பது தெளிவுள்ளது.

மேற்கூறிய நிலம் அக்கோயிலில் வேதங்களும் சாஸ்திரங்களும் ஓதுவது உள்ளிட்டவை தொடர்பாகவும் வாங்கப்பட்டது என்பதை, இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை எண் 149/1926 கூறுகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை படியெடுத்த போது இப்பகுதிகள் கிடைக்கவில்லை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்ரமசோழ தேவ
2. ற்கு யாண்டு ௫ ஆவது கந்னி நாயற்று பூவ்வறு[1] பக்ஷத்து த்ரயோதசியும் புதன்கி
3. ழமையும் பெற்ற திருவோணத்து நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு நல்லா
4. ற்றூர் நாட்டு பூலோக மாணிக்க சருப்பேதி மங்கலத்து மஹாஸபை யோம் திரு
5. வேழ்விக்குடியுடையார் கோயிலிலெ[ா]டுத்துக் கட்டியிலே கூட்டக் குறை வறக் கூடியிருந்து [திருவாவடுது]
6. றை உடையார்க்கு மூலஸ்தாநமாகிய ஆதிசண்டேஸ்வரதேவற்கு நாங்கள் விலையிறையிலி ஸம
7. ாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது திருவாவடுதுறையில் திருவாய் மொழித்தருளி திருசே
8. மநிக்கு நன்றாக பூஜித்திருக்குஞ்சிவஸூர் ராஜராஜ வளநாட்டு பரவை நாட்டு பூண்டியுடையா[ன ழ க வி]
9. டங்கன் உய்யக்கொண்டாரான [ஞாநசிவர்] இவ்வூரிலே திருக்கேதார மென்னுந்திருநாமத்தால் [சிவலி]
10. [ங்]கப்ரதிஷ்டை பண்ணின தேவற்கு திருவமு[துக]ளுள்ளிட்ட நிமந்தங் களுக்கும் கும்பிடவந்த மாஹே[ஸ்வ]
11. ர்க[ளுக்கு] ..............................................
12. ..ய..தேவற்காக இவர் கையில் திருவேழ்விக்குடி மணவாளநம்பி ஸந்நிதியிலே நாங்க
13. ள்[விலையிட்ட] பொருளுக்கும் இறையிலி செய்த இறைப் பொருளுக்கு மாக கொண்ட காசு கூ௰௪
14. இ[க்காசு அறு]பத்தொன்றுக்கும் நாங்கள் விற்று இறையிலி செய்து குடுத்த நிலமாவாது ராஜ
15. ரா[ஜவ]திக்கு கிழக்கும் பூலோக மாணிக்க வாய்[க்*]காலுக்கு தெற்கும் சொன்னவாறறிவார் தேவதான[ம்*]மாறி

16. ன நிலத்துக்கு மேக்கும் கற்பக(ம்)[மா]ணிக்க வாய்க்காலுக்கு வடக்கு மாக கிடஙூ கொல்லை யுட்பட

17. ...... மேற்படி திறப்பான நிலத்துக்குக் கிழக்கும் முற்ச்சொல்லப்பட்ட நான் கெல்

18. ..............................................................................

19. மூன்றா[ங்க]ண்ணாற்று இரண்டாஞ்சதிரத்து வடமேற்கடையக் கிடஙூ நிலத்துக்கு கீழ்பாறக் கெல்

20. லை இரா[யூர்]க் கொண்டைய பட்டன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கொல்லை [த]ண்ணீர்ப் பஙூ

21. ல்பற்றுக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை கண்டியூர்ப் பெருவழிக்கு கிழக்கு [வ]டபாற்கெ

22. ல்லை கண்ணாற்றுக்கு தெற்குமாக நிலம் நாலு மாவரையுமாகப் பல சதிரத்து[ப்பொ]த்தகப்படி

23. தடி மூன்[றி]னால் திருவுலகளந்தருளின கோலால் குழி ஆயிரத்திரு நூற்றினால் மிகுதிக் குறைவு உள்ள

24. டங்க [நிலம்]அரையே இரண்டு[மா]வும் விற்று விலை இறைஇலி செ[ய்*]து குடுத்து இத்தேவற்க்கா..

25. ..............................................................................

26. பட்டன் சந்ராதித்தவர் நாங்களே இறுக்கவும் கடவோமாகவு முற் சொல்லப்பட்ட நிம[ந்]தங்

27. களுக்கு சன்ஞூராதித்தவற் இறை(இ)யிலி [இஞாந]சிவரும் வற்க்கத் தாரும் முன்நின்ற மக்..ளும்

28. அநுஷவிக்க கடவார் க[ளாக*]வும் இப்படி கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பெற கடவார்களாக

29. வும் இப்பரிசு விலை இறையிலிப் ஷ(ர)மாணம் பண்ணிக் குடுத்தோம் இமஹாஸஜெயோ

30. ம் ஸஷையு[ள்*]ளிருந்து பணித்தார் இராயூர்[சீ]ராம பட்டரும் நாராய(ண்) ண பட்டரும் [அருளாள]பட்ட

31. ரும் குண்டூர்த் திட்டை அக்குமார பட்டரு[ம்*] அரணைப்புறத்து தொண்டைய பட்டரும் உறல்லூ[ர்]....

32. வற்றலூர் சின்

33. னையப் பட்ட[ர்*] எழு

34. த்தும் கிடாம்

35 [முதல் 37 வரை சிதைந்துவிட்டன.]

38. பட்ட[ர்*] எழுத்து

39. ம் ஆக உள்[ளி]

40. ட்டார் பலரெ[ழு]

41. த்தும் இதுப

42. ன் மாஹே [ஸ்ரீ]

43. [ர ரக்ஷை]

---

* 1. பூறுவ - என்றிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 6 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1124 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| அரசன் : | விக்கிரம சோழன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் நடராஜர் சந்நிதி பின்புறம் அர்த்தமண்டப வடபுறச்சுவர்

குறிப்புரை : இக்கல்வெட்டும் பூலோக மாணிக்க சதுர்வேதி மங்கலத்துச் சபையோரால் ஞான சிவருக்கு நிலம் விற்றுக் கொடுக்கப்பட்ட செய்தியையே கூறுகிறது. நந்தி தேவர்களை பூஜித்தல் பற்றிக் கூறப்பட்டிருப்பது சிறப்பு மிக்கது. அபூர்விகள். மாஹேஸ்வரர்கள் ஆகியோருக்கு உணவளிப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது, முழுசெய்தியையும் தெரிந்து கொள்ள முடியாதவாறு கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு [ஆ]றாவது விருத ராஜ
2. [ஸயங்கர வளநாட்டு] நல்லாற்றூர் நாட்டு பூலோ[க மாணிக்க]ச்சருப்பேதி ம
3. [ங்கலத்து மஹா]ஸபையோம் திருவேழ்விக்குடி[உடையார்க்] கோயிலில் கூ
4. ட்டங் குறைவறக் கூடியிருந்து கு°ஸ நாயற்று ஸஹஸவக்ஷத்து த்ரயோத
5. ஸியும் . . . . . . . . . . . . . .
6. . . . . . . [நாங்கள் விற்ற] இறையிலி பிரமா

7. [ணம் பண்ணிக் குடுத்த பரிசாவது திருவாவடுதுறையில்] திருவாய் மொழிந்தருள திருமே

8. [னிக்கு நன்றாக இவரை பூஜித்திருக்கும்]தபஸ்யர் ராஜராஜ வளநாட்டுப் பரவை

9. [நாட்டுப் பூண்டி உடையான் அழக விடங்க] உய்ய வந்தானான ஞான ஶிவர் . . . . . . .

10. க்கும் நந்தி தேவர்களை பூஜித்திருக்கும் . . . . . . . . . . . . . . .

11. ளுக்கும் ஐம்பத்தில் நந்திபூஜை கார்யவன் ஸபாவிஷ ஊஹேஸ்வரர் [க்குண்ண] . . . . . . . . வஹரா

12. ஷித்திவற் செல்கைக்கு இத்தேவர் திருநாமத்தால் இறையிலி செய்கை[க்கு] இஞானசிவர் தம் முன்[னி]

13. . . . . . வும் பலரிடையிலும் [தண்டிக்] கொண்டும் தேவர்களுக்கு நிலங் . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 16 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1028 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 140/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | | |

இடப் ; மணவாளேஸ்வரர் கோயில் நடராஜர் சன்னிதியின் வடக்கு ஜகதி,

குறிப்புரை : கல்வெட்டின் சில பகுதிகள் சிதைந்துள்ளன. வடகரை இராஜேந்திரசிங்கவள நாட்டுக் குறுக்கை நாட்டுப் பிரமதேயம் கடலங்குடி மகாசபையார் திருவேள்விக் குடிக் கோயிலில் ஆதிசண்டேஸ்வரர்க்கு சாலா போகமாக இறையிலி நிலம் விற்றுக் கொடுக்கப்பட்டது. இந்நிலம் திருவேள்விக்குடி இறைவன் கோயிலில் உணவுச் சாலையை ஏற்படுத்தி உணவளிப்பதற்காகவும், ஓடையில் செங்கழுநீர் பயிர் செய்து இறைவனுக்குத் திருப்பள்ளித் தாமம் சார்த்தவும் வாங்கி வழங்கப் பட்டது,

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்நி வளர . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . முறைமையிற் சூடுங் குலதநமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலை தொல் பெருங்காவல் பல் பழந்தீவும் செருவில் [சினவி இருபத்தொருகா]லரைசு களை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந் . . . . . . . . . . . . . த்தகு முடியும் பயங்கொடு பழி மிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்களப் பரும் புகழொடு பிடியிலிரட்டபாடி ஏழரை இல[க்]கமும் நவநிதிக் குலப்பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும் முதிர்படவில்லை மதுர மண்டலமுங் காமிடை [வளை] நாமனைய் கோணை

2. யும் வெஞ்சிலை வீரர் பஞ்ச பள்ளி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . காளதேசமுந் தொடுகழல் சங்கு வொட்டல் மயிபாலனை வெஞ்சமர் விளாகத்தஞ்சுவித்தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர் . . . . . . . .தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர் . . . . . வட நடுவுட் பல கலஞ் செலுத்தி சங்கிராம விஜையோத்துங்க பன்மராகிய கிடாரத்தரையனை வாகயம் பொருகடல் கும்பக் கரியொடுமி[க]ப் படுத்துரிமையிற் பிறக்கிய பெருநெதிப் பிறக்க மும்மார்த்தவநக நகர் போர்த் தொழில் வாசலில் விஜாதிர தோரணமும் மொய்த் தொளிர் புனைமணிப் புதவமு[ம்] . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

3. ண்டு ௰௬ ஆவது வடகரை இராஜேஂத்ர சிங்க வளநாட்டுக் குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயங் கடலங்குடி ஊ(ா)ஹாஸஸையோம் இவ்வூர் திருவேழ்விக்குடி சண்டேஸ்வர தேவற்கு நாங்கள் சாலா போகமாக விற்றுக் குடுத்[த] . . . . . . றுக் குடுத்த நிலத்துக்கு கீழ்பார்க்கெல்லை ஸஸையோம் ஓடை நிலத்தில் கிழக்கடைய அரைக்காலுக்கு மேற்கும் தெந்பாற் கெல்லை பாகளூர் ஸ்ரீகுமாரக்ரு[ம] வித்த[ந்*] நிலத்துக்கு வடக்கு மேல் ப[ாற்]கெல்லை பாகளூர் அச்சட்டி க்ருஷவித்தனும் தம்பிமாரும் நிலத்துக்கு பாகளூர் நடுவில் ஸ்ரீவாஸுதேவ க்ரமவித்த[ந்*] நிலத்துக்கும் கற்பக மாணி

4. க்க காலுக்கு கிழக்கும் வ . . . . . . . . . . . . . தேவற்கு விலைக்கற விற்றுக் குடுத்தோம் மக்கடலங்குடி ஊ(ா)ஹ[ா*]ஸஸையோம் இத்தேவற்குச் சாலா போகமாக இந்நிலம் சந்த்ராதித்தவற் [இறையிலி செய்து குடு]த்து இறை காவலுக்கு நாங்களித் தேவரிடை[கைக்] கொண்டு இந்நிலத்துக்கு இறையும் எச்சோறும் வாசலிற் போந்த குடிமையும் மற்றும் ஊரிடு வரிப்பாடும் செந்நீர் வெட்டி மு[ட்]டையாளும் இன்-நிலம் உழுவாரை இன் நிலத்தால் வந்த வெள்ளான் இறையு[ம்*] மற்றும் எப்பேறப்பட்டதும் காட்டாதே நாங்களே இறுப்பத[ாக], இன் நிலம் இத்தேவற்கு சாலா போகமாக வந்த்ராதி[த்தவற்] இறையிலி செய்து [குடுத்தோம்]

5. . . . . . . . . . . நெல்லு இருநாழியும் விறகுக்கு நெல்லுக் குறுணி இரு நாழிய் மிளகுப் பொடி உள்ளிட்ட கறி நாலுக்கு மிளகு ஒரு பிடிக்கு நெல்லுக் குறுணி இருநாழியும் [பாக்கு இருபதுக்கும் வெற்றி]லை எண்பதுக்கும் நெல்லு நா நாழியும் இச்சாலைக்கு வேண்டு[ம][க்க]லம் இடுவார்க்கு ஒரு நாளைக்கு நெல்லு[ழக்கும்] நாளொன்றினுக்கு ஒ

கலநே நா ந[ாழி யு] இப்படி சாலை ஊட்டுவிக்கவும் இந்நெல்லுக்கு மேல் இந்நிலம் ஏற அடை சென்[றால்] ஏறின நெல்லும் இவ்வோடை [யில்] செங்கழுநீர் இட்டு இத்திருவேழ்விக்குடி ஊஹாதேவர்க்கு திருப் பள்ளித்தாமஞ் சார்த்துவிக்க [மற்றதில்] போகத்தாலும் இப்பரிசு கலம் வளர்த்து ஊட்டுவிப்பதாக

6. வும் இப்பரிசு இச்சாலை ஸபைக் கண்காணி இட்டுக் குறைவறு

7. ப்பித்து ஊட்டுவிக்க கடவோமாநோம் இவ்வண்ணோஸ்வூர தேவற்கு

8. கடலங்குடி ஊ(ர)ஹாஸபையோம் இப்பரிசு பணியால் இவ்வூர்க் கரணத்தா

9. ன் கடிகை ஊஜ்ஞுஹன் ஒற்றியூர் பவழக்குறி[யா*] நெழுத்து இத்தநம் வஜா

10, ஹேஸ்வ[ரர்*] ரக்ஷை

த. நா. அ. தொல்லியல்துறை — தொடர் எண் : 7 / 1997

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1054 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 108/1926 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| மன்னன் : | இரண்டாம் இராஜேந்திரன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை : இராஜாதி ராஜ வளநாட்டுக் குறுக்கை நாட்டு, கங்கைகொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்துத் திருவேள்விக்குடியிலுள்ள ஆளுங்கணத்து உறுப்பினராகிய கூவாண்டான் ஆடவலான் பட்டன் என்பவன் அவ்வூர்க் கோயிலில் திருவாரூர் நம்பியின் சிலையைச் செய்து வைத்து, அச்சிலைக்குத் திருவமுது படைப்பதற்காக 30 காசுகள் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. அக்கோயில் சிவபிராமணர் சிலர் இந்த 30 காசுகளையும் பெற்றுக் கொண்டு, அதன் வட்டி கொண்டு திருவமுது படைக்கவும், இச்சிலைக்குப் படைக்கப்படுகின்ற திருவமுதினை அக்கோயில் தேவரடியார்க்கு நித்தம் வழங்கவும் ஒப்புக் கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு
2. கொல்லாபுரத்து ஜயஸ்தம்ப நாட்டி பேராற்றங்கரைக்கொ
3. [ப்பத]ாஹமல்லனை யஞ்சுவித்தவன் யானையுங் குதிரை
4. யும் பெண்டிர் பண்டாரமுங் கைக்கொண்டு விஜைய[ா*]஭ி
5. ஷேகம் பண்ணி வீரஸிம்ஹாசனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகே

6. ஸ்ரீ பகூரான உடையார் ஸ்ரீராஜேந்த்ரதேவர்க்கு யாண்டு நாலாவது ரா

7. ஜாயிராஜ வளநாட்டு குறுக்கை நாட்டு க[ங்*]கைகொ[ண்*]ட சோழச்

8. [சதுர்]வேதி மங்கலத்து திருவேழ்விக்குடி ஸபிவஸ்[ர*]ஹூ

9. ணன் [ஆதித்தன்] சாத்தநான பஞ்சவன் மாதேவி பட்டனுமி

10. வந்றம்பி தில்[லை*] நாயகநுமிவ[ந்றம்பி].......

11. பி மஞ்சநும் மாடலன் சேர சோழ பாண்டியநு[ம்*] மாடலன் ....

12. ணன் திருவேழ்விக்குடி[*]யான் கர்ணபட்டநு[ம்*] மாடல[ன்] நூற்றெண்மன்

13. பிச்சநும் ஆத்திரையன் அரங்கன் சீர் உடையானுமிவ் வனைவோமிவ் வூராளுங்கணத்

14. தாருள் கூவாண்டான் ஆடவல[ா*]ந் ஊட்டநிக் கோயிலில் எழுந்தருளுவித்த திருஆரூ[ர்*] நம்பியா

15. ற்கு ஸந்த்ராதித்தவற் நித்த நிவணம் செய்யக் கடவோமாக கல்வெட்டுவித்து குடுத்த பரிசாவது இவ[ா]

16. டவல்லாந் ஊட்டந் பக்கல் நாங்கள் கொண்[ட*] காசு முப்பதுக்குங் காசு ரீக்கு பலிசை நெல்லு ஆட்

17. டு கலமாக வஞ பலிசை..............................
..............................................................

18. க்கு ஐஞ்ஞாழியும் தயிரமுதுக்கும் பாக்கு இரண்டும் வெற்றிலை[க்கு]

19. ஞ் கறியமுதிரண்டு முப்பும்......க்குக் கூலியும் விறகுக்குமாக

20. கப்ப . ௲ முந்நாழியுமாக ௨ கு[றுணி]யுங் கொண்டு முன்நிந்றோடும் அமு

21. து சந்திராதித்தவற் நியதமும் செய்வித்து இட்டபரி[சு*]கல

22. முறை செய்வோமே சந்த்ராதித்தவற் னித்தமும் தேவ

23. ரடியாற்கு இடக்கடவோமாக கல் வெட்டுவித்து

24. [குடுத்தோம்] இவ்வனைவோம் மின்நமிவ்வனைவோம்.*

---

* 'இன்னம் இவ்வனைவோமேய்' என்றிருத்தல் வேண்டும்.

* மின்நமிவவனைவோமேய் ஸ்ரீராஜேந்திரசோழ . . . என்று வருவதால் 7-ஆம் எண்ணில் குறிக்கப்பட்டுள்ள சபையாரே 8-ஆம் எண்ணில் குறிக்கப்பட்ட அர்த்தயாம அமுதுக்கு நிவந்தம் கொடுத்துள்ளதை அறிகிறோம். எனவே இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் ஒரே கல்வெட்டாகவும் இதனைக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 27 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1079 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 108/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறச்சுவர்.

குறிப்புரை : இக்கோயிலில் உள்ள சேத்ரபால தேவர்க்கு தினமும் அர்த்தயாமத்தில் அமுது படைத்து வழிபாடு செய்வதற்கு குண்டூர் கோவிந்த கிரமவித்தன் என்பவன் முதலீடாக வைத்த 60 கலம் நெல்லுக்குப் பலிசையாக [வட்டி] வரும் நெல் கொண்டு சேத்ரபால தேவர்க்குத் திருவமுது படைக்கப்படல் வேண்டும் என்றும் இக்கோயில் தேவரடியார்களுக்கு அமுது அளிக்கப்படவேண்டுமென்றும் கூறப் பட்டுள்ளது. தேவரடியார்களுக்கு அளிக்கப்பட்ட உணவு 'நம்பிமைத் திருவமுது' என்று கூறப்பட்டதும் தேவரடியார்கள் மாஹேஸ்வரர்கள் என அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மன்னனின் 27-வது ஆட்சியாண்டில் தென் திருமுற்றத்தில் எழுந்தருளியிருந்து கல்வெட்டிக் கொடுக்கப்பட்டது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜேந்த்ர தேவற்கு யாண்டு உளஎ ஆவது தெந் திருமுற்ற
2. த்து எழுந்தருளி இருக்க ஸிஇ . . . . சேத்ரபால தேவற்கு நி
3. த்தமும் அத்தையாமமுது[1] செய்விக்க [க*]டவோமாக குண்டூர் கோவிந்த கிரமவித்தன் ப
4. க்கற் கொண்ட ௨ அறுபதின் கலம் வைசசுக்கு கலத்துவாய் அட்டு தூணி நா நா

5. ழி ௨ பலிசையால் வந்த ௨ இருபத்து இரு கலனையும் கொண்டு முந்நின்றோமே

6. [இ]ரு நாழி அரிசியும் கறியமுதும் அடய்க்காய் அமுதும் கொண்டு சந்த்ராதித்தவற் அ

7. த்தை சாமயமுது[2] [செய்விக்கக் கடவோமாக கல்வெட்டுவித்துக் குடுத்தோமிவனை வோ]

8. ம் இவர்கள் சொல்ல இக்கல்வெட்டுக்கள் எழுதினேன் மாடலன் திரு வேழ்வி

9. குடி விக்கிரமசோழ(சோழ)நேன் இவை என்நெழுத்து இப்பரிசு ஆசூாதித்த

10. வல் தேவரடியாராய் வந்த ஸ்ரீமாஹேஶ்வரர்க்கு நம்பிமைத் திருவமுது செய்விக்க ஸ்ரீமாஹேஶ்வரர்க்கு ஸ்ரவா

11. திக்க கடவோமாகவும் இந்த ஸ்ரீ கோயில் முறைசெய்வாரேய் இந்நிவஞ் செ[ய்வார்]களாக இப்பரிசு கல்வெ

12. ட்டுவித்துக் குடுத்தோம் [முந்]சொல்லப்பட்ட சிவப்ராஹ்மணரோம் இவை ப[ஞ்சவன் மா]தேவி ஸட்டன் எழு

13. த்து இப்பரிசு இக்காசும் இன்நெல்லும் கொ[ண்டு] நிவந்தம் செய்ய கடவோ

14. [ம் முன்] சொல்லப்பட்ட ஶிவ(ெ)ப்ரா[ஹ்மணரோம் இவை] [சேர]சோழ பாண்டியன் எழுத்து

---

* 1' 2 — 'அர்த்தயாம அமுது' என்று வாசித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 109/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : அமர்நீதி அன்னியூர் நக்கன் என்ற கொ[று*]க்கையைச் சேர்ந்த நிலக்கிழார் அர்த்த மண்டபத்திலுள்ள ஒரு கல்லைக் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கொ[று*]க்கையூர் கிழா
2. ன் அமர் நீதி அன்னியூர்
3. நக்கன் வச்ச கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 15 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 111/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No: 258 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை : திருவேள்விக்குடியைச் சேர்ந்த வியாபாரி வெளிநக்கன் என்பவரின் இருமகன்களான நக்கன் திருவெளியும், நக்கன் கூத்தனும் இக்கோயிலில் நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு 96 ஆடுகள் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இவ்விளக்கு இவர்களின் தந்தையான வியாபாரி வெளிநக்கனுக்காக வைத்தது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராஜகேஸரி வ
2. ந்ம[ர்*]க்கி யாண்டு ௧௫ ஆவது வட
3. கரைக் குறுக்கை நாட்டு திருவேள்வி
4. க்குடி வியாபாரி வெளி நக்கனுக்கா[க]
5. இவன் ம[க்]கள் நக்கன் திருவெளியும்
6. நக்கன் கூத்தனும் இவ[ர்*]கள் திருவே
7. ள்விக்குடி ஆள்வார்க்கு நொந்தா விள
8. க்கு ஒன்றும்* தொண்ணூற்றாறு(ம்)
9. ஆடு
10. ம் இவை வ
11. ந்த்ராதித்ய
12. ர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 12 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 982 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 112/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I vol. XIX No.312 |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | கோப்பரகேசரிவர்மன் [உத்தம சோழன்] | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : குணமலப்பாடியைச் சேர்ந்த அய்யன் மார சிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன் இருவரிடமிருந்து நிலம் விலைக்கு வாங்கி இக்கோயிலுக்கு வேண்டிய பதினைந்து கல நீரைக் காவேரி ஆற்றிலிருந்து கொணர்ந்து திருமஞ்சன நீராகப் பயன்படுத்துவதற்காகக் கொடையளித்த செய்தியும் அந்நிலத்திற்கு வடகரை குறுக்கை நாட்டுப் பிரமதேயம் விடேல் விடுகு தேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையோர் [பெருங்குறி பெருமக்கள்] அவ்வூர் மண்டபத்தில் கூடியிருந்து வரி நீக்கம் [இறையிலி] செய்து கொடுத்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர கேசரி [வஜர்க்கி] யாண்டு ]௰உ] ஆவது வடகரை கு
2. றுக்கை னாட்டு ப்ரஹ்மதேயம் விடேல் விடுகு தேவிச் சதுர்வேதி மங்கல
3. த்துப் பெருங்குறிப் பெருமக்களோம் இவ்வாண்டு கும்ப நாயிற்று
4. திங்கட் கிழமை பெற்ற திருவோணத்து நான்று இ
5. வூர் மண்டபத்தேய் பெருங்குறி இருன்து நல்லாற்றூ
6. ர் நாய[ன்] குணமலப்பாடிக் குணமலப்பாடியுடை யா

7. ன் அய்யன் மார சிங்கனான வீரசேகர மூகே

8. வந்த [வே]ளான் ..... பொன் குடுத்து விலை கொண்டுடைய நிலம் இவ்

9. வூர் . . . மேலைப் பருத்திவாய்க்காலின் மீய் சிறகில் இவன் குவண்டூர்[1]

10. மொ[தம]ச் சதுவேதி பக்கல் விலை கொண்[டுடை*]டய நிலம் இரண்டு மா இது திருவே

11. [ழ்விக்குடி] மஹா தேவர்க்கு சந்திராதித்தவல் தி[ருநொந்]தா விளக்கு ஒன்றும் இவனே பரமேஸ்வ

12. ர வாய்க்காலின் மீய் சிறகிற் பாகளூர் திருவரங்க க்ரமவித்தன் [பக்கல்] விலை கொண்டுடைய நிலம் மாகாணியும் இ

13. தேவர்க்கு திருமஞ்சனம் [நீர்குடம்] பதினைஞ்[சு*] கலம் காவேரி யினின்று[ம்] இந்நீரட்டக் கடவதாக குடுத்த நில

14. ம் மாகாணி[யே] மூன்று மாக்காணியாலும் வந்த இறைக்கு மெய் பேறபட்ட த[னைத்து]க்கும் சந்திராதித்தவற் இறையிலியா

15. க இவன் [பக்]கல் [விலை] கொண்டு இறையிழிச்சி இறையிலி செய்து குடுத்தோம் ஸபையோம் இது பன்

16. மாஹே[ஸ்வ]ர ரக்ஷை

---

* புள்ளி வைக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள எழுத்துகள் சிமெண்ட் பூச்சால் மறைந்து விட்டது.

1. குண்டூர் என்றிருத்தல் வெண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 14 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 984 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 113/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | S.I.I. vol. XIX No : 354 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |
| அரசன் : | கோப்பரகேசரி [உத்தம சோழன்] | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு எண் 11-ல் கூறப்பட்ட அதே குணமலபாடியுடையான் அய்யன் மாரசிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன். இக்கோயில் இறைவனுக்குத் தண்ணீரமுது படைப்பதற்காக வெள்ளித் தட்டம் ஒன்று கொடையளித்த செய்தியும் அத்தட்டத்தின் நிறை 30 ஈழக்காசு என்றும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பந்ம[ர்க்]கு யாண்டு ௰௪ ஆவது வட
2. கரை நல்லாற்றூர்நாட்டு குணமலப்பாடியுடையான் ஐய்யன் மார சிங்[க]னாந வீரசேகர மூவேந்த வே
3. ளான் இத்தேவர்க்கு சந்த்ராதித்தவற் தண்ணீரமுது செய்ய வைத்த வெள்ளித் தட்டம் ௧ இது ௩௰ ஈழக்
4. காசின் நிறை. இது பந்மாஹேஸ்வர ரக்ஷை*

* இவ்வரி சிமெண்ட் பூச்சால் மறைக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 7 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1059 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 137/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| மன்னன் : | இரண்டாம் இராஜேந்திரன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதி மட்டுமே உள்ளது. கல்வெட்டுச் செய்திகளைக் கூறும் பகுதிகள் காணப்படவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்கமும் கொண்டு [கொ]
2. ல்லாபுரத்து ஜயஸ்தம்ப நாட்டிப் பேராற்றங்கரைக் [கொ]
3. ப்பத்து ஆஹவ மல்லனை ஐஞ்சுவித்தருளி ஆனையு
4. ங்குதிரையும் பெண்டிர் பண்டாரமும் கைக்கொண்டு வீரஸி[ம்]
5. ஹாஸனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மரா[ன]
6. உடையார் ஸ்ரீ ராஜேந்த்ரதேவர்க்கு யாண்டு எ ஆவது
7. ராஜாதிராஜ வளநாட்டு குறுக்கை நாட்டு (க் குறுக்கை நாட்
8. டு) ஸிவப்ராஹ்மணன் மாடலன் ஆதித்தன் சாத்தனும் இக்குடித்.
9. . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 974 |
| ஊர் : | திருளேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 144/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | S.I.I vol. XIX No. 107 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரி பந்மர் [உத்தம சோழன்] | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு எண்: 11, 12-ல் கூறப்பட்ட குணமலப்பாடி உடையான் அய்யன்மார சிங்கநான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன் திருவேள்விக்குடி மகாதேவருக்கு திருவமுது செய்வதற்காக ஊர்க்கல் என்னும் நிறையால் 400 கழஞ்சு வெள்ளி கொண்டுசெய்யப்பட்ட வெள்ளித்தளிகை ஒன்று கொடையளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர கே]ஸரிவந்மற்கு யாண்டு ச ஆவது
2. வடகரை நல்லாற்றூர் நாட்டு குணம
3. லப்பாடி உடையான் அய்யன்மா
4. [ர]சிங்க நான வீரசேகர மூவேந்த வேளா
5: நேன் திருவேழ்விக்குடி மஹாதேவர்க்கு
6. சந்த்ராதித்தவர் திரு[வ*]முது செய்ய வைத்த
7. வெள்ளித்தளிகை ர் நிறை ஊர்க்கல்லால்
8. நானூற்றுக் கழைஞ்சு இது ஸ்ரீகரணத்தார் ர
9. க்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 3 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11-ம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 116/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No. 73 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்,

குறிப்புரை : திருவேள்விக்குடி மகாதேவர் மங்கல நக்கர் வழிபாட்டின்போது ஸ்ரீபலி கொட்டவும் காளமுதவும் தேவைப்படுகின்ற இரண்டு ஆட்களுக்கும் சேகண்டிகை கொட்டுவதற்குத் தேவைப்படுகின்ற ஓராளுக்கும் ஆக மூன்று பேருக்குத் தேவையான நிவந்தத்திற்கு குறுக்கைநாட்டு முருகவேள்மங்கலத்துப் சபையார் நிலமளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. அந்நிலம் கொண்டு அவர்களுக்குப் புடவை முதலுக்கும் சோறு அளிப்பதற்கும் தேவையான செலவுகள் செய்யப்பட்டன. இராஜகேசரிவர்மன் என்று கூறப்படும் இம்மன்னன் முதலாம் குலோத்துங்க சோழனாக இருத்தல் வேண்டும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேஸரி வந்ம[ர்*]க்கு யாண்டு ௩ ஆவது வட
2. [கரை இராஜேந்திர சிங்க வளநாட்டு குறுக்கை நாட்டு பிரமதேயம் முருகவேள் மங்]
3. கலத்து ஸ[பை*]ஙயோம் இ[வ்*]வூர் மஹாதேவர் மங்கலநக்கர்க்கு
4. ஸ்ரீபலி கொட்டி காளமூத இரண்டாளுக்கும் சேகண்டிகை
5. க கொட்ட ஓராளுக்கும் நிவந்த[ம்*] செய்து குடுத்த நிலமாவது ஊரின்

6. கீழூர் கரையேழுமா வென்று பேர் கூவப(ட்)டும் நிலமாவ

7. . . . .[துக்கெல்லைய் கீழ்பாற்கெல்லை இவு[வ*]ச்சர் நிலம் செங்குட்டி

8. க்கு மேற்க்கும் தெந்பாற்க்கெல்லை தேவர் அர்ச்ச[நாபோக நிலத்து]க்கு வடக்கும்

9. [மே]மல் பாற்கெல்லை வடக்கு னோக்கிப் போந வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்

10. கெல்லை பழங்காடியார் வாய்க்காலுக்கு தெற்(க்)கும் இ[ன்னான்கெ]ல்லையிலும் மக

11. பட்ட நிலமும் இவ்வூர் தெ[ன் மங்கலவீதித் தெருவுக்கு] மேற்(க்)கும் இல்ல மனையும்

12. . . . . . . [இவ்வூர் பார]தாயந் சங்கரநாராயணனும் இவந் தம்பி சங்

13. கரன் வேங்கடவனும் இவ[ர்*] [கள் கழித்து இவ[ர்*]களுக்கு ஸந்[ததியும் இன்றி செ] . . . . .

14. று காணியாய் ஸஹை னோக்க[ரரை]இவில்ல[ம]னைக்கும் கோட்டத்துக்கும் எல்லை கிழ . . . .

15. கலையமணியங் கூடத்தார் மனைக்கும் கவிணிய காளி தாமோதிரனும் காளி வேங்[கடவன் பா]

16. ரதாயந் கண்டந் காடனும் கோட்டத்துக்கும் மேற்க்கும் தென்பாற் கெல்லை கவிசியநக்க

17. நும் தம்பிமாரும் பாரதாயந் காளி நக்கனும் தம்பிமாரும் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற் செ[கல்லை ம]

18. யூஹூன் அலங்கார பிரியனும் தம்பிமா[ரும்] கோட்டத்துக்கும் இல்லத் துக்கும் கிழக்கும் வட[பாற் கெ]

19. [ல்லை தெரு]வுக்கு தெற்(க்)கும் இவிசைத்தப் [பெருநான்கெல்லையி] லும் அகப்ப[ட்*]ட நிலத்துக் கிழக்கடைய இல்

20. . . . . . [உவச்சர்க்கு] . . . . . . . . . உள்பட மேற்க்கும் . . . . .

21. ம் ஒருமா்வரைக்காணி நிலமும் இவூர் பாரசிவந்.. திருத்தி திருவிச் . . . . . . . டாததாக இ

22. ம் மூன்றாளுக்கு சோற்றுக்கும் புடவைய் முதலுக்கும் சந்திராதித்தவல் மூன்றாளுக்கும பணி செய்து உண்ணவும் பெ

23. றுவர்களாக நிவந்தம் செய்து குடுத்தோ[ம்] முருகு]வேள் மங்கலத்து ஸபையோம் ஸபைபணிக்க

24. வெழுதிநேந் இவூர் ஸ்யூஷூன் நயஸரந் நக்[கனாத] அலங்கார ஸ்ரீயனேன் இச்செயும்[ம]துக்குப் பாயும் சண்

25. டேஸ்ரீர வாய்க்காலும் இறையிலி பந்[சாலே]ஸ்ரீர ரக்ஷை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 117/1926 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIII No. 99 |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேசரிவர்மன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை : திருவேள்விக்குடியிலுள்ள நடுவில் ஸ்ரீகோயில் என்ற கோயிலிலுள்ள இறைவனுக்குத் திருவமுது படைத்து வழிபாடு செய்வதற்கு பிரமதேயம் முருகவேள் மங்கலத்து பாரதாயன் வேங்கடவன், சந்திராதித்தன் என்பவன் இறையிலியாக நிலம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. இம்மன்னன் முதலாம் குலோத்துங்க சோழனாக இருத்தல் வேண்டும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேஸரி பந்மக்கு யாண்டு
2. ச ஆவது வடகரை குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயம் முருகுவேள் மங்கல [த்து] பாரதாயந் [வேங்கட]வந் சந்திராதித்த
3. நேன் இவூர் நடுவில் ஸ்ரீகோயிலில் தேவர்க்குத் திரு[வமு]துக்கு நிவந்தம் செய்து அட்டிக் குடுத்த நில . . .
4. நிலம் மேலைப்புதூர் கிணற்று மேற்கடைய தெ[ன்வ]டக்காக ஊராரிடு கோல்க் கொ[ணர்]ந்து குடுக்கக் கிணற் . . . . . .
5. க்கும் உரித்தாக சந்திரா[தித்த*]வல் திருவமிர்துக்கு செய்து [குடுத்த] நிலம் காற் செய்[க்*]கு எல்லை கீழ்பாற்கெல்லை [பாரதாயந் வேங்கடவன்]

6. சந்திராதித்த[ன்*] நில[த்*]துக்கு மேற்கும் தென்[பாற்கெல்லை] [நக்கன்]தெற்றிக்கு நீ . . . . . பொதுவின் . . . . ,

7. [மேல் பாற்கெல்லை நக்கந் தெற்றி . . . . . . . புழவாற்றுக்கே விழுந்த வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை ஸபைப்]

8. பொதுவாந அப்பந் குழிக்கு தெற்கும் இ[வ்*]வி[சந்த]நாலெ[ல்*]லை யிலுமகப்பட்ட நிலங்காற் செ[ய்*]யாலும் இதேவர்க்கு நிசதி குறுணி[*]னாழி [அ]

9. ரிசி திருவமிர்துக்காக நிவந்தம் செய்துக்குடுத்தேன் நடுவில் ஸ்ரீகோயில் தேவர்க்கு பாரதாயன் வேங்கடவந் சந்திராதி

10. த்தநேன் இந்நிலம் இறை தவிர்ந்து இறை[இழி]ச்சிக் குடுத்தோ[ம்*] முருகு வேள் மங்கலத்து ஸபையோம் பணியால் ஊ

11. ம்ஹன் நயமரந் நக்கன்னாந அலங்[கார] ப்ரியநேந் இவையெந் நெழுத்து வயிஷ ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 6 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1218 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 120/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் இராஜேந்திரன் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபம் வடக்கு மேற்கு குமுதம்.

குறிப்புரை : பிரமதேயம் கடலங்குடியின் ஒரு பகுதியாகிய திருவெருது பாடி மகாதேவர் கோயிலுக்குச் சொந்தமான இறையிலி நிலங்களைப் பற்றிய தகவல்கள் முதலாம் இராஜேந்திர சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் இக்கல்லில் வெட்டப்பட்டுள்ளது என்றும் இக்கடலங்குடி என்ற ஊர், ராஜேந்திரசிம்ம வளநாட்டு குறுக்கை நாட்டைச் சேர்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறியுள்ளபடி இக்கல்வெட்டைத் தொடர்ந்து முதலாம் ராஜராஜசோழன் காலத்தில் அவனது 10-ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டும், 24-ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகளும் 27-ம் ஆட்சியாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகள் எண் : 18, 19, 20, 21, 22 ஆகிய ஊர்க்கல்வெட்டு எண்களில் தரப்பட்டுள்ளன.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இரு நில மடந்தையும் போற்செயப் பாவையுந் சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவியராகியற்றி இன்புற நெடுந்துயலூழியுள் இடை துறை* மண்ணைக் கடக்கமும் பொருகடல் ஈழத்தரையர் தமு[டியும்] ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியு[ம்*] முன்னவர் பக்கல் தென்ன வந் வைய்த்த சுந்தர முடியும் இந்திர[னா]ரமும் தென்கடல் ஈழம் முழுதும் எறிபடைச் சேரலன் முறைமை[யி]ல் சூடு[ங்] குல தனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர்மாலையுஞ் செங்கெதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழந்தீவு[ம்]* மாப்பெருந் தண்டாற் கொண்ட* . . . வர்க்கு யாண்டு ௬ ஆவது ராஜேந்த்ரஸிம்ஹ வளநாட்டுக் குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயங் கடலங்குடி[ப்பால்]திருவெருது பாடி(ம) மஹாதேவர் இறையிலி நிலங்கள் [கல்]லில் வெட்டியது.

---

* குறியிட்ட இடங்களில் உள்ள கற்களும் எழுத்துக்களும் காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | [20] |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. [1005] |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 120/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 18 |
| அரசன் : | முதலாம் இராஜராஜன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு மேற்குப்புற குமுதம்.

குறிப்புரை : கல்வெட்டு எண் 17 ஆகிய முதலாம் ராஜேந்திர சோழனின் 6-ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறியபடி, திருஎருதுபாடி மகாதேவர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்களைப் பற்றியக் கல்வெட்டுகள் தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகள் அனைத்தும் முதலாம் இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்தவை. தந்தை காலத்துக் கல்வெட்டுகளை தனயன் தொகுத்து மீண்டும் கல்லிலே பொறித்து வைத்துள்ளான். அவற்றுள் முதல் கல்வெட்டு இக்கல்வெட்டாகும், இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜ சோழனின் [20]ம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது இக்கல்வெட்டில் திருஎருதுபாடி மகாதேவர் கோயிலுக்கு திருநந்தாவனமாக ஏழு மா நிலம் இறையிலியாகக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்நிலத்தை ஊரார்கள் கொடுத்து அந்நிலத்திற்கு வசூலிக்கப்படும் வரிகளைத் தாங்களே இறுத்து விடுவதாகவும் உறுதியளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் [னக்கேயு]ரிமை [பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கி நாடுங் கங்கபாடியு னுளம்ப பாடியுந் தடிகை பாடியுந் குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்[கமும் எண்டிசை] புகழ்தர [ஈழ மண்ட . . . . . . ]ந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டத் தன்னெழில் வளரூழியுள் ளெ[ல்*]லா யாண்டுந் தொழுதகை விளங்கு யாண்டே செழியரைத்

தேசுகொள் ஸ்ரீகோவிராஜராஜகேஸரி பந்மராகிய ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு [உ௰]ஆவது வடகரை ராஜேந்திர ஸிம்ஹ வளநாட்டு குறுக்கை நாட்டு[க்கடல]ங்குடி உதையந் குடையான் அணி சிவன் . . . . . ன் குடி ஊரோம் இந்நாட்டு பிரமதேயம் விடேல் விடுகுதேவிச் சதுர்வேதி மங்கலத்துத் திருவெருதுபாடி மகாதேவர்க்குத் திருனந்தவானமாக எங்களில் இசைந்து ஊர் வியவஸ்தை செய்து . . . . . ரர்க்குத் திருப்பள்ளித் தாமத்துக்கு இறையிலியாகச் செ[ய்து] குடுத்த நிலன் ௨ ௪ இந்நிலன் எழு மாவும் திருநந்தவானமாகத் திருத்திக் கொள்ளப் பெறுவதாக இறையிலியாக குடுத்த நிலன் எழுமாவுக்கும் கீழ்பார்க் கெல்லை திருமணஞ்சேரி மகாதேவர் திருனந்தவானத்தின் மேலைப்பெருவழிக்கு மேற்கும் தென்பார்க்கெல்லை இத்திருவெதிர் கொள்பாடி உடையார் குளமான தவசிகுளம் . . . . இத்தேவர் நிலமா]* . . . . .

| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 46 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : மண்வாளேஸ்வரர் கோயில் தெற்கு துவாரபாலகர் அருகில்.

குறிப்புரை : கண்டராதிச்ச தெரிஞ்ச கைக்கோளப் பிரிவினைச் சேர்ந்த மூன்று பேர் மூன்று கற்களைக் கொடையளித்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. கண்டரா[தி*]ச்ச தெரிஞ்ச கைக்கோ
2. ளரில் சேவகங் கண்டன் கோ[க்க]
3. ண்டனும் ஒற்றிக் கண்டார் [வ தே]
4. ணனும் கஞ்சாறன் அண்
5. ணாவனும் இட்ட கல் ௩

த. நா. அ. தொல்லியல்துறை　　　　தொடர் எண் : 47 / 1997

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10 ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 149/1926 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 47 |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | — | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் வடபுற துவாரபாலகர் அருகில்

குறிப்புரை : தென்கரை நாட்டு ஆனிய முடையான் காரிவெப்பனாகிய கரிகால கன்ன மூத்த வேளான் என்பவன் மஹாகாளன் என்ற துவாரபாலகரைச் செய்து இக்கோயிலுக்கு அளித்தான் என்பது தெரிய வருகிறது.

கல்வெட்டு :

1. ௨ஹாகாளனை செய்வித்தான் தெந்கரை நா
2. ட்டு ஆனியமுடையான் காரிவெப்பனா
3. கிய கரிகால கன்ன மூத்த வேளாந்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 48 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் வடபுற துவாரபாலகர் அருகில்

குறிப்புரை : கண்டராதிச்ச தெரிஞ்ச கைக்கோளர்களில் ஒருவனான மாறன் சளுக்கி என்பவன் 4 கற்களைக் கொடையளித்துள்ள செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. [கண்டராதிச்ச தெரிஞ்ச]கைக் கோ
2. ளரில் மாறன் சளுக்கி இட்ட க
3. ல்லு ச

த. நா. அ. தொல்லியல்துறை    தொடர் எண் : 49 / 1997

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 150/1926 |
| மொழி : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 49 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | — | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் வடபுற துவாரபாலகர் அருகில்

குறிப்புரை : திணைக்களத் தரவு சாத்து என்ற வருவாய்த்துறையில் ஆவணம் எழுதுகின்ற பெரிய கிழவன் பட்டதேவன் என்பவன் வாசல் நிலையைச் செய்தளித்த செய்தி கூறப் பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. திணைக்களத்
2. தரவு சாத்து எழு
3. துகின்ற பெரிய
4. கிழவன் பட்ட தே
5. வன் செய்வி
6. த்த வாசல் நி
7. லை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10-ம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | கோப்பரகேசரிபந்மர் | ஊர்க் கல்வெட்டு எண் | 50 |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : ஆர்க்காட்டுக் கிழான் கொற்றன் கூத்தநான செம்பியன் ஆர்க்காட்டு வேளான் என்பவன் திருவேள்விக்குடி உடையார் கோயிலுக்கு நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு 36 ஆடுகள் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. கோப்பரகேஸரி பஹற்கு யா
2. ண்டு ச வது ஆர்காட்டுக் கூற்[ற*]த்
3. து ஆற்காட்டு கிழான் கொற்றன்
4. கூத்தநான செம்பியன் ஆ
5. ர்க்காட்டு வே[ளா]நேன் திருவே
6. ழ்விக்குடி உடையார்க்கு சந்திராதித்
7. வற் வைத்த திருநொந்தா விள
8. க்கு க ஆடு ௩௰௬ இது ஸ்ரீ க
9. ரணத்தார் ரக்ஷை[1]||

---

1. இக்கல்வெட்டு தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி XIX [எண் 108] லிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 6 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 977 |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 121/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | S.I.I. Vol. XIX No : 170 |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 51 |
| மன்னன் : | கோப்பர கேசரிபந்மர் உத்தமசோழன் | | |

இடம் : மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தென்புறச் சுவர்·

குறிப்புரை : வடகரை நல்லாற்றூர் நாட்டுப் பிரமதேயம் விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலத்து மஹா சபையார், சங்கவன் மன்றநாந நாநாதேசி எடுத்தபாத மூத்தசெட்டி என்பவனுக்கு நிலம் விற்றுக் கொடுத்தனர். அவன் அதே கரையைச் சேர்ந்த குறுக்கை நாட்டுத் திருவேள்விக்குடி உடையார் கோயிலிலுள்ள கூத்தப் பெருமாளுக்கு [நடராஜர்] ஒரு நொந்தா விளக்கு எரிப்பதற்கு நிவந்தமளித்துள்ளான். இந்த நிவந்தம் திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர் பொறுப்பில் அளிக்கப்பட்டிருந்தது.
இந்தக் கல்வெட்டு ஆவணத்தின் எழுத்துகளை மத்தியத் தொல்லியல் துறை பிந்திய தாகத் தோன்றுகிறது எனக் கூறியுள்ளனர்,

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோபரகேஸரி பந்மற்கு யாண்டு ஆறாவது வடகரை நல்லாற் றூர் நாட்டு ப்ரஹ்மதேயம் விடேல் விடுகு சது
2. வேதிமங்கலத்து ஸபையோம் விற்று நிலவிலையாவணம் செய்து குடுத் தோம் இக்கரை குறுக்கை நாட்டு ப்ரஹ்ம
3. தேயம் விடேல் விடுகு தேவிச் சதுவேதிமங்கலத்து திருவேள்விக்குடிக் கூத்த பெருமாளுக்கு திருநொந்தாவிளக்கி
4. னுக்குஆக விற்றுக்குடுத்த நிலம் வகை இவ்வெடல் விடுகு சதுவேதி மங்[க*]லத்து ஊரின் கீழ்மூர் குறியாக்குடி மங்கல

5. த்து எல்லை வாய்க்கரை அறுமாச் செய்யும் விற்றுக் குடுத்ததற்கு கீழ்பாற் கெல்லை வரம்பு[க்கு]மேற்கும் தென்பாற் கெல்லை இக் கொள்கின்

6. ற கூத்தப்பெருமாள் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை உள் சிறுவாய்க்காலுக்கு [கிழ]க்கும் வடபாற்கெல்லை குரவசேரியார்

7. கள் நிலத்துக்கு பாய்ந்த உள்சிறு வாய்க்காலுக்கும் குரவசேரியார்கள் நிலத்துக்கு தெற்கு மிவ்விசைத்த இந்நான் கெல்லையிலு

8. மகப்பட்ட நிலம் உண்ணிலம் ஒழிவின்றி [மிகுதிக்] குறைமை உ[ள்] ளடங்க இவ்....ஒரு காலாவதும் இரு காலாவது[ம்*]

9. முக்காலாவதும் விற்று விலையாவணம் செய்து குடுத்த இந்நிலத்துக்கு எ[ம்*]மில் யிசைஞ்ச..........

10. பொருள் மற்றும் ஆவணக் களத்தே....ண்டு இதுவே

11. ........ணமும் இதுவே பொரு....வோலையாவ..

12. தாகவும் வேறு பொருள்மாவறுதி[பொருள்]......[அ]ல்லாதாராகவு

13. ம் இப்பரிசு விலையற விற்று பொருளறக் கொண்டு........ணஞ் செய்து

14. சந்த்ராதித்தவற் இறையிலி செய்து குடுத்தோம் கூத்த பெருமா ........ ட்ட..ஸஹெயோ

15. ம் குறி இருந்து பணிக்க எழுதிநேன் ஊ்யூஹுன் அஞ்[ஞூற்று]வநேன் இந்நில

16. ம்கொண்டு குடுத்தேன் சங்கயன் மன்றநா......நாநா தேசிய எடுத்த பாத

17. மூத்தசெட்டியேன் இவநே திருவேழ்விக்குடி உடையாருக்கு சந்திராதி தவற் வைத்த

18. ஆட்டு விளக்கு க இஜூஉம் திசையாயிரத்தஞ்ஞூற்றுவர் பேர் இவ[ர்]* கள் ரக்ஷை

19. இங்கே கூத்தப்பெருமாளுக்கு இட்ட நிலைவிள..[வெள்]*

---

* இக்கல்வெட்டு தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி XIX [எண்.170]ல் இருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 10 – ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | திருவேள்விக்குடி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 132/1926 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | S.I.I. vol XIII No. 345 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இராஜகேசரி வர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 52 |

இடம் ; மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் தென்புறச் சுவர்.

குறிப்புரை : இக்கல்வெட்டின் முதல் மூன்று வரிகளின் இறுதியில் சிதைந்துள்ளது. இக்கோயிலுக்கு நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு 96 ஆடுகள் கொடையளிக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

கல்வெட்டு :

1. கோவிராச கேசரி வந்மக்கு யாண்டு......
2. டி உடையார்க்கு கடு[வங்]குடையா[னு]......
3. மாத்திரண்டி . ான கரிகாலக் [கன்ன மூவே]ந்த
4. வேளான் ஸஹ[*]தித்தவல் வைத்த [நொ]ந்தா விள
5. க்கு க ஒன்றினுக்கு ஆடு [கூகூ] இவை பந்மா
6. ஹேஸ்வர ரக்ஷை||

* இக்கல்வெட்டினைத் தொல்லியல்துறை படியெடுக்கவில்லை. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியிலிருந்து எடுத்தெழுப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 14 ஆவது |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1192 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | ARE 129/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் மகாமண்டபக் கிழக்கு ஜகதி

குறிப்புரை : கல்வெட்டு முழுமை பெறவில்லை. இடையிடையே சிதைந்தும் உள்ளது. மகா சபையார்க்கும் உழுகுடிகளுக்கும் விளைபொருள் மற்றும் சில நிலங்களிலிருந்து வரும் வருவாய்ப் பங்கீடுகள், உரிமைகள் பற்றியும் ஏற்பட்ட உடன்பாட்டை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்ஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் மதுரையும் கருவூரும் கொண்டருளிந ஸ்ரீகரிகால சோழதேவற்கு யாண்டு பதிநால[ாவது] விருதராஜ பயங்கா வளநாட்டுக் குறுக்கை நாட்டுப்ப....

2. ணக் கடவர்களாகவும்..க்கோலும் பயறும் செவ்வார முண்ணக் கடவர் களாகவும் கொல்லைத் தறையில் இறைநட்ட நிலத்துக்கு செவ்வார முண்ணக் கடவர்களாகவும்

3. லகத்[தரச் சொல்லாடே[தய்] மேல் வாரத்தால் வந்த நெல்லுக்கு நாங்[கடே] ளய் காசுவாங்கி இடக்கடவோமாகவும் கடமைச் சிலவு பேறும் நெய்யும் பஞ்சும் உள்ளிட்ட சிலதே

4. மட[ப]த்திலே அளந்து கொண்டு குறைவற்ப்பு எடுக்குமிடத்திலே..
கொண்ட வாரியப் பெருமகந் லெச்சினைப் படியே இடக்கடவர்களாகவும்
இவ்வரிசியும் பயறும் எடுக்கும் ப

5. ....பிறித்த நிலத்துக்கு கார்............கவும் ஏற்றம[ாக]வும்
மண்டுக்கா நட்ட நிலமும் மறுநட்ட நிலமும் ஒருநட்ட நிலமும் முன்றத்
தொன்று வராமுன்

6. ..ல்மேல் பார்த்தேய் குடுக்க கடவோமாகவும் மாவிறை முந்பு எழுதிந
நியோகப் [ப]டியே எற்றைக்கும் தவிரக் கடவோமாக பெருமாள்
கடமைக்கு காசு இடுமிடத்து தங்களை காசு வா....

7. ..ளவு கொண்ட வாரியப் பெருமகந் இ...சினைப்படியே ...இடக்
கடவார்களாகவும் [இப்ப]யறு அளக்குமிடத்து பேர்க் காலத்திலே
நாங்களேய் கைய் கொண்டு எண்ணாழியும் வழுவா ஊர்க்காலாலே அ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 15 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1193 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 130/1927 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குப்புறக் குமுதம்

குறிப்புரை : கல்வெட்டின் ஆரம்பப்பகுதி மட்டுமே உள்ளது. திருநடம்புரிந்தானான காலிங்க ராயர் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் அருமொழிதேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்தைச் சார்ந்தவன் என்பதும் அறியப்படுகிறது.

1. திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் [பா]ண்டியர் முடித்தலையுங் கெ[ாண்]டு அரு[ளிய] ஸ்ரீகுலோத்துங்]க] சோழ தேவற்கு யாண்டு ௰௫ வது இஷஊ நா[யற்]*று பூவ-உபக்ஷத்து ௨சமியும் பு[த]*ன் கிழமையும் பெற்ற அ[த்த]த்தினாள் அருமொழிதேவ வளனாட்டு வலிவல கூற்றத்து வ..ழலத்தை நாதன் திருனடம் புரின்[த]ானான காலிங்கராயற்கு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 15 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 161 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 131/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்கு ஜகதி

குறிப்புரை : இரண்டாம் இராஜராஜனுடைய 'பூமருவிய திருமாதும்' என்ற மெய்க்கீர்த்திப் பகுதியுடன் தொடங்குகிறது. வடகரை விருதராஜபயங்கர வளநாட்டு பிரம்மதேயம் இராஜநாராயண சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை உத்தரங்குடியிலிருக்கும் வெள்ளான் பனையூருடையான் வெண்காடன் மகன் பெருங்காடன் திருவுடைத் திட்டையுடையார் கோயிலில் சந்தி விளக்கெரிப்பதற்குப் பாரதாயன் நம்பியார் உள்ளிட்ட கோயிற்காணியுடைய பிராமணர் வசம் 16 காசு கொடுத்து அவர்களும் விளக்கெரித்தனர் என்ற செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூ[மருவி]ய திருமாதும் புவிமாதும் ஜயமாதும் நாமருவிய கலை மாதும் புகழ்மாதும் நயந்து புல்க அருமறை விதி நெறியனைத்துந் தழைப்ப வருமுறையுரிமையில் மணிமுடி சூடித் திங்கள் வெண்குடை திசை[க்களிறெட்டுந்] தங்கு தனிக் கூடந் தாநென [விள]ங்கக் கருங்கலி கருங்கலிப்பட்டியைச் செங்கோ[ல்] துறப்ப]ப் பொரு[ங்க]திராழி புவிவளத்துடந்வர வில்லவர் [இரட்]டர் மீனவர் சிங்களர் பல்லவர் நுத
2. லியர் பாற்திவர் பாணிய எண்ணருங் கற்பில் மண்ணகம் புண[ர்]ந்து செம்பொந் வீர[ஸிம்]ஹாஸனத்து புவனமுழுதுடை[யாெ]ளாடும் வீற்றி ருந்தருளிய கோப்பரகேசரி பற்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு பதி[னைஞ்சாவ]து சித்திரை மாஸம்

முத . . [வ]ட கரை விருதராஜ பயங்கர. வளநாட்டு ஸ்ரீஹூசேயம் ராஜநாராயண சதுவேதி மங்கலத்துப் பிடாகை உத்தரங்குடியிலிரு

3. க்கும் வெள்ளான் பனையூ[ரு]*டையாந் வெண்காடு தேவந் மகந் பெருங்காட[ன்] இவ்வூரிலுடையார் திருவுடைத்திட்டையார் கோயிலில் காணியுடைய ஸ்ரீாஹூணந் பாரதாயந் நம்பியாருந் [ஆ]ளுடையார் ராஜராஜ பட்டனு மிவந் தம்பி அவினா[சியுடையானும்] ஆத்ருயந் வை[ஶ்ர]வண[ன்] வினாயக பட்டனும் மௌதமந் இருணிக்கிய பெரிய தேவ பட்டனும் ஆத்ருயந் திருவாண்டாந் மகந் தில்லை மூவாயி [ரப]ட்டனும் காஸ்யபந் ஆளி அரைசு திருநாவுக்

4. கரைசு பட்டனும் இவ்வனைவோம் எங்களிலிசைந்த ஸந்தி விளக்குக்கு உஸயத் தீட்டு குடுத்த பரிசாவது இச்சித்திரை மாஸம் முதல் வசுாசித்தவற் திருவுடைத்திட்டையுடையார் கோயி[லி]*லே எரிக்க கடவோமாக இசைந்து இப்பனையுடைார் [பெருங்காடன்] பக்கல் நாங்கள் [கைக்]கொண்ட காசு பதினாறு இக்காசு பதினாறு . . . . யாகக் கைக்கொண்டு இத்தால் வந்த பொலிசைக்குச் சிலவாக [ஸந்தி] விளமொந்றுக்கு[1] முழாக்கெண்ணையாக வந்

5. த எண்ணைக்குச் சிலவாக இக்கோயிலிலே ஸஙிவிளக்கொன்றும் வசுாசித்தவற் எரிக்கக்க[ட]வோமாகவும் எரிக்குமிடத்து நாங்களும் எங்கள் வற்கத்தாரும் எங்கள் பக்கல் [காசு] கொண்டாரும் அவர்கள் வற்கத்தாரும் இப்படி இசைந்து ஸந்தி [விளக் கெ]ாந்றுமெரிக்க கட[வோமாக] இசைந்து உஸயத்தீட்டு குடுத்தோம் ராஜராஜ பட்டநு[ள்]*ளிட்ட இவ்வனைவோம் இத்[தீட்]டெழுதினேந் கணக்கந் ஓவாத கூத்த

6. ந் மகந் திருச்சிற்றம்பலமுடையாநேந் இவை யெ[ந்]நெழுத்து இப்படிக்கு இவை [ரா]ஜராஜ பட்டநேந் இவையெந்நெழுத்து இப்படி இவை விநாயக பட்ட[நேந்] இவை யெந்நெழுந்து அவிநாசி பட்டநேந் இவை யெந்நெழுத்து . , . இவை ஆ . . . . . . . . . . . . . . . . . . . . , . . . . . . . . . , . . . . . ஸஂஜைஞயானமைக்கு மிப்படிக்கும் தில்லை மூவாயிரபட்டநேந் இவையெந்நெழுத்து இப்படி அறிவேந்

7. ஒக்ஷிணமுத்திப் பட்டநேந்

1. ஸந்தி விளக்கொன்றுக்கு - என்று கொள்ளவும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 12 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1178 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 132/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் மகாமண்ட வடக்கு ஜகதி.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்தியுடன் கல்வெட்டு தொடங்குகிறது. ஒவ்வொரு வரியின் இறுதிப்பகுதியும் கட்டடத்துள் மறைந்துள்ளது. இக்கோயிலில் திருநுந்தாவிளக்கெரிக்க ஒருவர் வைத்த 80 காசின் பொலிசை கொண்டு கோயிற் சிவப்பிராமணர் நித்தம் உழக்கெண்ணெயால் விளக்கெரித்த செய்தி இக்கல்வெட்டால் பெறப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார்மாதரும் பூமாதருங் கலைமாதரும் அடல் சூழ்ந்த போர் மாதருஞ் [சீர்]மாதருமமர்ந்து வாழ நாற்கடல் புவி . . . . . . . . .

2. சிங்களரும் முதலாய மந்நவர்கள் திறை சுமந்து வந்தீண்டி சேவிப்ப ஊழி ஒரு செங்கோல் எழு பாரும் இந்த . . . ச்செம்பொந் வீரஸிம்ஹா . . . . . . . . . . . . . . . . .

3. ஜ தேவற்கு யாண்டு ௰௨ ஆவது கும்ப நாயற்றுப் பூவ-ஜ வக்ஷத்து த்ரயோதசியும் வியாழக்கிழமையும் பெற்ற பூசத்து நாள் ராஜநாராயணச் சதுப் . . . . . . . . . .

4. யந் ஆளுடையரான ராஜராஜ பட்டநும் அவிநாசி பட்டநும் ஆத்தி [ரைய]ந் வயிஸ்ரவ[ண]விநாயக பட்டநும் மௌதமந் இரு[ள்] நீக்கி ஆண்ட[ார்] சிவதேவபட்ட[நும்] . . . . . . .

5. சோழபட்டநும் இவனைவோம் எங்களில் இசைந்து திருநுந்தா விளக்கு எரிக்க உபய இசைவு தீட்டுக் குடுத்த பரிசாவது இற்றை நாளால் சந்திராதித்தவரை இக்கே[ா] . . . .

6. இக்காசு எண்பது[ம்] நாங்கள் நாளோகரி இட்டுக்கொண்டு முதல் இவர் தி . . நிற்க பொலிசைக்[குச்] சிலவாக நித்தம் உழக்கெண்ணை . . . திருநுந்தா விளக்குக்கு அட் . . . . . . . .

7. ம் இ உபையத்தி[ட்]டு எழுதிநேந் இத்தேவரைப் பூஜிக்கும் ஆத்திரை [யந்] ஸ்ரீநந்திகேஸ்வரநேந் இவை எந்நெழுத்து இப்படிக்கு இவை ராஜராஜபட்டந் . : . . . . . தி

8. ருநாவுக்கரசுபட்டன் ஸயிஜையானமைக்கு இவை திருக்கடவூர் திரு வெண்காடு பட்டநெழுத்து இருணீக்கிய தேவ பட்டந் ஸயிஜை[யான மை]க்கு இவை ராஜராஜபட்டநு[ம்]

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு: | 13 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1179 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 133/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் மகாமண்டப வடபுறச்சுவர்.

குறிப்புரை : இரண்டாம் இராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தியோடு இக்கல்வெட்டு தொடங்குகிறது. கல்வெட்டு வரிகள் இறுதியில் கட்டடத்துள் மறைந்தும், முடிவு பெறாமலும் உள்ளன. விருதராஜபயங்கரவளநாட்டு . . . மங்கலத்து மத்தியஸ்தன் ஆக்கனூருடையான் என்பானுடைய அகமுடையாள் அளித்த தானத்தைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த [பார் மாதரும்] பூமாதரும் கலை மாதரும் அடல் சூழ்ந்த போர் மாதரும் சீர் மாதரும் அமர்ந்து வாழ நாற்கடல் சூழ் புவி யேழும் பாற்கடல் போல புக . . . . . . . . . .

2. டி புனைந்தருளி அறுசமயமும் ஐம்பூதமும் நெறியில் நின்று பாரிப்ப தெந்நவரும் சேரலரும் சிங்களரும் முதலாயவர்கள் திறை சொரிந்து வந்தீண்டி சேவிப்ப . . . . . . . . . . .

3. நிதிருப்ப செம்பொந் வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோற் கிழாநடி களோடும் வீற்றிருந்தருளின [கோவிராஜகேசரி] பன்மரான திரிபுவநச் சக்கரவத்திகள் மருதை . . . . . . . . . . . .

4. தேவற்க்கு யாண்டு பதிந்மூன்றாவது மகர நாயற்று அபர பக்ஷத்து உமமியும் வியாழக்கிழமையும் பெற்ற விசாகத்து நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை . . . . . . . . . . . .

5. மங்கலத்து ம(த்)த்ய(ய)த்தந் ஆக்களு[ரு]*டையாந் திருப்படிக்கரை யுடையாந் குந்ததரநாந ராஜ . . முதுகண்ணாக உடைய . இவநக முடையாள் நாராயணி . . . . . . .

6. ட்டை உடையார் கோயிலில் சிவப்பிராமணக் காணியுடையார் தாயந் நம்பியா[ராந . . . டையாநான ராஜராஜ பட்ட[ரு]ம் இவ[ந்][த]ம்பி அவினாசி பட்டனும் . . . . . . . . . .

7. . . இருணீக்கியான சூரிய தேவபட்டநும் காஸ்யபந் ஆளி அரசு திருநாவுக்கரசு பட்டநும் . . . யாந் திருப்படிக்கரை உ[டையான்] பட்ட . . .

மாவட்டம் : நாகப்பட்டினம்

வட்டம் : மயிலாடுதுறை

ஊர் : ஆத்தூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 12-, 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 6

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறச்சுவரில் உள்ள தூண்.

குறிப்புரை : மிகவும் சிதைந்துள்ள கல்வெட்டு

கல்வெட்டு :

1. . . ட்டுஸ்ரீ ஹூே
2. . . . . .
3. டய நாயனா[ர்]*தி
4. நல்லூரில்
5. . . னால் எங்கள் . . .
6. . . . லச . . . .
7. . . . . இரண்டா . . . .
8. . . கயில் நே . . .
9. . . . . ாக்கானிக . . .

10. . . . ம் ஆகையில்

11. போகநம் இ

12. . . . முன் வாய்க்கா . . .

13. . . . விலை கொண் . .

14. . . . ரையும் தொ . . . .

15. . . . திருவின் மனை

16. . [கி]றுக்கன் ம . . .

**த. நா. அ. தொல்லியல்துறை** **தொடர் எண் : 7 / 1983**

| | | | |
|---|---|---|---|
| **மாவட்டம் :** | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 28 |
| **வட்டம் :** | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1206 |
| **ஊர் :** | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 122/1927 |
| **மொழி :** | தமிழ் | முன் பதிப்பு : | — |
| **எழுத்து :** | தமிழ் | | |
| **அரசு :** | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |
| **மன்னன் :** | மூன்றாம் குலோத்துங்கன் | | |

**இடம் :** ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் கருவறை வடபாற் குமுதம்.

**குறிப்புரை :** குறுக்கைநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீஇராஜநாராயணச் சதுர்வேதிமங்கலத்து உடையார் திருவிடைத்திட்டையுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு நிம்பை மாதேவ பட்டன் வழிபாடு, திருவமுதுக்காக நிலம் அளித்ததைக் குறிக்கும். பிரமாண இசைவுத் தீட்டாக இக்கல்வெட்டு உள்ளது.

**கல்வெட்டு :**

1. மதுரையும் கருவூரும் ஈழமுங் கொண்டு பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யா[ண்]*டு ௨௰௮ ஆவது கன்னி நாயற்று வ௵வ-ஃ வக்ஷத்து ஹூாஃஶியும் திங்கள் கிழமையும் . . . . . .

2. ங்கரவளநாட்டுக் குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீஇராஜநாராயணச் சருப்பேதிமங்கலத்து உடையார் திருவிடைத் திட்டையுடையார் கோயில் ஆதி சண்டேஶ்வர தேவ கன்மிகளுக்கு இவ்வூர் நிம்பை மாதே . . .

3. சைவு தீட்டுக் குடுத்த பரிசாவது இவ்வூர் பிடாகை தேதாங்குடிக் கட்டளையில் மதுராந்தக வதிக்கு மேற்கு றாசேந்திர சோழ வாய்க் காலுக்கு வடக்குக் கண்ணாற்று நாலாஞ்சதிரத்து தென் மேற்கடைய நான் கவிணி . . . .

4. பக்கலும் ஆளப்பிறந்தானும் இராமநும் உள்ளிட்டார் பக்கல் விளை நிலமும் கொல்லையுமாக விலை கொண்டு உடையேனாய் என்னுதா யிருந்த நிலம் இரு மாவரையில் வடமேற்கடைய கொல் . . .

5. இன்னாயனாற்கு தன்மதானமாக குடுத்த[ரு] ஃபு இந்நிலம் காணி அரைக்காணி நீக்கி இதன் தெற்கடைஞ்ச நிலத்து தென் வேலிக்கும் கீழை வேலிக்கும் உழ்பட அளந்தால் குறைவுண் . . . . .

6. இந்நாயனார் கோயிலில் நாயகர் நாச்சியார் தோளி நாச்சியார்குத் திருவமுதுபடிக்குடலாக நான் இற்றை நாள் னான் நீர்வாத்துக் குடுத்தமையில் இ . . .

7. . . மற்றும் எற்பேற்பட்ட உரிமைகளும் அகப்பட [தன்ம] தானமாக சீபாத[த்*]திலே நீர்வாற்துக் குடுத்தமையில் இந்நிலத்துக்கு இவர்கள் வேண்டின போதே பிரமாணம் பண்ணிக் குடுக்க

8. தன்மதானப் பிரமாண இசைவு தீட்டு இப்பிரமாணம் ஆ[வதாக]வும் இப்படி இசைஞ்சு இத்தன்மதான பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தேன் இந்நிலத்தில் நின்ற துரவில் னான் முன் புகுந்த உரிமை . . .

9. . . . . ஆதிசண்டேஶ்வர தேவகன்மிகளுக்கு [நிம்[பை[ மாதேவ பட்டனேன் இவர் சொல்ல இவ்விசைவு தீட்டு [எழுதினேன்] திருச்சிற்றம்பல முடையான் பட்டனேன் இவை என் [எழுத்து இப்]படிக்கு இவை நிம்பை மா . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 23 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1201 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 123/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயிற் கருவறை வடபுறக் குமுதம்.

குறிப்புரை : விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ நாராயணச் சதுர்வேதி மங்கலமுடையார் திருவிடைத்திட்டையுடையார் கோயிலுக்கு நிம்பை மாதேவபட்டன் திருநாமத்துக் காணியாக நிலம் அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவ[ற்]*க்கு யாண்டு உ௰௩ ஆவது இஷபநாயற்று பூர்வ பக்ஷத்து த்ரிதி . . .
2. நாள் விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீ றாசநாராயணச் சதுப்பேதி மங்கல[முடையார்]திருவிடைத் திட்டை உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக் . . .
3. . . பட்டனேன் தன்மதானப் பிரமாணஞ் இசைவு தீட்டுக் குடுத்த பரிசாவது இவ்வூர் பிடாகை உத்தரங்குடியிலிருந்து ரா[ஜே]ந்திர வதிக்கு மேற்கு றாசேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு முதற்கண்ணாற்று இவ்

4. ..ருபாயில் நத்தத்து வடக்கடைய ருசூ2 நீக்கி இதின் தெற்கு தேவரடியான் நாற்பத் தெண்ணாயிர நங்கை பக்கலும் ஆளப் பிறந்தானும் இவன் தம்பி இராமனான [புக] . . . லி வேந்தனும் இவன் தம்பி

5. . . . கொண்டுடையேனாய் எனுதாயிருக்கும் . . . . டைய ருசூ2ப இந் நிலம் காணி அரைக்காணியும் இற்றை நாள் இற்றை நாளால் இன்னாயனார்குத் திருநாமத்துக் காணியாக நான்

6. . . . க்கின மரமும் கீனோக்கின கிணறும் இதன் தென்பற்றில் நின்ற துரவில் இந்நிலத்துக்கு இறைக்க வேண்டும் உரிமையும் ஏத்தநில்ல சிதாழியு நீர் போக வழி . . . . உரிமையும் புகவும் போதவும் உரிமை

7. நிலத்துக்கு இவர்கள் வேண்டின போதேப் பிரம[ா]*ணம் பண்ணிக் குடுக்க கடவேனாகவும் குடுக்குமளவும் இதுவே பி[ர*]மாணமாவுதாகவும் இப்படி சம்மதித்து இத்தன்மதானப் பிர . . . .

8. டேஸ்ரு தேவகன்மிகளுக்கு நிம்பை மாதேவப் பட்டனேன் இவர் பணிக்க இத்தன்மதானப் பிரமாண இசைவு தீட்டு எழுதினேந் இவ்வூர் மத்த யத்தன் வர்கூருடையான் ஓவாத கூத்தனான திருச்சிற்றம்பலப் பி[ரி]யன் . . .

9. க்காணியும் தன்மதானமாகக் குடுத்தேன் நிம்பை மாதேவ பட்டனேன் எழுத்து இப்படிக்கு இவை நிம்பை மாதேவ

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1210 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 121/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் கருவறை வடபுறக் குமுதம்.

குறிப்புரை : கல்வெட்டின் இடையே சில பகுதிகள் கட்டடத்துள் மறைந்துள்ளன. ஸ்ரீஇராஜ நாராயண சதுர்வேதிமங்கலத்து இராஜராஜச்சேரி ஆத்ரயன் ஆராவமுது கூத்த பிரான் பட்டனும் அவன் தாயும் திருவிடைத்திட்டையுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவகன்மிகள், ஸ்ரீகார்யம் செய்வார்கள், ஸ்ரீமாமேஸ்வரக் கண்காணி செய்வார்கள் ஆகியோர் வசம் நிலத்தை விற்றுக் கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ம[து]*ரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியனை முடித்தலையுங் கொண்டருளி வீராபிஷேக[மும் விஜயா பிஷேகமும் செய்த]ருளிய ஸ்ரீதிரிபுவந

2. வீரதேவற்கு யாண்டு ௩௰௨ ஆவது கன்னி நாயற்று பூர்வ பக்ஷத்து சதுர்தசியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற சோதி நாள் விருதராய பயங்கர வள[நாட்டு குறுக்கை நாட்டு பிரம்ம தேய]ம் ஸ்ரீராஜநாராயண

3. ச் சதுப்பேதி மங்கலத்து ராஜராஜச்சேரி ஆத்ரயந் ஆராவமுது காயங் கடுஞ்சிலையான் கூத்தப்பிரான் பட்டனும் என்னையே முதுகண்ணாக உடைய எங்கள் மாதா ஆ . . . . . . . வ்விருவோம் நிலவி

4. லைப்பிரமாண இசைவு தீட்டு உடையார் திருவிண்டத்திட்டை உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளு[க்கு]*ம் சீகாரியஞ் செய்வார்களுக்கும் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் நாங்கள் விற்றுக்குடுத்த

5. நிலமாவது இவ்வூர் பிடாகை உத்தரங்[கு]*டிக் கட்டளையில் மதுராந்தக வதிக்கு மேற்கு றாசேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு முதற் கண்ணாற்று+ஞ் சதிரம் நுவ . . வடமேற்கு . . . . எங்கள் பிதாக்கள் நிம்பை

6. பள்ளிகொண்டான் பட்டன் பக்கலும் முஞ்ஞிற்படி பெரிய நம்பி பட்டன் உள்ளிட்டார் பக்கலும் விலை கொண்டுடையராய் அவர்கள் . . . . எங்களுதாய் . . . . . பாகித்து வருகிற கொல்லை

7. இந்நிலம் காணியும் விற்றுக் குடுத்து கொள்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு ஒத இக்காசு இரண்டாயிரமும் ஆவணக் களியே காட்டேற்றி கைச்செலவறக் கொண்டு விற்று விலைப்

8. பிரமாண இசைவு தீட்டுக் குடுந்தோம் இவ்வாதிசண்டேஸ்வர தேவ கன்மிகளுக்கு ஆதுயன் ஆராவது கூத்தம்பிரான் பட்டனும் என்னை முது கண்ணாக உடைய என் மாதா . . அ . . .

9. ரய இந்நிலத்து மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் எற்பேற்பட்ட உரிமைகளும் அகப்பட்ட விலைக்குற விற்று பொருளறக் கொண்டு

10. இந்நிலத்துக்கு இதுவே விலையாவுதாகவும் இதுவே பொ[ரு]*ள் மாவறுதிப் பொருள் செலவோலை ஆவுதாகவும் இதுவல்லது வேறு பொருள் மாவறுதிப் பொ[ரு]*ள்

11. . . . . வேண்டிந் போதே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவேனாக வும் குடுக்கக் மாட்டத்திலென்றில் இதுவே பிரமாணமாவுதாகவும் இப்

12. . . குடுத்தோம் இவ்வாதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு ஆதுயந் ஆராவமுதுக் கூத்தபிரான் பட்டனும் என்னைவே முதுகண்ணாக உடைய என் மாதா ஆன இ

13. . , . வ்விலைப் பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் பொற்புறத்து சீராம பட்டன் மகன் ஸ்ரீகிருஷ்ண பட்டனேன் இவ்வையென் எழுத்து இப்படி சம்மதித்து இவ்வா[ன]

14. . . . . . கொண்டமைக்கு ஆத[ய]நாந ஆராவமுது காயுங்கடுஞ்சிலை யனான கூத்தபிரான் பட்டன் ஸம்ஜையாநமை[ம]

15. . . . . . . . . ங்க பட்டன் ஸம்ஜையானமைக்கு இவை கவுணியன் உய்யாண்டான் பட்டன் மகன் ஸ்ரீகரஜ ஊடிந் எழுத்து இது.

16. இவை திரு . . சீராமபட்டன் எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 21 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 - ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 124/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | [கோனேரின்மை கொண்டான்] | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் கருவறை வடபுறக் குமுதம்.

குறிப்புரை : அரசனுடைய நேர்முக ஆணையாக உள்ளது. அரசனுடைய 21-ஆவது ஆட்சி யாண்டு முதல் திருவிடைத்திட்டையுடையார் கோயிலுக்கு தேவதான இறையிலி யாக நிலம் வழங்கியதையும், சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழனின் 16-ஆவது ஆட்சியாண்டில் அளந்தபடி நீங்கல் நீக்கி அவ்விறையிலி நிலத்தை அளித்ததையும், இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. யாண்டு உ௰க ஆவது நாள் ௩௱௰௧ ல் ப்ரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி திரி(புவன)புவனச் சக்கரவத்திகள் கோனேரி மேல் கொண்டான் விருத ராச பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஆற்றூ[ர் உடை]
2. [யார் திருவிடைத்]திட்டையுடையார் கோயிற் தேவகன்மிக்கும் சீ மாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் சீ காரியஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக இரு
3. . . . . தி . . வில் தேவதான இறையிலியிட நாம் நீர்வார்த்த நிலத் துக்கு இவ்வூர் [பிறிந்த] ராஜராஜன் மத்தளங்குடியில் இத்தேவர்க்கு திருநாமத்துக் காணியான நிலமாய் ஆற்றூரான ராஜ நாராயண

4. ச[ருப்பே]திம[ங்க]லத்துப் பிடாகை கீரனூர் ஸவிமுத்தீஶ்வரமுடையாரைத் தேவதான இறையிலி ரூ ரு வ ஹ ம ராஜ நாராயணச் சருப்பேதி மங்கலத்து வெள்ளான் பற்றில் வேறு இறுக்கிற நிலம் நீக்கி நீக்கி நின்ற நிலத்து

5. முன்னி[றை நடந்தப]டி தவிரிந்து இடு ரூ வகூதூவஹதீ வமக்கும் சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர்க்குப் பதினாறாவது அளந்தபடி நீங்கல் நீக்கி ரூ வகூகூவ்தம உ௰ச வது முதல் தேவதான இறையிலியாக இட்டு

6. இந்நிலத்து[க்கு நீக்கிஇ] ச்சதுப்பேதி மங்[க]*லத்து வெள்ளான் [பற்]றில் வேறு இறுக்கிற நிலம் நீக்கி நீக்கி நின்ற நிலத்து இட்ட நிலத்துக்கு காணிக் கடன் வேலிக்கு [ள]சுள . பத்தாறாக்கி அறுபதின் கலமாக இறைகட்டியும் ராஜராஜன் மத்த

7. ளங்குடியில் இட்ட நிலத்துக்கு ஒட்டுப்படியாய் முன்பு இறுத்து வருகிற படியில் தேவர்க்கு இறுக்கும் நெ]ல்]லும் அந்தராய பாட்டத்துக்கு இறுக்கும் படிகளுக்கு வேண்டுவது நீக்கி நீக்கி நின்ற நெல்லு [இ]த் தேவர்க்கு இறு

8. க்கவுங் கடவதாக வரியிலீலாரும் வரிக்கூறு செய்வார்களும் எழுத்திட்ட உள்வரி தரச்சொன்னோம் இந்நிலம் இரு[பத்தெ]ான்றாவது முதல் இந்தேவர்[க்கு] தேவதான இறையிலியாகக் கொண்டு இ நிமந்தஞ் செலுத்தப் பண்ணுக எழுதினான்

9. . . . . . சேந்திர . . . . வேளான் எழுத வில்லவராயரும் வரகுண ராயரும் பிரிதியங்கரையரும் . . . . . . . . . . . , . . . . திகரிலி சோழப் பல்லவரயரும் எழுத்திட்டு வந்த திருமுகப்படி

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 126/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயிற் கருவறையின் கிழக்குக் குமுதம்.

குறிப்புரை : கல்வெட்டின் இறுதிப்பகுதி சிதைந்துள்ளது. விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு இராஜநாராயண சதுர்வேதி மங்கலத்துத் திருவிடைத்திட்டையுடையார் கோயிலுக்குப் பனையூர் நாட்டு ஆனாங்கூர் உடையான் குருகுலராயர் மகள், பனையூர் மூலநந்தநாயகர் திருநடம்புரிந்தருளினான காலிங்கராயர்க்கு வாழ்க்கைப் பட்ட அரையன் சாமுண்டி நிலம் விற்றுக் கொடுத்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தி[ரிபுவன] சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியந் முடித்தலையுங் கொண்டரு . . . . நாயற்றுப் பூவ-ஃவக்ஷத்து உஶமியும் புதன் கிழமையும் பெற்ற அத்தத்துனாள் . . வலி வலக் கூற்றத்துப் பனையூர் மூல நன்த நாயக[ர்] திருநடம் புரிந்தரு[ளி]*னான் காலிங்க ராயற்கு வாழ்க்கைப்பட்ட நடுவினாடாந ராஜரா . .

2. வளனாட்டுப் பனையூர் நாட்டு ஆனாங்கூர் . . . ங்கிழையான அரயன் அருமொழி . . . ந்தைக் கற்பகத்தாழ்வானான குருகுலராயர் மகள் அரையன் [சாமுண்டி] . . . . முதுகண்ணாகக் கொண்டு நிலவிலைப் பிரமாணம் . . . [விருதரா]ஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு [ராஜநாரா]யணச் சதுவே-ஃதி மங்கலத்து உடையார் திருவிடைத் திட்டையுடையார் கோயில் ஆதிசண்டேஶ்வர தேவற்கு நான் விற்றுக் குடுத்த நிலமாவது இவ்[வூர்]

3. ப்பிறிந்த் ராஜராஜன் மத்தளங்குடிப் பொத்தகப்படி ரூ புதுவசப . இன்னி . . . காணி அரைக்காணி னாலெங் . . . . ற்றக் குடைக்கோன் பக்கல் விலை கொண்டுடையாராய் அனுபவித்து வருகிற இந்நில . [கா]லிங்[க]* ராயற்கு வாழ்க்கைப்படுகிற காலத்திலே இநக்கு ஸ்ரீயத[மாக நீர்] வார்த்துக் குடுத்த நிலத்துக்குடலாகப் பின்பு . . . . . . னுடன் பிரித்து என் அ .

4. ன் உய்யக் கொண்டானும் அரயன் ராஜராஜ தேவனும் அரயன் அரு மொழி தேவனும் இனக்கு ஸ்ரீ[யதமாகப்]பெற்றுடையபடி . . காலே மாகாணி அரைக்காணியும் இற்றை நாளால் இந்த ஆதிசண்டேஸ்வர தேவற்கு விற்றுக் குடுத்தேந் விற்று . . . . எம்மிலிசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு உமிறு ஜ இக்காசு [இருபத்தைஞ்ச]ா யிரமும் காட்டேற்ற . . . . . இவ்[வாதிச]

5. ண்டேஸ்வர தேவற்கு அரயன் சாமுண்டியேன் . இன்னிலத்து நின்ற மேனோக்கின மரமுங் கீனோ[க்கின கிணறு]ம் மற்றும் எப்பேற்பட்ட இன்னி . . . . ஆதிசண்டேஸ்வர தேவற்கு காலிங்கராயற்கு வாட்கைப் பட்ட அரயன் சாமுண்டியேன் இவர்கள் சொல்ல . . . . . . . . அரு மொழிதேவ வளநாட்டுப்[பாம்பூர்]நாட்டு வருசியூர் . . . டைய வரம் பிடந்செக . . . . . . . . . . . காணி[அரை]

6. க்காணியும் அரயன் சாமுண்டிக்கு முதுகண்பட்டு இக்காசு இருபத்தைந் யாயிர[மும்] கைக்கொண்டு விற்றுக் குடுத்தேன் பனையூருடையான் அரயன் . . .னெழுத்தென்றும் பனையூர் மூலன்தை அரயன் உய்யக் கொண்டான் எழுத்தென்றும் இப்படி அறி[வேன் கங்கை]கொண்ட சோழ வளநாட்டுச் சிறுகுடி . . ஊற்கணக்கு திருவரங்குடையான் தி . . . . ளில் ெ[பா]

7. ன்னம்பலக் கூத்தநான கற்[ப]க வேளானேன் எழுத்தென்றும் இப்படி அறிவேன் ஸா[வர்ண]ஆசூபாணி ஹடீனேன் இப்படி அறிவேன் கற்பக . . . ன்னெழுத்தென்றும் . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு: | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | [மூன்றாம் குலோத்துங்கன்] | ஊர்க் கல்வெட்டு எண் | 12 |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் கருவறையின் வடபுற ஜகதி

குறிப்புரை : கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கோயில் நிவந்தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட தேவ தான இறையிலியிலிருந்து இவ்வூர்ப் பிறந்த இராஜராஜன் மத்தளங்குடியில் இத் தேவர் திருநாமத்துக் காணியான நிலம் இருக்கும் ஆத்தூர் இராஜநாராயணச் சருப்பேதிமங்கலத்திலிருந்து மாறி, முன் கட்டியபடி இறை தவிர்ந்து அதாவது மூன்றாம் குலோத்துங்கனின் பதினாறாவது ஆட்சியாண்டில் அளந்தப்படி நீங்கல் நீக்கி அம்மன்னனின் இருபத்தொன்றாவது ஆட்சியாண்டு முதல் தேவதான இறையிலி இட்டமைக்கு நிமந்தத்துக்கு உடலாக நெல்லு அளிக்கப்பட்டதையும் அதற்குப் புரவு வரி அதிகாரிகள் கையெழுத்திட்டிருப்பதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ...க்கு உள்வரி விருதராச பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு .. ஆற்றூர் உடையார் திருவிடைத்திட்டையுடையார்க்கு வேண்டும் நிமந்தங்களுக்கு இறுப்பதாக உ௰௪ ஆவது சித்தி...
2. ..தேவதான இறையிலியிட்ட இவ்வூர்ப் பிறிந்த ராஜராஜன் மத்தளங் குடியில் இத்தேவர் திருநாமத்துக் காணியான நிலமாய் ஆற்றூர் ஈாஜநாராயணச் சருப்பே . . . .
3. ரைத் தேவதான இறையிலி மாறின ரூ௲கருஙூ . . . நில வோபாதி காணிக்கடன் ௨ ௯ ௪ ௰ ௪ ௭ ௨ ௲ ௲ ப ல் பத்தாறாக்கி ௨ ௨ ௪ ௬ ௬ ௭ ௨ ௲ ௲ ப நிச்சயித்த ஓபாதி

4. கலத்து வெள்ளான் பற்றில் வேறு இறுக்கிற நிலம் நீக்கி நீக்கி நின்ற நிலத்து முன்னிறை கட்டினபடி **தவிர்ந்து** இட்ட ரூ வகபசஙஜ ரூ ௺ப நிலவோபாதி பழ இ. . . .

5. ..கு உடையார் சுங்கந் தவிர்த்தருளின குலோத்துங்க சோழதேவர்க்கு ௰௬ ஆவது அளந்த படி நீங்கல் நீக்கி ரூ வகப சஉஜு ௬ ௰௮ ஆவது நிச்சயித்த ஒபாதி ௨ உ௰ா ஜு . . .

6. ..இறை கட்டின காணிக்கடன் ௨ சுகுகு௺ பத்தாக்கி ௨ உ௰௬ சவ உம் யாண்டு உ௰௧ ஆவது முதல் தேவதான இறையிலி இட்டமைக்கு இதில் ராஜராஜ மத்தளங்குடியில் இட். . .

7. . . . இறுக்கும் நெல்லும் அந்தராய பாட்டத்துக்கு [இறுக்]கும் படி காசுக்கும் வேண்டுவது நீக்கி நீக்கி(ன) னிந்றநெல்லு நிமந்[த*]த்துக் குடலாவது இவை புரவரி சீகரண நாயகம் குழலூரு[டையா]

8. ன்னெழுத்து இவை புரவரி சீகரண நாயகம் ப[ராம்]பூர் கி[ழ]*வ னெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முகவெட்டி உழந்தையுடையா னெழுத்து [இ]வை புரவரி சீகரண நாயகம் பெருநல்லூ[ரு]*டைய

9. ானெழுத்து. இவை புரவரி சீகரண நாயகம் பந்த[ணை] நல்லூருடையா னெழுத்து. இவை புரவரி சீகரணத்து முகவெட்டி பெருமங்கல முடையா னெழுத்து இவை விசையராயனெழுத்து இவை. . .

10. ..வசேதிகுல ராயனெழுத்து கோசலராயன் எழுத்து இவை பழந்தி வா[கர]னெழுத்து இவை சேரகோனெழுந்து இவை சிம்பியதரையனெ [ழுத்து] இவை கச்சியரரயன் எழுத்து இவை நுள . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 17+1 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12–ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 125/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 13 |
| மன்னன் : | கோனேரின்மை கொண்டான் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயிற் கருவறை மேற்கு ஜகதி.

குறிப்புரை : அரசனது (திருமுகம்) நேர்முக ஆணை அரசனுடைய 17+1(18)-ஆம் ஆட்சியாண்டு முதல் இராஜநாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகையான கீரனூரிலுள்ள அவிமுக்தேஸ்வரர் கோயில் தேவதான இறையிலியை மாற்றித் திருவிடைத்திட்டையுடையார் கோயில் நிவந்தங்களுக்காக 2 வேலி நிலம் இறையிலி அளிக்கப்பட்டதையும், இந்த ஆணையை எழுதியவன் திருமந்திர ஓலை நேறியுடைச் சோழ மூவேந்த வேளான் என்பதையும், வரியிலாரும், வரிக்கூறு செய்வார்களும் உள்வரியிட்ட செய்தியையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு பதினேழாவது ள்[1]கஎளகஎனால் ஐ[ஸாசூ செய்தருளின
திருமுகப்படி திருபுவனச்சக்கரவத்தி கோனேரி மேல்கொண்டான் விருத
ராஜபயங்கர வளனாட்டுக் குறுக்கைனா[ட்டு] ஸ்ரீராஜ நாராய[ண]*
சதுர்வேதி மங்கலத்து உடையார் திருவிடைத்திட்டையுடையார்
கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும்
ஸ்ரீகாரியஞ் செய்வானுக்கும் இத்தேவற்கு வேண்டும் நிமந்தங்களுக்கு
இறுப்பதாக உத்தராப் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . க்கு ராஜராஜன் மத்தளங்குடியில் இத்தேவர்

2. திருனாமத்துக் காணியாய் ராஜ(ச)நாராயணச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை கீர[னூர்] அவிமுத்தீஸ்வரமுடையார் தேவதானத்து இறுத்து வருகிற நிலத்து இத்தேவரை தேவதான இறையிலி மாறி இடுகிற நிலம் இருவேலி[யும்] பதினேழாவதின் எதிராமாண்டு முதல் தேவதான இறையிலியாக இட்டும் இந்நிலத்துக்கு ஒட்டுப்படியாய் முன்பு இறுத்து வருகிற படியே தேவற்கு இறுக்கும் நெல்லும் அந்தராயம் பாட்டத் துக்கு இறுக்கும்படிக் காசுக்கு வேண்டும் .... நீக்கி நின்ற ...... ... டலாகவும் கடவதாக வரியிலாரும் வரி

3. க்கூறு செய்வார்களும் எழுத்திட்ட உழ்வரி தரச்சொன்னோம் இந்நிலம் பதினேழாவதின் எதிராமாண்டு முதல் இத்தேவற்கு தேவதான இறை யிலியாகக் கைக்கொண்டு நிவந்தஞ் செலுத்தப் பண்ணுக எ[ழு]தினான் திருமந்திர ஓலை நெறியுடைச் சோழ மூவேந்த வேளான் எழுத்து இவை குருகுலராயரும் பிரதியங்கரையரும் நிகரிலி சோழப் பல்லவரை யரும் கச்சியராயரும் வன்னாவுடையாரும் சோழகங்கரும் சேதிகுல ராயரும் எழுத்திட்டு எழுத திரு . . யாண்டு பதினேழாவது நாள் ஙளஙமஎல் தேவ்தா

4. ன இறையிலியிட்டபடிக்கு உள்வரி விருதராச பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஆற்றூரான ராஜநாராயணச் சதுப்பேதி மங்கலத்து உடையார் திருவிடைத்திட்டையுடையார்க்கு வேண்டும் நிமந்தத்துக்கு இறுப்பதாக உத்தர அயனத்து நீர் வார்த்த நிலமாய் இந்நாட்டு ராஜராஜன் மத்தளங்குடியில் இத்தேவர் திருநாமத்துக் காணியாய் ராஜநாராயணச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகைக் கீரனூர் அவிமுத் தீஸ்வரமுடையார் நேவதானத்து இறுத்து வருகிற நிலத்து இத்தேவரைத் தேவதான விறையிலி மாறிய[ாண்]

5. டு பதினேழாவதின் எதிராமாண்டு முதல் தேவதான இறையிலியிட்ட நிலம் இருவேலியினால் நிலவோபாதி காணிதாடா[2] நெல்லு உசமஎளச ஙஷூ னால் பத்தாறாக்கி நெல்லு உம-ள . . ஜகூ நிச்சயித்த நெல்லு உஙமகளக-ஙம் யாண்டு பதினேழாவதின் எதிராமாண்டு முதல் தேவதான இறையிலிட்டமைக்கு இந்நிலத்துக்கு ஒட்டுப்படியாய் முன்பு இறுத்து வருகிற படியில் தேவற்கு இறுக்கும் நெல்லும் அந்தராயம் பாட்டத் துக்கு இறுக்கும்படி காசுக்கு வேண்டுவது நீர் நீக்கி நின்ற நெல்லும் நிமந்தத்துக்கு[ட]

6. லாவது இவை புரவரி கரணநாயகம் குழலூருடையானெழுத்து இவை புரவரி சீகரணத்து முகவெட்டி பந்தணைநல்லூருடையனெழுத்து இவை புரவு வரி சீகரண நாயக[ம்] . [வீர]நல்லூருடையானெழுத்து இவை புரவு

வரி சீக[ர*]ண நாயகம் பாலையூர் கிழவனெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முகவெட்டி குமாரமங்கலமுடையானெழுத்து இவை புரவுவரி சீகரண நாயகம் மேலூருடையானெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முகவெட்டி .. .. கலமுடையானெழுத்து இவை புரவுவரி சீகரணத்து முகவெட்டி உழ

7. ந்தையுடையானெழுத்து இவை விசையராயனெழுத்து இவை கச்சிராயனெழுத்து இவை வேணாட்டரயனெழுத்து இவை பழந்திராயனெழுத்து இவை வளனாடு[டை]யானெழுத்து இவை தீபத்தர[ய]னெழுத்து இவை நுளம்பராயனெழுத்து இவை வாணாதி ராஜ னெழுத்து

---

1. நாள் என்றிருத்தல் வேண்டும்.

2. காணிக்கடன் என்றிருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 21 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1199 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 14 |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறச் சுவர்.

குறிப்புரை : பிரம்மதேசம் ஸ்ரீஇராஜநாராயணச் சதுர்வேதி மங்கலத்து உடையார் திருவிடைத் திட்டையுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகள் வசம் நிம்பை மாதேவ பட்டன் திருநாமத்துக் காணியாக நிலம் விற்றுக்கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டிற்கு அவனது மக்கள் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு :

1. . . . . கையுங் கொண்டருளின ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற் யாண்டு உ௰க ஆவது மிருக [சீரிஷத்து] துவா஽சியும் திங்கள்க் கிழமையும் பெற்ற

2. [குறுக்]க நாட்டு பிரம்மதேசம் ஸ்ரீ றாச நாராயணச் சருப்பேதிமங்கலத்து உடையார் திருவிடைத் திட்டை உடையார் கோயில் ஆதிசண்டேஸ்வ தேவகன்மிகளுக்கு இவ்வூ[ர்*] வீரநாராயணச்சேரி நி[ன்]பை மா

3. . . . ப்பிரமாண இசைவுதிட்டு இற்றைநாள் நான் இவர்களுக்கு நான் விற்றுக் குடுத்த நிலம்(ம்)மாவது உத்தரங்குடியில் மதுராந்தக வதிக்கு மேற்கு றாசேந்திரசோழ வாய்க்காலுக்கு வடக்குக் கண்ணா

4. . . . . தென்மேற்கடைய அகரம் மதுரைகொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்து என்றுதாயிருந்த ரூ பகீவெ உப கூப வுதம் இதன் வடக்கு கொல்லை ரூ கூ வுத கீரு

5. . . . ன்னாயனார் திருநாமத்துக் காணியாக நான் முன்பு தன்ம தான மாக குடுத்த ரூ கூ நீக்கி இதன் தெற்கு கொல்லை ரூ வுதகீரு உப கப வுதம் ஆக விள நிலமும் கொல்லையும் உள்பட

6. . . . மா முக்காணியும் இற்றை நாளால் இன்னாயனார்க்கு திரு நாமத்துக் காணியாக விற்றுக்குடுத்தேன் இந்நிலம் ஒருமா முக்காணியும் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலி

7. . . . .ள் அன்றாடு நற்காசு கூமிசஹ இக்காசு பதினாலாயிரமும் ஆவணங்களியே காட்டேற்றிக் கைச்செலவறக் கொண்டு விற்று விலை ஆவணம் செய்து குடுத்தேன் இந்நில

8. . . . ரமும் கீழ் நோக்கின கிணறும் மற்றும் எற்பேர்ப்பட்ட பாகாசிரிய உரிமைகளும் இந்நிலத்துக்கு அசல் என்பொதுவும் பொ[தா]ரியும் மற்றும் எற்பேர்பட்ட உரிமைகளும் அ

9. . . . தேன் இந்நிலத்துக்கு இவ் . . . . . . . . . . . தேய் பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவேனாகவும் குடுத்திலேனாகில் இதுவே பிரமாண [ம்]* ஆவுதாகவும் இதுவேய் பொருள்

10. . . . . லி ஓரா ஆவுதாகவும் இதுவல்லது வேறு பொருள்மா வறுதி பொருள்ச் செலஓலை காட்டக் கடவதல்லாதாகவும் இந்நிலம் இருபத் தேழாவது பசான முதல் அனுபொவித்து கொ

11. . . . சூவுதப ரூசநாராயணச் சருப்பேதி மங்கலத்திலே இறுக்கக் கடவ தாகவு நீக்கி ரூபசஙுகீவெஉப ுவுதம் அகரம் மதுரைகொண்ட சோழ சதுப்பேதிமங்கலத்து ஒட்டுப்

12. . . . டவர்களாகவும் இப்படி ஸம்மதித்து இந்நிலம் ஒருமா முக்காணி யும் மிகுதிக் குறைவு உள்பட விற்றுக் குடுத்தேன் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு இந்நின்பை மாதேவ பட்டனேன் இவர்

13. . . . . இந்நில விலைப்பிரமாண இசைவு தீட்டு எழுதினேன் குலோத்துங்க சோழன் தனிநாயகச் சருப்பேதி மங்கலத்து மத்தியத்தன் சாத்தனூருடையான் திருவீரட்டானமுடை

14. . .ந்தன் ஸ்ரீமாஹேஸ்வரப் பிரியனெழுத்து இப்படி ஸம்மதித்து இக்காசு பதினாலாயிரமுங் கைகொண்டு இந்நிலம் ஒருமா முக்காணியும் விற்றுக் குடுந்தமைய்கு இவை நின்பை மாதே

15. . . . [இ]வையென் எழுத்து இப்படிக்கு இவை நின்பை மாதேவ பட்டன் மகன் ஆரா அமுது பட்டன் எழுத்து இப்படிக்கு இவை நின்பை மாதேவ பட்டன் மகன் திருச்சிற்றம்பலமுடையான் பட்டனேன் இவை யென்

16. . . . க்கு இவை நின்பை மாதேவ பட்டன் மகன் சூரிய தேவபட்டனே இவையென் எழுத்து இவை திருச்சிற்றம்பல நம்பி எழுத்து

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 30 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | — |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 122/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 15 |

இடம் : ஸ்வர்ணபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடபுறச் சுவர்

குறிப்புரை : மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய "மதுரையும் ஈழமும் கொண்ட" என்ற மெய்க்கீர்த்தியுடன் இக்கல்வெட்டு தொடங்குகிறது. மன்னனின் 30-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டின் ஆரம்பம் மட்டுமே உள்ளது.

**கல்வெட்டு**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் [க]*ருவூரும்
2. . . . . லையுங்கொண்டு வீராபிஷேகனும் விஜயாபிஷேகமும் பண்ணி யருளிய ஸ்ரீ திரிபுவன வீரதே[த
3. . . .வற்கு யாண்டு [௩௰] ஆவது வ்ருஸ்சிக நாயற்று பூர்வபக்ஷத்து ஸப்தமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சதையத்து நாள் வி . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 21 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 167 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 127/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 16 |
| அரசன் : | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம் : சுவர்ணபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தென்புறச்சுவர்.

குறிப்புரை : விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீஇராஜநாராயண சதுர்வேதிமங்கலத்து உடையார் திருவிடைத் திட்டையுடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவகன்மிகளுக்கு இவ்வூர் இராஜராஜச்சேரி பாரதாயன் தாமோதிரப் பட்டன் அபிசித்தர் மகன் தக்ஷிணாமூர்த்திபட்டன், அவன் தம்பிகள் மற்றும் மாதா ஆகியோர் ஜயசிம்ம குலகால நல்லூரிலுள்ள நிலத்தை விற்றுக் கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜ தேவற்
2. கு யாண்டு உ௧[க] கற்கடக நாயற்று பூர்வ பக்ஷத்து ஸப்தமியும்
3. சனிக்கிழமையும் பெற்ற சோதிநாள் விருதராஜபயங்கர வளநாட்டு
4. குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயந் ஸ்ரீராஜநாராயண சதுர்வேதி மங்கலத்து
5. உடையார் திருவிடைத் திட்டையுடையார் கோயில் ஆதிசண்டேஸ்வர தேவகன்மி
6. களுக்கு இவ்வூர் இராஜராஜச்சேரி பாரதாயன் தாமோதிரப் பட்ட[ன்] அபிசித்தர் மகன்

7. ஒக்ஷ[ண]*ாமுத்தி பட்டனும் இவரே முதுகன்னாக உடைய இவர் தம்பி வீதிவிடங்க

8. ப் பெருமாநான யஜுமுத்திப்பஉஉனும் இவன் தம்பீ அழகிய திருச்சிற்றம் பலமுடைய

9. ானும் இவர்கள் மாதா பெரியாண்டாள் சாநியும் இவ்வனைவோம் நில(ல) விலை வ்ரா

10. ணமான இசைவு தீட்டு குடுத்த பரிசாவது இவ்வூர் பிடாகை ஜயஸி[ங்]*ஹ குலகால நல்லூரி

11. ல் மதுராந்தக வதிக்கு மேற்க்கு இராஜேந்திர சோழ வாய்க்காலுக்கு தெற்கு இரண்டாஞ் சதிரத்து தெ

12. ற்கடைய வெண்ணைக்கூத்த விளாகம் என்று பேர் புகப்பட்ட ஊர்படி ரூ மூன்று மா இன்

13. நில மூன்று மாவில் இன்னாயனார் ஊர்[க்]*கு எழுந்தருளி புகுகிற திருவீதி ரூ ம அரைக்காணி நீக்

14. கி எங்கள் ஆழ்வார் அஸிசித்தர் அபாபத்து எங்களுதாய் இருந்த மி

15. குதித் குறைவு உட்பட நிலம் இரண்டுமா முக்காணி[அ]*ை

16. ரக்காணி இந்நிலம் இரண் .......... இற்றை நாளால் விற்றுக் குடுத்தே

17. தாம் இன்னாயனார் கோயில் ஆதிசண்டேஸ்ர தேவர் கன்மிகளுக்கு பாரதாயன் ஒக்ஷ[ண]*ாமுத்தி ப

18. ட்டனும் இவனையே முதுகண்ணாக உடைய இவன் தம்பி வீதி விடங்கப் பெருமானான(எ)

19. யஜுமுத்தி சன்மனும் இவன் தம்பி அழகிய திருச்சிற்றம்பல முடையானும் இவர்கள் மாத

20. ா பெரியாண்டாள் சானியும் இவ்வனைவோம் இந்நிலம் விற்று குடுத்து கொள்வதான எ

21. ம்மில் இசைஞ்ச விலைப்பொருள் அ[ன்]*றாடு நற்காசு ௰ஊகஉா இக்காசு பன்னீராயிரத்த்றுநூ

22. றும் கொண்ட பரிசாவது ஆழ்வாரை பிள்ளை இலாடத் தரையர் கொள்ள நிச்சயித்த பொன்னு

23. க்கு பிணைபட்ட ஆரியன் இராஜ ஸூரிய ஷூமாராயனு[ம்]* கற்பூர பட்டனும் சொக்கபட்டனும் ப

24. ரமாத்தக் குடையார் சாக்கில் ஒடுக்க வாங்கி குடுத்த காசு ௰௩௲ இக்காசு பதினாயிரத்தறு

25. னூறும் இக்கோயிலில் நாங்கள் வாங்கின எதிற்பைக்கு செலவிட்ட காசு உ௲ காசு இரண்டா

26. யிரமும் ஆக காசு ௰௨௲ இக்காசு பன்னீராயிரத்தறுனூறும் இப்படி யால் ஆவணக்களறியே

27. காட்டேற்றி கைச் செலவறக் கொண்டு இ[ந்]*த நிலம் இரண்டு மா முக்காணி அரைக்காணியும் விற்று

28. க் குடுத்தோம் விற்றுக் குடுத்த நிலத்து மேனோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் எற் செ

29. ................ பேற்பட்ட பாகாசிரிய உரிமைகளும் அகப்பட விற்றுக்கு

30. டுத்த இந்நிலத்துக்கு இதுவே விலையாவுதாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருள் செ

31. சலவோலை ஆவுதாகவும் இதுவல்லது வேறு பொருள் செலவோலை காட்டக் கடவதல்லாத

32. தாகவும் இந்நிலம் இரண்டுமா முக்காணி அரைக்காணிக்கும் இவர்கள் வேணுமென்ற போதே

33. பிரமாணம் பண்ணி குடுக்க கடவோமாகவும் குடுத்திலோமாகில் இந்நில விலை ஷூணை இசை

34. [வுதீட்]டே ஷூணைமாவுதாகவும் இப்படி ஸம்[ம]*தித்து நிலவிலை ஷூணை இசைவு தீட்டு குடுத்தே

35. [தாம்] [திருவிடைத்] திட்டையுடையார் கோயில் ஆதிசண்டேஸ்ர தேவ கன்மிகளுக்கு பா

36. [ரதாயன்] தாமோதிர பட்ட அவிசித்தர் மகன் தக்ஷ[ணா]முத்தி பட்டனும் இவன் தம்பி வீதிவிடங்கப்

37. பெருமானான யஜமுத்தி சஃஃனும் இவன் தம்பி அழகிய திருச்சிற்றம்பல முடை

38. யானும் இவர்கள் மாதா பெரியாண்டாள் சானியும் இவனைவோம் இவ[ர்*]கள் அருளிச்

39. செய்ய இந்நில விலைப் வ்யூஉாணை இசைவு தீட்டு எழுதினேன் இவ்வூர் மத்யஸ்தந் வரகூரு

40. டையான் திருச்சிற்றம்பலப் பிரியன் ஆட்கொண்டானேன் இவையென் னெழுத்து இ

41. ப்படி சம்மதித்து இவர்களுக்கு முதுகண்ணும்பட்டு இந்நிலம் இரண்டு மாமுக்காணி அரை

42. க்காணியும் விற்றுக் குடுத்து இக்காசு பன்னீராயிரத்து அறுநூறும் இப்படியாக

43. பாரதாயன் தாமோதர பட்டன் உக்ஷ[ண]ா முத்தி பட்டனேன் எழுத்து

44. . . . . தாயன் அவினாசி பட்டனேன் இவை அறிவேன் செல்லூர் பொன்னம்பலம்

45. . ஆளும் பிரான் பட்டனேன் இப்படி அறிவே[ன்] குமாரஸ்வாமி ஆளும் பிரான்பட்டன்

46. . . . டு . . . பட்ட வஞ்ராதித்த வரை நயினார் கொள்ள நிச்சயித்த பொன்னாயிர கல்லுமி . . . .

47. பொன்னுக்கு இவர் காணி ஜயஸிஉஸ . . . நல்லூரில் வெண்ணைக் கூத்

48. தவிளாகம் நிலம் இரண்டு மா முக்காணி அரைக்காணியும் இவர் மகன் உக்ஷ[ண*]ா

49. . . முத்தி [பட்டனும்] இவன் தம்பி . . . . திரிச்சிற்றம்பலமுடையானும்

50. . . . . . [ஆண்டா]ள்ச் சானியும் உடையார் திருவிடைத்திட்டை உடையாற்கு

51. . . . . . காணியாகப் பற்றி ஷமாண விலைப்படி காசில் நாங்கள் புணைப்பட்ட

52. . . . . த்தாக்கி . . [கா]சு பதினாயிரத்தறு நூறும் பிள்ளை இலாடத் தரைய . . . .

53. . . . . தக்குடையா . . . ாக்கிலே ஒடுக்க நாங்கள் கைக்கொண்டு எங்கள் இருவர் பேரி

54. லும் முதலிட்டமைக்கு வீரநாராயணச்சேரி காமனான கற்பூர பட்டனேன் எழுத்து ஷஊாண

55. விலைப்படி காசாய் நாங்கள் புணைப்பட்ட காசுக்கு தரக்கடவதான காசு பதினாராயிர

56. த்தறுனூறும் எங்கள் பிதாக்கள் இராஜசூரியப் பிரம மாராயரும் எங்கள் சிற்ற[ப்*]பனார் கற்

57. பூர பட்டரும் புணைப்பட பொன்னுக்கு செலவாக ஸ்ரீபண்டாரத்து நாங்கள் வாங்கி [பரமா]

58. த்தக் குடையார் சாக்கில் ஒடுக்கினமைக்கு இராஜசூரியப்பிரம்மாராயர் மகன்

59. கற்பூர பட்டனேன் எழுத்து||

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 22 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1168 |
| ஊர் : | ஆத்தூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 128/1927 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 17 |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜன் | | |

இடம் : சுவர்ணபுரீஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தென்புறச் சுவர்.

குறிப்புரை : அரசனுடைய நன்மைக்காகவும், [கிராம நன்மைக்காகவும்] திருவிடைத்திட்டையுடையார் கோயில் இறைவனை அமாவாசை நாளன்று உலாவாக எடுத்து வருவதற்கு ஜயசிம்மகுலகாலபுரத்திலுள்ள நிலத்தினை இறையிலிமாக இராஜநாராயணச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் அளித்துள்ளனர். இந்தத்தானம் வாணாதிராஜருடைய சிறப்பு (கடையீடு) ஆணையினைப் பெற்று செய்யப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜதேவற்கு யாண்டு உ௰உ வது உ௰ா நாய
2. ற்று அபர பக்ஷத்து பஞ்சமியும் நாயற்றுக்கிழமையும் பெற்ற திருவே[ர]* ணத்து நாள் விருதரா
3. ஜ ஸயங்கர வளனாட்டு குறுக்கை நாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீ இராஜ நாராயண சதுர்வேதி மங்கல[த்து]
4. மஹாஸபையா[ர்]* எழுத்து உடையார் திருவிடைத்திட்டை உடையார் கோயிலில் தேவதானமி கோயில்
5. கணக்கன் கண்டு பெருமாள் திருமேனி கல்லியாண திருமேனியாகவும் ச . . . ம் ஸுப்ரதிஷ்டிதமாகவும்

6. உடையார் திருவடித்திட்டை உடையார் இவ்வழி வாஸி துடங்கி ஊரி . . . றோத்ஸவமாக எழு

7. ந்தருளி நித்யம் ஆஸாதிக்கப் பண்ணுவாராக உடையார் வாணாயிராஜர் எழுத்திட்டருளின . . . .

8. . . . இதுக்கு எழுந்தருளி அருளும்படிக்கு உடல் . . . . . . . . . டலாக ஊரிலே சிறுதா

9. . . . பெறவேணுமென்று இக்கோயிலி[ல்]* தானத்தார் அபேக்ஷித்தமை யில் இவ்வூர் தென்கீழை மூலை

10. க்குளத்துக்கு உடலாக நீக்கி நிற்கிற நிலம் ஒரு மாவும் இக்குளம் சூழ்ந்த இடத்து கொண்டு விடஸே . . .

11. . . . ன்றாயமான நிலம் இல்லாமையாலே இன்னிலம் ஒரு மாவும் பார்த்தான் கெங்காதரன் திருவெண்

12. காடு பட்டனுக்கு சிலையிங்க[1] பூரணவிரத்திக்கு இறையிலி நின்ற நிலம் அரைமாவுக்கும் இவன்

13. பாத்தி அனுட்டானம் பண்[2]ணாமையாலே இந்நிலம் அரைமாவும் என்னை இவன் மாற வேணு

14. மென்று சொல்லுகையாலே இந்நிலம் அரைமாவும் ஆக நிலம் ஒரு மாவரையும் இற்றை நாள் மு

15. தல் இவை தவுந்து இன்னாயனார் அம[ர*]வாஸி எழுன்தருளி . . . . . . இற்றை நாள் முதல் இ

16. றையிலியாக இட்டது இன்நிலம் ஒருமாவரையும் இன்நாயனார் திரு நாமத்துக்காணி திறப்பில் இறு

17. த்து வருகிற நிலத்திலே நிறுத்திக் கொண்டு உடையார் திருச்சிற்றம்பல முடையார் தேவதானத்திலே

18. ல அந்தராயம் கோயிற் றம்ப பேறு இறுத்து இந்நிலம் ஒரு மாவரையில் உள்ள உடல்கொண்டு

19. நீக்கி வேண்டுவன ஸ்ரீபண்டாரத்தே பட்டு[3] அம[ர*]வாசி எழுந்தருளி நித்யம் ஆஸாதித்தருளவும் இன்னி

20. லம் ஒரு மாவரையும் இன்னாயனார் திருநாமத்துக்காணியான ஜய ஸிம்ஹ குலகால நல்லூரில் மதுரா

21. ந்தகவதிக்கு மேற்க்கு இராஜம[கே]*ந்திரசோழ வாய்க்காலுக்கு தெற்கு உ கண்ணாற்று னாலாஞ்சதிரத்து இதன் மே

22. ற்கடைய திருஞானசம்பந்த [விளக்க]மாய் ஊர் பாடிகாப்பதற்கு இறுத்து வருகிற நிலத்திலே நிறு

23. த்த கடவதாகவும் சொன்னோம் இப்படி செய்க மணியால்[4] ஊர்கணக்கு வுச்சவிரியன் எழுத்து இப்படி

24. க்கு இவை ஆளுடையான் பட்டனெழுத்து இவை உய்யக்கொண்டான் பட்டனெழுத்து

---

1, 2. சிறிது இடம் விட்டு வெட்டப்பட்டுள்ளது.

3. ஸ்ரீபண்டாரத்தே இட்டு - என்று இருத்தல் வேண்டும்.

4. பணியால் - என்று இருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 26 |
| வட்டம் : | தரங்கம்பாடி | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1044 |
| ஊர் : | மேலப்பாதி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் இராஜாதிராஜன் | | |

இடம் : நவநீத ஈஸ்வரர் கோயில் கருவறை வாயில் நிலையின் உட்புறம் பதிக்கப்பட்டுள்ளது.

குறிப்புரை : முதலாம் இராஜாதிராஜனுடைய மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு சிதைந்துள்ளது. முடிவும் காணப்படவில்லை. கோயிற் காரியங்களுக்காக நிலம் விற்றுக் கொடுத்து அதற்கு எல்லையும் குறிக்கப்பட்டுள்ள செய்தி பெறப்படுகிறது

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவீரபாண்டியன் தலையும் [காஹளூர் சாலையு] . . . .
2. ராஜதேவர்க்கு யாண்டு உ௰சு ஆவது [மகர] நாயற்று பூர்வ பக்ஷத்து வெள்ளிக் கிழமையும் பெற்ற அத்த . . .
3. ங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்து [மகாஸபையோம்] விற்றுக் குடுத்து [விலையாவணஞ் செய்து] . . . .
4. [தெற்கு] கீழ்பாற்கெல்லை பெரி[ய] வாய்க்காலுக்கு மேற்கும் குந்தவைச் சதுர்வேதிமங்கலத்தெல்லைக்[கு] . . . .
5. பாற்கெல்லையிலு நடுவுபட்ட நிலம் ஒன்றே யறுமாவரை இந்நிலம் விற்றுக் குடுத்து .. .. .. .

த. நா. அ. தொல்லியல்துறை　　　　தொடர் எண் : 2 / 1983

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 22 |
| வட்டம் : | தரங்கம்பாடி | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மேலப்பாதி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | [சோழர்] | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசன் : | [திரிபுவன]வீரதேவர்? (மூன்றாம் குலோத்துங்கன்) | | |

இடம் : சுரகர ஈஸ்வரர் கோயில் மகாமண்டபத் தெற்கு ஜகதி.

குறிப்புரை : கல்வெட்டின் முன்பகுதி சிதைந்துள்ளது. பிற்பகுதி காணப்படவில்லை. கல்வெட்டு சிறப்பாக நோக்கத்தக்கது. இக்கல்வெட்டு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வெட்டப் பட்டது. கல்வெட்டின் முற்பகுதி அழிந்துபட்டுள்ளது. பிற்காலத்தில் இக்கோயிலைப் புதுப்பிக்கும் போது கல்வெட்டின் ஆரம்பம் அழிந்துள்ள கல்லை நீக்கிவிட்டுப் புதிய கல்லை வைத்துக் கட்டியுள்ளனர். இதனை அறிந்து கொள்ளக் (கி.பி. 15-ஆம் நூற்றாண்டில்) கல்லு அழிவு என்று புதியகல்லில் எழுதிவைத்துள்ளனர். மேலும் திருப்பணியில் கற்கள் மாறிவிடாமலிருக்கக் கற்களுக்கு 6, 7, 8, 9 என்று தமிழில் எண்கள் இட்டு ஒவ்வொரு எண்ணின் அருகிலும் கல்லின் வடிவத்தையும் சதுரம் சதுரமாகப் பொறித்துள்ளனர். முன்னோர் எழுதிவைத்த வரலாற்றைப் பாதுகாப்பதில் அக்கால மக்களுக்கு இருந்த ஈடுபாடு இதன் மூலம் பெறப்படுகிறது. இக்கல்வெட்டில் வீரராக்கதச் சதுர்வேதி மங்கலத்துக் குமண்டிலி இருள் நீக்கி பட்டன் என்பான் வீரராஜேந்திர கெணயாத ராயர்க்கு நெல் அளித்துள்ளான். இத்தானத்தை அறியும் வகையில் சாசனத்தை வீமேஸ்வரர் கோயிலில் வெட்டி வைத்தான் என்ற செய்தியும் இக்கல்வெட்டில் அறியப்படுகிறது.

கல்வெட்டு :

1. கல்லு
 அழிவு

2. கல்

ஓு கூ கூ | ள | அ | கூ | ௰ |

3. .. வீரதேவர்கு யாண்டு உ௰உ வது வீர[ராக்]கதச் சருப்பேதிமங்கலத்து கு[ம]ண்டிலி* இருள் நீ[க்]*கி நான் பட்டனேன் வீரராசேந்திர கெண யாதரராயர்கு நூற் .. .. .. .. கல நெல்லு கொண்டு இருபத்து மூன்றவது கா

4. [ஏ]ற்றி நேராகக் கொண்டு தீட்டு வேண்டின இடத்து கண்டதில்லை கண்டதாகிலிச் சாசனம் உடையா[ர்]*வீ[மே]சுர தேவர் கோ[யி]*ல் தானம் அறிய கல்வெ[ட்டிக் குடுத்]தேன் குழமிண்டி* இருள் நீக்கிநான் பட்டன் எழுத்து

---

* குமண்டிலி என்றும் குழமிண்டி என்றும் இரு வேறுவிதமாக எழுதப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 6 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1194 |
| ஊர் : | மேலப்பாதி | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 179/1925 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | கோனேரின்மை கொண்டான் (மூன்றாம் குலோத்துங்கன்) | | |

இடம் : சுரகர ஈஸ்வரர் கோயில் மகாமண்டபத் தெற்கு ஜகதிப்படை

குறிப்புரை : கல்வெட்டின் முன்பகுதி கட்டடத்திற்குள் மறைக்கப்பட்டுள்ளது. அரசனுடைய நேர்முக ஆணை இது. குலோத்துங்க சோழக் கெணியாதராயனின் வேண்டுகோளுக்கிணங்க, இராஜாதிராஜ வளநாட்டு, வீதிவிடங்கச் சதுர்வேதிமங்கலத்திலுள்ள உடையரர் வீமேஸ்வரதேவர் கோயிற் தேவகன்மிகளுக்கும் ஸ்ரீமாகேசுரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியம் செய்வார்களுக்கும் அரசன் ஆணையாக அரங்கற்குடியில் உள்ள குளம் செங்கழுநீர்க்குளமாக வீமேசுரதேவர் கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்டதால் தேவதான நிலத்துக்கு நீர் இறைக்க இயலாமல் போனதால் நிலத்துக்குத் தேவையான நீரும் இறைத்துக் கொண்டு, செங்கழுநீர்ப்பூவும் இறைவனுக்குப் பயிரிட்டுக் கொள்ள வேண்டுமென ஆணையிடப்படுகிறது. இவ்வாணையைத் திருமந்திர ஓலை நெறியுடைச் சோழ மூவேந்த வேளான் என்பவன் எழுதியுள்ளான்.

கல்வெட்டு :

1. [சு]வத்தி [ஸ்ரீ]கோனேரின்மை கொண்டான் இராஜாயிராச வளநாட்டு வீதிவிடங்க சதுர்வேதி மங்கலத்து உடையார் வீமேசுரதேவர் கோயில் தேவர் கன்மிக்கும் ஸ்ரீமாகேசுரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வா . . . . . .
2. ழவளநாட்டு ப்ரஹ்மதேயம் அரங்கற்குடியில் திருவரங்க வதிக்கு மேற்கு மாடக்குடி எல்லைக்குக் கிழக்கு இவ்வூர் பிடாரி கோயிலுக்கு வடக்கு

நடுவுபட்ட குளம் நமக்கு செங்கழுநீர் ஆகக் கடவதாக் நம்ஓலை புறப்பட்டதென்றும் இக்குளத்தை [குவ்வா][1]கிழ . . . . . .

3. இதேவற்கு இவ்வூரில் தேவர் தானமான நிலத்து இறைக்க வேண்டும் நாள் இறைக்க ஒண்ணாமையாலே நீர்த்தட்டுமென்றும் இக்குளத்தை தேவதானமான நிலத்துக்கு இறைக்க வேண்டும் நாள் இறைத்து இத்தேவர்க்கு செங்க . . . . .

4. ஆக்கக்கடவதாக பெறவேணுமென்று குலோத்துங்க சோழக்கெணியாத ராயன் நமக்குச் சொன்னமையில் இப்படி செய்யக் கடவநாக நம் ஓலைப்புறப்பட்ட படி தவிர்ந்து நாங் . . . . .

5. ரமான நிலத்துக்கு இறைக்க வேண்டும் நாள் இறைத்து இத்தேவர்க்கு செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் ஆகக் கடவுதாகப் பண்ணுக எழுதிநான் திருமந்திர ஓலை நெறிஉடைச் சோழ மூவேந்த வேளான் எழுத்து நிகரிலி சோழ பல்லவரையனும் குருகுலரா . . . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 4 |
| வட்டம் : | தரங்கம்பாடி | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1220 |
| ஊர் : | நல்லாடை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 577/1962-63 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜன் | | |

இடம் : அக்னீஸ்வரர் கோயிற் கருவறை ஜகதிப்படை

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் [நாட்டு] நல்லாடை மங்கலமான குலோத்துங்க சோழபுரத்து உடையார் திருவனந்தீஸ்வரமுடையார் கோயிலில் திருப்பணி செய்து, எழுந்தருளிவித்த திருவாதவூர் பெருமாளுக்கு அரசனின் 4-ஆவது ஆட்சியாண்டு ஒரு சந்திவிளக்கெரிக்கவும், உச்சி சந்தியிலே திருவமுது செய்யக் கறியமுது வெஞ்சனங்களுக்காகப் பலரிடமிருந்து இரந்து பெற்ற 62 கலம் நெல்லில் தினந்தோறும் இருநாழி அரிசி அளக்கவும் கோயிற் சிவப்பிராமணர் ஒப்புக்கொண்ட செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. திரிபுவனச்சக்கரவத்திகள் சீராஜராஜ தேவர்க்கு . . . . . செயங் கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் [நாட்டு] [நல்லாடை] மங்கல மான குலோத்துங்க சோழபுரத்து உடையார் திருவநந்தீஸ்வரமுடையார்
2. கோயிலில் சீமாஹேஸ்வரர் அகாரணக்கண . . . . . திருப்பணி செய் விக்கிற சேரமான் தோழர் எழுந்தருளு[வித்த] திருவாதவூர் பெருமாள் சீபாதத்துக்கு இந்நாயநார் கோயிற் சிவப்பிரா[ம]*ணக் காணியுடைய
3. காசிபந் கூத்தநான மும்முடிச்சோழ பட்டனும் சோழநான திருஞான சம்மந்த பட்டனும் சோழநாந குலோத்துங்க சோழ பட்டனுள்ளிட்டாரும் திருச்சிற்றம்பலமுடையாநாந நாற்பத்தெண்ணாயிரப் பட்டனும் உய்யக் கொண்டாநா

4. ந கங்கை கொண்ட பட்டன் உள்ளிட்டாரும் மாணிக்கக் கூத்தநா்ன எதிரிலி சோழப் பட்டனும் இவ்வனைவோம் நாங்கள் உபைய[படி] இசைந்து கல்வெட்டிவித்த பரிசாவது இஆண்டார் சேரமாந் தோழர் திருவாதவூர் பெருமாளுக்குத் திருவமு[துக்குப]லர்

5. பக்கலு மிரந்த நெல்லாய் நாங்கள் கைக்கொண்ட நெல்லு அறுபத்திரு கலத்துக்கும் நாலாவ்து சித்திரை விஷு முதல் சந்திராதித்தவரை உச்சிச் சந்தியிலே நித்தம் இருநாழி அரிசியளந்து கறியமுது விற்கு விஞ்சனமுமிட்டுப் பூசை செலுத்திச் சோறு நாங்கள் கொள்ள . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 33 |
| வட்டம் : | தரங்கம்பாடி | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1211 |
| ஊர் : | நல்லாடை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 576/1962-63 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | திரிபுவன வீரன் மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | — |

இடம் : அக்னீஸ்வரர் கோயிற் கருவறை தெற்குச்சுவர்.

குறிப்புரை : ஜயங்கொண்ட சோழ வளநாட்டுக் குலோத்துங்கசோழ புரமான நல்லாடை மங்கலத்து நகரத்தார், அவ்வூர் நிலத்தில் பயிரிடுவதற்காகச் சிலருக்கு அளித்த உரிமையை உறுதி செய்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.[1]

1. இக்கல்வெட்டு தற்போது அங்கு காணப்படவில்லை. ஆதலால் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையிலிருந்து தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | தரங்கம்பாடி | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | நல்லாடை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 578/1962-62 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன்பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | — |

இடம் : அக்னீஸ்வரர்கோயில் முன்மண்டபம் வெளிப்புறக் கிழக்குச் சுவரிலுள்ள அடியவர் உருவத்தின் மேல்

குறிப்புரை : ''சேரமான் தோழர்'' - என்று கி.பி. 13-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது. இக்கோயிற் திருப்பணி செய்தவர் என்பதை க. வெ. எண் 1லுள்ள குறிப்பால் உணரலாம்.[1]

---

1. தற்போது இக்கல்வெட்டு அங்கு காணப்படவில்லையாதலால் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையிலிருந்து தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு: | 19 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1235 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 223/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | மூன்றாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்,

குறிப்புரை : மூன்றாம் இராஜராஜசோழன் காலத்தில் வீரட்டரனேஸ்வரமுடையார் கோயிலுக்குப் பலரிடமிருந்தும் அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டனர். சிலர் தானமாக கோயிலுக்கு அடிமைகளை அளித்துள்ளனர். இவ்வாறு பெறப்பட்ட அடிமைகள் அனைவரும் உறவு முறையினர் ஆவர். மேலும் இம்மன்னனுக்கு முன்னர் ஆட்சி புரிந்த இராஜாதிராஜன் ஆட்சிக் காலத்தில் விலைக்கு வாங்கிய அடிமைகளின் பெயர்கள், குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் விலைக்கு வாங்கிய அடிமைகளின் பெயர்கள் என மொத்தம் 100 அடிமைகளின் பெயர்கள் உறவு முறையுடன் பட்டியலிடப்பட்டுக் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இம்மன்னன் மூன்றாம் இராஜராஜன் எனத் தெரிகிறது. ஆகையால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மன்னர்கள் இரண்டாம் இராஜாதிராஜனாகவும் மூன்றாம் குலோத்துங்கனாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் காலத்தில் கல்லில் பொறிக்கப்படாததால், அவர்கள் காலத்தில் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளின் பெயர்களையும் தமதுகாலத்தில் பெறப்பட்ட அடிமைகளின் பெயர்களையடுத்து அதே கல்லிலும் பொறிப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ள செய்தி இக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

அக்காலங்களில் குடும்பம் குடும்பமாகக் கோயிலுக்கும் தனியாருக்கும் தங்களை அடிமைகளாக விற்றுக்கொண்டது ஏன் என்பது ஆய்வுக்குரியது.

முடையாந் பெருங்காடி பாரத்துவாஜி தில்லை நாகந் பெரிய நம்பி பக்கல் கொண்டுடைய வீரட்டந் சொறி இவள் மகந் பிடாரந் தவுமியந் வெண் காடு தேவந் சோமாசி . . . மா[றனும்] கண்ணுவநந் கருமாணிக்கம் சீரிளங்

5. கோ பட்டநும் பக்கல் கொண்ட வீரட்டந் பெற்றாள் கவிணியந் சூரிய தேவந் திருச்சிற்றம்பலமுடையாந் பக்கல் விலை கொண்ட பெருங் காடந் சோறுடையான் தவுமியந் வெண்காடு தேவந் திருச்சிற்றம்பல முடையாந் பட்டசோமாசியார் பக்கல் கொண்ட தத்தபட்டந் திரு இவள் மகந் அற்ப சந்தோஷி வீரட்டந் இவந் தங்கை ஆண்டமை பிரமதேச ராஜராஜச்சருப்பேதி மங்கலத்து பாரத்துவாஜி திருவிக்கிரமனும் இவந் தம்பி உ[மா சகி]தந் திருச்சிற்றம்பலமுடையானும் பக்கல் கொண்டுடைய கூத்தாடி சூற்றிய தேவி இவன் மகள் மண்டையாண்டி இவள் தம்பி கண்ணந் இவன் தங்

6. க பெற்றாள் இவந் தம்பி இராம தேவந் இவந் தங்கை உமையாண்டாள் இவள் தம்பி திருநட்டப் பெருமான் பெற்ற கோயில் சோழ விழுப்பரையன் பக்கல் கொண்ட கேசவந் சீ . . இவன் மகந் பெற்றாந் கேசவந் வேதம் உடைய பிரான் இவந் தங்கை அவ்வியம் புக்காள் இ . . . . . . . . கள் கூத்தாடி நங்கை இவன் தங்கை . . . க்குடுத்தி திருமங்க லத்து அரயந் நாகந் பிள்ளையாழ்வாந்நாந குலோத்துங்க சோழக்[ெ] கணியாத ராயர் பக்கல் விலை கொண்ட அரயந் உடையாண்டி இவள் மகள் அம்மச்சி நித்தந் திருவடியும் நித்தந் சிங்கனூரானும் பக்கல் கோயில் கொண்டு இவன் பக்க

7. ல் பெற்ற நித்தந் னம்பி இவந் தம்பி சிங்கப்பிரான் தவுமியந் வெண்காடு தேவந் ஆதித்த தேவந் பக்கல் கொண்ட வீரட்டந் சோறுடையாள் இவள் மகள் ளாசு பாரத்துவாசி இரவிதாஸந் சக்கரபாணி பிராம்மணி வாழ்வி தாட்சானி பக்கல் கொண்டு பிராந்தக தேய்ந் ஸ்ரீகிருஷ்ணந் திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற் யாண்டு ஒன்பதாவது கவினிய நகானூ[ர்ஆ]தி சண்டேசுர தேவர்கு விற்ற அடியாள் ஆவாள் இவ்வூர் கவுணியன் சூரிய தேவன் திருச்சிற்றம்பல முடையான் பக்கல் விலை கொண்டுடையநாய் இத்தேவர் சிவநாமத்து இக்கவிணியன் நாகனூரன் சூற்றி பெருங்காடி பின்பு இவன் பெற்ற மகள் உன்

8. டயள் இவன் தங்கை பெரியாள் இவள் தம்பி சூற்றி இவன் தங்கை சோறாணட்டி இவள் தம்பி தியம்பகன் இ பெண்களில் பெரியாள் மகன் சூற்றி இளவாண்டை நாளில் வரகூரான் ஜயஸிம்ஹ குலகாலச் சருப்பேதி

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவற்கு யாண்டு பத்தொன்பதாவது விருதராஜ பயங்கர [வளநாட்டுக்]குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமு[டை]யார் மூலபிருத்தியரான சண்டேசுர தேவ[ற்]கு [திருவாய்மொழிந்]தருளின திருமுகப்படி பெற்ற அடிமைக்கும் பலர் பக்கலும் விலைகொண்ட அடிமைக்கும் தானத்தால் பெற்ற அடிமைக்கும் கல்வெட்டினபடி திருமுகப்படி ஆழ்வாரடிமையாய் பெற்ற ஆச்சபிடாரன் இவன் அகமுடையாள் சோழி இவன் மகன் எழுவடியான் இவந் தம்பி தேவன் இவன் தம்பி திருவெண்காடுடையான் இவந் தம்பி வள்

2. ளல் இந்த ஆச்சபிடாரன் மகள் ஆளுடையாள் இவள் மகன் திருவெண் காடுடையாந் இவந் தம்பி மணவாளன் இவந் தங்கை ஆண்ட நங்கை இவள் தங்கை செல்வம் வீரவிநோத வேளான் இவந் தம்பி சிங்கபிரான் இவன் தங்கை மண்டையாண்டி அழ[கி]யாந் மகந் வ . . . . . . . . . . . . [த]ங்கை செல்வம் இவள் மகன் பெருமாள் இவன் தங்கை ஆண்டாள் சிவசரணத்தின் அகமுடையாள் மண்டை இவள் மகந் பெருங்காடந் இவந் தம்பி வேங்கடம் இவந் தம்பி வள்ளல் இவந் தங்கை பெற்றாள் இவள் . . . . . . . . உடையாந் இவன் தங்கை பெரியாள் இந்தப் பெருங்காடந் சிறிய தாய் ஆழ்வா நங்கை இவள் மகந் வடையாந் இவந் தம்பி பெருமாள் இவந் தங்கை பெரியாள் இவள் மகள் ஆண்டாள் இ

3. ப்பெரியாள் தங்கை செல்வம் இவள் ம[க்]கள் உமையாண்டாள் சீவேதவனப் பெருமாள் நங்கை இச்செல்வத்தின் தங்கை பொற்சாத்தி தாழஞ்சேரிக் கம்பந் மருமகன் திருவீரட்டானமுடையான் கோவிந்தன் ஆச்சபிடாரன் உடப்பிறந்தாள் நாராயணி இவள் மகள் செல்வம் இவள் மகந் திருவெண்காடுடையாந் இவந் தம்பி செல்வந் இவந்தம்[பி உய்]ய வந்தாந் இவந் தம்பி இருள்நீக்கி கவிணிந உத்தம சோழந் சூரிய தேவர் தாநம் பண்ணி[னே]பர் ஆடவலாந் கொத்தில் செல்வி இவள் மக்கள் இவள் தங்கை பெற்றாள் கொத்து இவ்ள் தங்கை திருச்சிற்றம்பலமுடை யாள் சடையன் அகமுடையாள் செல்கொத்து வெண்ணைக் கூத்தந் அகமுடையாள் பெருங்காடி மகந் கோவிஞ்சி கொத்து இவள் தங்[கை*] மந்றமுடையாள் கொத்து இவ

4. ள் தம்பி திருச்சிற்றம்பலமுடையாந் நாற்பத்தெண்ணாயிரப் பிச்சந் அகமுடையாள் தங்கை கொத்து சந்திரந் அ[க]*முடையாள் திருவிந் கொத்து கீர்த்தி நாராயணஞ் சிங்கப்பிராந் பக்கல் தாநத்தால் பெற்ற சந்திரசேகர திருவெண்காட்டு நங்கை இவள் மகந் சோறுடையான் இவன் தங்கை பெற்றான் கவிணியன் சூரிய தேவந் தெக்ஷணாமூற்த்தி பக்கல் விலை கொண்டுடைய பெருங்காடந் கெங்கை இவன் மகந் திருச்சிற்றம்பல

மங்கலத்து காஸ்யூபந் தவ தேவிசந் . . . பட்டநாந அருமாரி நம்பி ஆதி சண்டேசுவர தேவற்க்கு விற்றுக் குடுத்த அடியாளாவாள் பொற்ப்பா . . . யும் இவள் மகள் உய்ய வந்தாளும் இவள் தங்கை செல்வமும் [கல்வெட்டு எண் 2] திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜாயிராஜ தேவற்கு யாண்டு ஏழாவது நாளில் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு ஆற்றூராந ராஜநாராயணச் சருப்பேதி மங்கலத்து திரிபுவன மாதேவிச் சேரி குரவிசிரின வீரட்டந்

9. பிராமணி உய்ய வந்தாள் சாநி கோமுத்தந் மகன் குரவி நாராயண பட்டநை முதுகண்ணாகக் கொண்டு இவ்வுய்யவந்தாள் [சா]நி பக்கல் காசு சுலி காசு அறுபதுக்கு விலைகொண்ட நங்கை மகள் அம்மையாண் டாள் இவள் மகள் பெரியாண்டாள் இவள் தங்கை நித்த[கல்யா]ணப் பிச்சநு . . . . . . . . . . . இவள் தங்கை குளுந்தாள் இவ[ள்]* தங்கை ஙங்கை திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க தேவற்க்கு யாண்டு பத்தாவது செயங்கொண்ட சோழ வளநாட்டு விளைநாட்டு விளை நகரான நித்த விநோதச் சதுப்பேதிமங்கலத்துப் பாலாசிரி[ய]ந் இளைய ச்சங்[கர]ச் சிவனும் இவந் பிந் நொநாத்தமையன் மகந் சிவந் சங்கரநும் பக்கல் பத்தொந்பது காசுக்கு விலைகொண்ட [அடிமை] அரை

10. யாநாகமுடையாள் இவள் மகள் சோறுடையாள் செல்வி இவள் மகள் சோறுடையாள் சீதேவி நங்கை இவள் மகள் சோறுடையாள் ஆழ்வாந் நங் . . . ள் மகன் சோறுடையான் பெருங்காடன் இவன் மகன் சோறு டையாந் புற்றிடங் கொண்டான்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 6 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1152 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 224/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கையான விக்கிரமசோழச் சதுர்வேதி மங்கலத்து மஹா ஸபையார் திருவீரட்டானமுடையார்க்கு திருஅர்த்த சாமத்துக்குச் செங்கழுநீர்ப்பூத் திருப்பள்ளித்தாமத்திற்காக நிலம் இறையிலி செய்து கொடுத்ததைக் குறிக்கிறது. ஐம்பது ஆண்டுகளாக உரிமையற்றுப் பாழாய்க் கிடந்த நிலத்தினைத் திருத்தி நெல் பயிர் உள்ளிட்ட பயிர்கள் செய்து இத்தேவர்க்குத் திருவர்த்தசாமத்துக்கு நாள் ஒன்றுக்கு 100 செங்கழுநீர்ப்பூத் திருப்பள்ளித்தாமம் இடுவதாக இக்கோயிற் காப்பிட்டிருக்கும் திருஞானசம்பந்தர் பல்ர்பக்கலும் ஒட்டி விரந்து பெற்று ஸ்ரீபண்டாரத்திற் செலுத்திய காசு நூற்றறுபதுங் கொண்டு மகா சபையார் ஊர்க்கீழிறையிலி செய்து கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவத்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு ௬ ஆவது மிதுந நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரிதியையும் சநிக்கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கையான விக்கிரமசோழச் சருப்பேதி மங்க[லத்தும] மஹாஸபையோம் நம்மூர் திருவீரட்டானமுடையார் கோயிலில் மூலஸ்தாநான ஆதிசண்டேசுவர தேவர்க்கு நாங்கள் ஊர்க்கீழ் இறையிலி செய்து குடுத்த பரிசாவது உடையார் திருவீரட்டானமுடையார்க்குத் திருவொத்த சாமத்துக்கு சந்திராதித்தவரை திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித்தாமஞ் சாத்தியருள நாங்கள் இறையிலி செய்து குடுத்த நிலமாவது பவித்திர மாணிக்க

2. வதிக்கு மேற்க்கு ராஜராஜ வாய்க்காலுக்கு தெற்க்கு முதல்க் கண்ணாற்று முதற்ச் சதிரத்து வடகிழக்கடைய பாரதாயன் வெக்குறங்கந் சரு[ப்]*பேதி பேரால்க் கிடந்த நீங்கல் ஊர்ப்படி நிலம்மாகாணி அரைக்காணி முந்திரிகைக் கீழிருமாவரை அரைக்காணிக் கீழரையும் இத.. க்குப் பாரதாயன் நாராயணந் திருவரங்கமானி பேரால் நீங்கலுள்ப்பட நிலம் அரைக்காணியும் இதன் மேற்கு இத்தேவர் தேவதானத்துக்கு மேற்கு சொல்லாமற் சுட்டான பேரால் நிலத்துக் கிழக்கடைய நிலம் காணியரைக்காணிக் கீழ்க் காலும் ஆக நிலம் ஒரு மாக்காணியரைக்காணி முந்திரிகைக் கீழேழு மாவரைக்காணிக் கீழரையினால் விரிவு நிலம் அரை இந்நிலம் அ

3. ரையும் ஐம்பது ஸம்வத்ஸரத்திநுத் தேசஞ் சொம்முடையோமென்று அனுபவிப்பாரின்றியே இந்நிலம் ஸர்வமாந்ய யெங்களுக்[கு] இந்நிலத்துக்கு அருபி யேற்றிக் கடமை குடிமை இறுத்துப் பிந்பு மிந்நிலம் பற்றிலியாய்ப் பாழாய்ப் பயிற் செய்து கடமை குடிமை யிறுப்ப..ன்றியே தட்டி[றை] . . . . . . ருகிறமையில் இன்னிலந் திருத்தி நெல்ப் பயிருள்ளிட்ட பயிர்கள் செய்து இத்தேவர்க்குச் சந்திராதித்தவற் ப்ரஸூதிகமாக நாள் ஒன்றுக்கு நூறு செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமம் நித்தறம்படி திருவொத் சாமத்துக்குச் சார்த்தக் கடவதாகவும் இந்நிலம் ஊர்க் கீழிறையிலி செய்கைக்கு இக்கோயிற் க[ா][ப்]பிட்டிருக்குந் திருஞான சம்பந்தர் பலர் பக்கலும் ஓட்டிலிரந்து ஸ்ரீபண்டாரத்திருந்த காசாய் நாங்களிந்நிலம் அரையுமிறையி

4. லி செய்து குடுத்துக் கீழ்முதலுட்ப்பட ஸபையோமாய்க் கொண்ட காசு நூற்றறுபது இக்காசு நூற்றறுபதுங் கொண்டு இ[ந்நி]லம் ஊற்கீழி[றை]யிலி செய்து குடுத்தோம் இவ்வாதிசண்டேஸ்வர தேவற்க்கு இம்மஹாஸபையோம் இந்நிலத்து மேநோக்கின மரமுங் கீணோ[க்கி]ன கிணறும் இ..து மற்றுமெப்பேர்ற்ப்பட்ட வரிமைகளுமகப்பட ஊற்க் கீழிறையிலி செய்து குடுத்தோம் இவ்வாதிசண்டேஸ்வரர் இம்மஹாஸபையோம் இந்நிலத்துக்கு அந்தராய வினியோகம் உள்ளிட்ட குடிமைகள் நாங்களே இறுக்கக் கடவோமாகவும் இந்நில[ம்] முதலிகள் கேட்டு இ[றை]யிலி மாறிநதாகில் இந்நிலத்தாலுள்ள சில்வரி பெருவரி மற்று மெற்பே(ர)ற்பட்ட குடிமை யுள்ளிட்டின நாங்களே இறுக்கக் கடவோமா

5. கவும் இப்படி ஸம்மதித்து ஊர்க்கீழிறையிலி செய்தபடிக்குக் கல்லிலும் செம்பிலும் வெட்டக்கடவதாகவும் இப்படி ஸம்மதி[த்து] ஊர்க்கீழிறையிலி செய்து குடுத்தோம் இவ்வாதிசண்டேஸ்வரதேவற்கு இம்மஹாஸபையோம் பணியால் ஊர்க்கணக்குக் குறுக்கையுடையா[ர்தி]ருச் சிற்றம்பல[மு]டையான் திருநடம்புரிவானான ஸுஹ்ருதப்பிரியனேந் இவையெந்

எழுத்து இப்படிக்குக் கவிணியந் நக்கநாதநான பெரியகோயில் [நம்பி] எழுத்து இப்படிக்குத்தொவுமியந் சீகாரி மாறன் சிங்கப்பிராந் பட்டன் எழுத்து இப்படிக்கு இவை தெளவுமியந் கருமாணிக்கந் திருவேங்கட பட்டந் எழுத்து இப்படிக்குப் பாரதாயந் சங்கரநாராயணந் எழுத்து இப்படிக்கிவை திருப்பேற் சீராம பட்டந் எழுத்து இப்படிக்கு கிளிநலூர்ப் பரமேஸ்வர

6. ட்டந் எழுத்து இப்படியறிவேந் பாரத்துவாசந் பெரியநம்பி பட்டந் எழுத்து இப்படியறி[வேந்] வேந்தெளமயந் வெண்காடு தேவந் திருநீல கண்டந் எழுத்து [இப்]படிக்கு தவுமியந் வெண்காடு தேவந் கருமாணிக்க பட்டந் எழுத்து இப்படிக்கு சிவமான தேவந் எழுத்து இப்படிக்கு பாரதாயந் குமார மிகைய்யுகிரா[ளி] எழுத்து இப்படியறிவேந் தவுமியந் சிகாரிமாறன் திருநீலகண்டபட்டந் எழுத்து இப்படிக்குப் பாரதாயந் சிங்கப்பிராந் சீரங்கநாத[ந்] எழுத்து இப்படி அறிவேந் பாரதாயந் சிங்கநுய்ய. வந்தாந் பட்டந் எழுத்து இப்படிக்குப் பாரதாயந் சீராமந் கையுகிராளி பட்டந் அக்கி சித்தந் எழுத்து இப்படியறிவேந் தவுமிய[ந் திரு] வெண்காடு தேவந் நாராயண பட்டந் எழுத்து இப்படி யறிவேந் தவுமியந் சிகாரி. மாறந்காடு சிறுக்க பட்டந் எழுத்து இப்படிக்கு தவுமியந்

7. கருமாணிக்கந் கையுகிரான் பட்டந் எழுத்து இப்படிக்குத் தவுமியந் வெண்காடு தேவந் ஆதித்த தேவந் எழுத்து இப்படி அறிவேந் சேஞலூர் புருசோத்தம பட்டந் எழுத்து இப்படிக்கு கண்ணுவந் கரு மாணிக்கந் சீரிளங்கோவெந் எழுத்து இப்படிக்கு பாரத்துவாசி கோவிந்தந் சுப்பிரமணி(ண)யநேந் எழுத்து இப்படிக்கு கோவிந்த பட்டந் எழுத்து இப்படிக்கு சுப்பிரமணியன் சம..யபிரியன் எழுத்து இப்படிக்கு இவை காஸ்யபந் கட்ட நாகந் இவை எந்நெழுத்து இப்படிக்கு திருக் கடவூர் ஹோஸ்ஸ்ரீந் பாண்டந்..தந் எழுத்து இப்படியறிவேன் கவிணியந் .... எழுத்து இப்படியறிவேன் காஸ்யபந் திருச்சி

8. ற்றம்பலமுடையாந் அம்பலத்தடிகள் எழுத்து இப்படிக்கு கவிணியந் நாகன் கோவிந்த நம்பி எழுத்து இப்படிக்கு கவிணியந் தியம்பகன் திருவெண்காடு பட்டன் எழுத்து இப்படி அறிவேன் சீராமபட்ட ஹோமயாக யார்[1] மகன் சங்க[ர*] நாராயண பட்டன் எழுத்து இப்படிக்கு தவுமயன் சூரிய தேவன் திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து இப்படிக்கு இவை திருப்பேர் உமைநம்பி எழுத்து இப்படிக்கு இவை திருக்கடவூர் பாலாசிரியன் ஆன நதவார் கழலேன் எழுத்து இப்படிக்கு இவை

கவுமியன் சீகாரி மாறன் கருமாணிக்கபட்டன் எழுத்து இப்படிக்கு பொன்னம்பல நம்பி எழுத்து இப்படிக்கு இவை கவிணியன் சூரிய தேவன் பட்ட(னே)ன் எழுத்து இப்படி அறிவே

9. ன் சேளு லூர் கருணாகர நம்பியென் எழுத்து

---

1. ஸோமயாசியரர் – என்று படிக்கவும்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 32 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1210 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 225/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | -- |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| அரசன் : | திரிபுவன வீரதேவன் (மூன்றாம் குலோத்துங்கன்) | | |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபம்

குறிப்புரை : விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கை உடையார் திரு வீரட்டானமுடையார் கோயிலில் இரண்டு சந்திவிளக்கெரிப்பதற்கு நானூற்று இருபது காசுகளை இருவர் வைத்துள்ளனர். அக்காசுக்களைப் பெற்றுக் கொண்டு இக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்க சம்மதித்து இசைவுதீட்டு கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## கல்வெட்டு

1. திரிபுவனச்சக்கரவத்திகள் மதுரையும் ஈழமுங் கருவூரு[ம்பா]ண்டியன் முடித்தலையுங் கொண்டு வீராஅவிஷேகமும் விஜயா அவிஷேகமும் [ப]ண்ணி அருளின ஸ்ரீதிரிபுவன வீரதேவற்கு யாண்டு முப்பத்திரண் டாவது விருதராசபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுத் திருக் குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார் கோயில் முப்பது வட்டத்துக் காணி உடைய காஶ்யபன் திருவேகம்பமுடையான் பொற் கோயிற் பட்டன் உள்ளிட்டாரும் காஶ்யபன் திருவேகம்பமுடையான் கூத்தராய் வீதி போந்தானான கூத்தராய் வீதி போத்த பட்டனும் காஶ்யபன் திருநட்ட பெருமானாந அண்ட நாயக பட்டன் உள்ளிட் டாரும் காஶ்யபன் நாயகன் சிவதவனப்பெருமானாந குலோத்துங்க சோழ பட்டன் கூத்தராய் வீதிபேர்த்தானும் ஸரஸ்வதி நங்கையாண்டாந் திருவேகம்பமுடைடான் திருஞானசம்பந்

2. த பட்டன் உள்ளிட்டாரும் ஹாஜஒவாஜி கூத்தாடுவான் ஆழ்வானான இனையாரமாறனான வீரவினோத பட்டனும் மவுதன் ஆண்டானான ராஜராஜ பட்டனும் காசிபன் அனலேத்து கையனான கூத்தராய் வீதி பேர்த்தானும் காசிபன் அடிகள் பெரியான் சண்டேஸ்வர பட்டனும் காசிபன் நாயகன் சிவகாம சுந்தரி பட்டனும் காசிபன் சிறியாழ்வான் உடைய பி[ள்*]ளையும் காசிபன் பெருமான் சிவதவன வரத பட்டனும் காஸ்யபன் அணங்குமைபாகப[ட்]*டன் பாரியை இளையாண்டாள் சாநியும் காஸ்யபன் பதஞ்சலி பொன் குறை[வற]க் குடுத்த பட்டனும் உள்ளிட்ட இவ்வனைவோம் இக்கோயில் ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வாற்க்கும் ஸ்ரீகாரியஞ் செய்வாற்க்கும் தேவர் கன்மி கோயிற் கணக்கனுக்கும் நாங்கள் உ[பய]ப்படியால் [இசை]வு தீட்டு பண்ணிக் குடுத்த பரிசாவது உடையார் கங்கை கொண்ட சோளீஸ்வரமுடையார் தேவதானம் இநாட்டு பனையூரிலி[ருக்கும்*][காணி] உடைய பாதவூருடையான் திருச்சிற்றம்பலமுடைய[ா*]னும் இவிவ் . . . . . .

3. [நாய]கன் முடி கொண்டானும் இவ்விரு[வரும் இன்]நாயநார் திருமுன்பே இரவை ஸந்தியிலே இரண்டு திருவிளக்கு எரிக்க கடவதாக இவர்கள் பக்கல் நாங்கள் உபையமாக கொண்ட காசு சாஉ இக்காசு நானுற்று இருபதும் ப[ழ]மையான[1] பெரியான திருஞானசம்பந்தர் சந்திராதித்த வரை தந்தித்திருளக்கு[2] இட முப்பது வட்டத்து சிவப்பிரா[ம]*ணர் வசங் குடுத்த கா[சு]* இருநூற்று இருபது

---

1. 'பாலுழான் என்றிருத்தல் வேண்டும் (கல்வெட்டு எண் 6-ல் பாலுழான் பெரியான் திருஞானசம்பந்தன் என்று வருதல் காண்க)

2. 'சந்தித் திருவிளக்கு' - என்றிருக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 11 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1189 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 226/1917 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்த மண்டப வடக்கு முப்பட்டைக்குமுதம்.

குறிப்புரை : விருதராஜபயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார் கோயிலில் சந்தித் திருவிளக்கு 20 எரிப்பதற்கு, இக் கோயிலைச் சார்ந்த ஆண்டார் பாலுழான் பெரியான் திருஞானசம்பந்தர் பலர் பக்கலும் நிலம் பெற்றுத் திருவிளக்குப்புறமாகக் கோயிலுக்கு அளித்ததைத் தெரிவிக்கிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு ௰௧ஆவது மகர நாயற்று ௨௰௨வபக்ஷத்து ஸப்தமியும் திங்கள்க் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டு திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார் கோயிலில் கும்பிட்டு இருக்கும் ஆண்டார் பாலுழாந் பெரியாந் திருஞானசம்பந்தர் இந்நாயநார்க்கு[த்]* (தி)திருவிளக்கு புறமாகப் பலர் பக்கலும் கொண்டு விட்ட நிலமாய் இந்நாயநார் கோயில்த் திருமண்டபத்தே கல்வெட்ட கடவ நிலத்துக்கு உள்வரி குறுக்கையான விக்கிரமசோழ சருப்பேதி மங்கலத்து வடபக்கத்து புவன முழுதுடைவதிக்கு மேற்க்கு திரிபுவன சுன்தர வாக்காலுக்கு தெற்க்கு

2. ஆறாங் கண்ணாற்றும் மூன்றாஞ் சதிரத்தும் தெந் கிழக்கடைய பாரத்துவாசி குமாரசுவாமி கைய்யுகிராளி பட்டந் பக்கலும் இவந் தம்பி சீராம பட்டந் பக்கலும் இவந் தம்பி ஆராவமுது பட்டந் பக்கலும் ஆக [இம்]மூவர் பக்கலும் ஆக [இம்]மூவர் பக்கலும் ஆகவிலை கொண்டு உடையநிலம் காணி கீழரையே மூன்றுமா முக்காணியும் இத்தேவற்க்கு ஏழாவது இவ்வூர் வடபக்கத்துப் புவனமுழுதுடை வதிக்கு மேற்க்கு திரிபுவன சுந்தர வாய்க்காலுக்கு தெற்க்கு ஐஞ்சா[ங்க]ண்ணாற்றும் ஆறாங்கண்ணாற்றும் மூன்றாஞ் சதிரத்தும் பாரத்துவாசி குமாரசுவாமி சீராமபட்டந் பக்கல் விலை கொண்டுடைய நிலம் காணி முந்திரிகை கீழரையே மூன்று மா முக்காணியும் இத்தேவற்க்கு ஐஞ்சாவது இவ்வூர் வானவன் மாதேவி வதிக்கு கிழக்கு இராசராச வாய்க்காலுக்கு வடக்கு இரண்டாங் கண்ணாற்று முதல்ச் சதிரத்து பிச்சநம்பியும் சிவசரணமும்

3. பக்கல் கொண்ட மனைக்குழி முப்பத்து இரண்டினால் நிலம் முந்திரி கையும் ஆக இப்படி பலவர் பக்கலும் சண்டேசுவரப் பெரு விலை கொண்டு சந்தித் திருவிளக்கு இருபதுக்கு திருவிளக்குப்புறமாக கொண்டு விட்ட நிலம் ஃபஉ கீழ் வறு இந்நிலம் அரைமா அரைக்காணி முந்திரிகை கீழ் காலே அரைக்காலும் இவர் கொண்டுவிட்டமைக்கு விலைப் பிரமாணத்தில் மேல்ப்பட்ட காசுக்கு சந்திவிளக்குக் காசு இட்டார் கோவனெட்டி எச்சமுத்தி இட்டகாசு ௲ஙஉம்

---

கல்வெட்டு இத்துடன் நின்றுவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 26 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1204 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 227/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 5 |
| மன்னன் : | மூன்றாம் குலோத்துங்கன் | | |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபக் குமுதம்.

குறிப்புரை : கல்வெட்டு முடிவுறவில்லை. இது ஒரு மனை விலைப் பிரமாண இசைவுத் தீட்டு. கிணற்றிலிருந்து நீர் இறைக்கவும், அந்நீர் பாய வாய்க்கால் வெட்டவும், விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுக் குறுக்கையான விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலத்துத் திருக்கடவூர் பாரத்துவாஜி சூரியதேவன் நத்தன் என்பான் தன்னுடைய மனையைத் திருநாமத்துக் காணியாக இவ்வூர்க் கோயிலுக்கு விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்தி[க]*ள் மதுரையும் இழமும் கொங்கான வீரசோழ மண்டலமும் பாண்டிய[ன்]* முடி[த்]*தலையும் கொண்டரு[ளின]1 ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவ[ற்]*கு யா[ண்]டு* உ௰௬ ஆவது ஸிம்ஹ நாயற்று அபர பக்ஷத்து த்விதியையும் திங்கள் கி[ழ]மையும் பெற்ற உத்திரட்டாதி நாள் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டு குறுக்கையான விக்கிரமசோ[ழ]ச் சதுவேத்தி மங்கலத்து திருக் கடவூர் பாரத்துவாசி சூரியதேவந் நத்தநேன் மனை விலைப் பிரமாண இசைவு தீட்டு இவ்வூர் உடையார் கோயில் மூலபிருத்தியரான ஆதி சண்டேஸ்வர தேவர் திருநாமத்து நான் விற்று குடுத்த மனையாவது இவ்வூர் வாஸ்துவில் வடக்கில் மங்]கல] வீதியில் வடசிறகில் கிழக்கிட்டு என்னுதும் என் தமையன் வழியில் உள்ள(ா)துமாய் இருந்த மனை

நாலே முக்காலில் மேற்கடைய என்னுதாய் இருந்த மனை இர[ண்]*டே முக்கால் மே[ற்]*கடைய இத்தேவர் திருநாமத்து நான் விற்றுக்குடுத்த மனையினால் கு . . . . . முப்பத்தெ[ான்]பதும் இதில் மேல்நோக்கினத் தெங்குள்ளிட்ட மரங்க(ங்)ளுங் கீழ் னோக்கின கிணறும் இம்மனை இறையாக இதன் கீழை மனைகளில் வடதலையிலே[கிடந்த கிணற்றில் ஏத்தம்] இறைக்கவும் ஏத்த நில[ம்] குழியும் இம்மனைகளில் வடவாசறுதியே நீள்[போகு] வாய்க்காலும் இவ்வாய்க்காலாலே புகவும் பாயவும் உரிமையும் அகப்பட விற்றுக்குடுத்து . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நூறு கொண்டபடி ஆவது இத்தேவர் . . . . . . ட்டு இருக்க . . . . . .

2. ன் திருநான சம்பந்தர் இவ்வூர் வெள்ளாழன் குறுக்கை உடையான் பக்க[ல்] . . . . . . .

---

1. 'ஈழமும்' என்றிருத்தல் வேண்டும்.
2. 'அருளின' என்றிருத்தல் வேண்டும்.
   கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 13 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1179 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 228/1917 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 6 |
| மன்னன் : | இரண்டாம் இராஜாதிராஜன் | | |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு ஜகதி.

குறிப்புரை : கங்கை கொண்ட சோழீஸ்வரமுடையார் தேவதானம் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுப் பனையூர் திருச்சாமுண்டீஸ்வரமுடையார் கோயிலில் அகப்பரிவாரப் பெண்டு அரையன் உமையாழ்வி எழுந்தருளிவித்த திருப்பள்ளியறை நாச்சியார், ஆட்கொண்ட நாயக தேவர்க்கும், நாச்சியார்க்கும் திருப்படி மாற்றுக்கு அவளே கொடுத்து வந்த நெல் விட்டுப் போனமையால் முப்பது வட்டத்து சிவப்பிராமணர் மீண்டும் புதுப்பித்து நூற்றிருபது காசுகள் அவளிடமிருந்து கைக்கொண்டு அதன் பொலிசையால் திருவமுதுபடி செலவுக்காக நாள் ஒன்றுக்கு குறுணி இரு நாழி நெல் அளந்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் மதுரையு மீழமும் கொண்டருளிந ஸ்ரீ ராஜாதிராஜ தேவற்க்கு யாண்டு ௰௩ பதிந்மூந்றாவது கங்கைகொண்ட சோளீஸ்வரமுடையார் தேவதாநம் விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டுப் பனையூர்த் திருச்சாமுண்டீசுரமுடையார் கோயிலில் முப்பது வட்டத்துக் காணியுடைய ஶிவப்ராஹ்மணரோம் காஶ்யபந் பெரியா நாதித்த தேவநாந சந்திரசேகர பட்டனும் கௌசிகந் காலகாலந் கூத்தாடி பட்டநும் மடலிகு நீக்கும . . . ராந பெரியாழ்வி நாற்பத் தெண்ணாயிர பட்டநும் அகத்தியந் பிச்ச தேவத் திருக்கழிப்பாலை திருச்சிற்றம்

2. பல பட்டநும் இவ்வனைவோம் இவ்வூரில் காணியுடைய பெரிய அகப்பரிவாரப் பெண்டுகளில் அரையந் உமையாழ்விக்கு நாங்கள் உபையத் தீட்டுக் குடுத்த பரிசாவது இந்நாயநார்க்கு இவளெழுந் தருளுவித்த திருப்பள்ளியறை நாச்சியார்க்கும் ஆள்கொண்ட நாயக தேவர்க்கும் நாச்சியார்க்கும் திருப்படி மாற்றுக்கு நாள் ஒன்றுக்கு குறுணி இருநாழியாக வந்த நெல் விட்டு வந்தமையில் இது சந்திராதித் தவற் செல்கைக்கு இவள் பக்கல் இவ்வாண்டை ஆநிமாஸத்து உபைய மாகச் செலுத்துகைக்கு கைக்கொண்ட காசு ௱௨0 இக்காசு நூற்றிருபதும் முதலாய் இதில் பொலிசை

3. க்கு நாள் ஒன்றுக்குக் குறுணி இருநாழியாக வந்த நெல் இத்தேவர் களுக்கு திருவமுதுபடிக்கு உடலாக அளந்து செலுத்தக் கடவோமாகவும் இப்படி எங்கள் பக்கல் கொண்டுடையாரும் பெற்றுடையாரும் இப்படி செலுத்தக் கடவதாகவும் இப்படிக்கு கல்வெட்டிக் கொள்ளக்கடவ தாகவும் இப்படி . . . . .

---

கல்வெட்டின் மீதிப்பகுதி மண்ணில் புதைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 2 |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1180 |
| ஊர் : | கொறுக்கை | | |
| மொழி : | தமிழ் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 229/1917 |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| அரசன் : | மூன்றாம் குலோத்துங்கன் | ஊர்க் கல்வெட்டு எண் | 7 |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு ஜகதி.

குறிப்புரை : விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார் கோயில் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களும் தேவகன்மிகளும் கோயிற் கணக்கரும் பெரிய தேவர் [இரண்டாம்] இராஜராஜன் காலத்தில் கொடுத்த தானத்தை மீண்டும் [மூன்றாம்] குலோத்துங்கன் காலத்தில் இவ்வூர் அபிமான பூஷனுக்கு உபயம் பண்ணி உறுதி செய்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்ஸ்ரீ திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு இரண்டாவது விருதராஜ பயங்கர வளநாட்டு குறுக்கைநாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டாநமுடையார் கோயிலில் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்[காணி] செய்வார்களும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களும்

2. தேவகந்மிகளும் கோயில் கணக்கரும் உள்ளிட்ட இவ்வனைவோம் இவ்வூர் அபிமாந பூஷனுக்கு நாங்கள் உபையம் பண்ணிக்குடுத்த பரிசாவது பெரிய தேவர் ராஜராஜதேவர்[கு] பத்தொந்பதாவது நாளில் இவர்கள் அனுப . . . . . .

---

இக்கல்வெட்டு தற்பொழுது முழுமையாக இல்லை. ஆனால் 1918-ல் இந்தியத் தொல்லியல் துறை படியெடுத்தபோது முழுமையும் இருந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 12 – ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 230/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 8 |
| மன்னன் : | மூன்றாம் இராஜராஜ தேவர் | | |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்கு ஜகதி.

குறிப்புரை : வெள்ளாளன் கடுவங்குடையான் என்பானுடைய அகமுடையாள் திருவெண்காடு நங்கையான அறமுடையாள் விருதராஜ பயங்கர வளநாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார் தேவாரத் திருவாசலினுள்ளே ஒரு திருநுந்தா விளக்கெரிக்க அளித்த இரண்டாயிரம் காசினைக் கொண்டு திருநாமக்காணி நிலத்தில் சிறிது திருத்தித் தெங்கு மா இலுப்பை உள்ளிட்டன பயிரிட்டு மேற்படி விளக்கெரிக்கப்பட்ட செய்தி இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. மேலும் தில்லைப் பெருமாள் திருவோடைக்கரை பாழ் பட்டு கிடந்தமையால் அதையும் சரிசெய்திருக்க வேண்டும். கல்வெட்டின் இறுதிப்பகுதி கிடைக்கவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு . . . . . . . . . . . .
2. . . தெசியும் வியாக்கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் விருத ராஜபயங்கர வளநாட்டுத் திருக்கு
3. [றுக்]கை உடையார் திருவீரட்டானமுடையார் கோயில் ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வாரும்

4. [ஸ்ரீ]காரியம் செய்வாரும் தேவகன்மி கோயி[ற்கணக்]கரும் . . . . . . .
. . . . . . . . . . நாட் . . .

5. தி மங்கலத்து இருக்கும் வெள்ளாழ[ரி]*(க)ல் கடுவங்குடையான் அக
முடையாள் திருவெண்

6. [கா]டு நங்கையான அறமுடையாள் [தே]தவாரத் திருவாசலுச்கு உள்ளே
ஒரு திருநந்தாவிளக்கெரிக்க இவள் இ

7. ரண்டாயிரங் காசு கொடு வந்து இக்காசை இட்டு மாநிலையா
யிருப்பது தீது நி[ல]த்தைக் கொண்டு இற்றை நாள் மு[த]

8. ல் விளக்குக் கெண்ணைக்குடலாகக் கொள்ள வேணுமென்று தானத்
தார்[க்]*குச் சொன்னமையில் இ

9. க்காசு இரண்டாயிரமும் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்குவித்துக் கொண்டு
திருநாமத்துக்காணியில் திரு

10. த்திப் பயிர் செ[ய்ய]லாம் நிலங்களிலே சி[று]து நிலத்தைத் திருத்தி
தெங்கு மா இலுப்பை உள்ளிட்டன வா

11. க்கி இ விளகிக்கெண்ணைக்குடலாகக் கொள்ளவும் தெங்கு மா உள்ளிட்
டனவாக்கி உடல் [புகுந்தனவும்] ஸ்ரீபண்ட

12. [ாரத்லே]எண்ணை விடவும் இப்படி செய்கை ஸ்ரீகாரியமாக . . . . . . .

13. இற்றை நாளால் ஸ்ரீபண்டாரத்தே ஒடுக்குவித்துக் கொண்டு இந்
நாயனார் திருநந்தவன

14. தில்லைப்பெருமாள் திருவோடைக்கரை பாழ்கிடந்து வருகிறமையில்
இத்திரு

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | — |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 9 |
| அரசன் : | மூன்றாம் இராஜராஜன் | | |

இடம் :

குறிப்புரை : இரண்டு துண்டுகளாக உள்ள கல்வெட்டு முதல் துண்டுக் கல்வெட்டில் மூன்றாம் இராஜராஜனுடைய மெய்க்கீர்த்தி காணப்படுகிறது.

கல்வெட்டு :

I

1. ஸ்வஸ்திஸ்ரீ சீர்மன்னிய் இரு நான்கு திசை விளங்க . . . . .
2. . . வித்தருளி வெங்கோபக் கருக்கலி பகைவிட நாகமெ
3. . . . குடிகாத்து நன்றாற்றுந் திறம் பொருது கடிதிழந்த முற்ப ..
4. . . . ாதனத்து விருந்தருளிய கோஇராசகேசரி பற்பரான திரு . . .
5. . . . விருதராஜ ஸயங்கர வளநாட்டு குறுக்கை நாட்டு குறு
6. . . . சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து இடையூ
7. . . . ற்று மூன்றாம் சதிரத்துண்டத்தும் மூன்றாம் கண்ணாற்று இச்ச

8. .. .. . என்னுதா . . .

9. . . . . மடந்தையும்

II

1. திருவேகம்பம் உ[ை]*டய

2. . . . ள்ளிட்ட மாக்களும் கழெ . .

3. .. ந்த விலைப் பெ[ா]*ருள் ..

4. லையாவதாகவும் இ ..

5. விற்று விலைப்பொருள் ..

6. க்குடுத்தேன் இச்செய்

7. இக்கொல்லை நிலவூ

த. நா. அ. தொல்லியல்துறை

தொடர் எண் : 10 / 1994

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | 14 – |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 1160 |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 231/1917 |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ், கிரந்தம் | முன்பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | இரண்டாம் இராஜராஜன் | ஊர்க் கல்வெட்டு எண் | 10 |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் மகாமண்டப வடக்குச்சுவர்.

குறிப்புரை : கல்வெட்டு முற்றுப் பெறவில்லை. சீவேதனப் பெருமாளான காலிங்கராயன் விருதராஜ பயங்கர வளநாட்டுக் குறுக்கை நாட்டுத் திருக்குறுக்கை உடையார் திருவீரட்டானமுடையார்க்குச் சிறுகாலைசந்தி உச்சிசந்தி உபசந்தியாகக் கண்ட வேதவனப் பெருமாள் சந்தி ஆகியவற்றுக்கு வேண்டுவனவற்றுக்கு உடலாக இந் நாயனார் தேவதானம் குறுக்கையான விக்ரமசோழச் சதுர்வேதி மங்கலத்துப் பிறிந்த குலோத்துங்க சோழநல்லூரில் நிலம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ [தேவற்கு யாண்]டு பதி(ன்)னாலாவது
2. மீன னாயற்று பூர்வ பக்ஷத்து சதுர்த்தசியும் ஞாய[ன் கிழமையும் பெற்ற] மஹத்து னாள் வி
3. ருதராஜ ஹயங்கர வ்ளனாட்டுக் குறுக்கைனாட்டு திரு[க்குறுக்கை உடையார்] திருவீரட்டானமு
4. டையார்க்கு உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் அருவந்தை அரயன் சீவேதவனப்

5. பெரும்மானாரான காலிங்கராயர் சிறு காலைஸந்திக்கும் [உச்சி]ஸந்திக்கும் நடுவு உபஸந்தியாக

6. க்கண்ட வேதவனப் பெருமாள் ஸந்திக்கு வேண்[டுவன] யிற்றுக்கு இந்நாயனார் தேவதானம் குறு

7. க்கையாந விக்ரமசோழச் சதுர்வேதி மங்கலத்துப் பிறிந்த குலோத்துங்க சோழநல்லூரில்

8. கோவலூருடையான் கோணப்பிரான் பக்கல் இவர் காணிப் பற்றாக விலைகொண்டு இறைமிகிதி சந்திக்கு

9. உடலாகவிட்ட வானவன் மாதேவி வதிக்கு கிழக்கு ராஜராஜ வாய்க் காலுக்குத் தெற்கு முதல் கண்ணா[ற்று]

10. இரண்டாஞ் சதிரத்துப் பொத்தகப்படி நிலம் ஒன்பது மா முக்காணியும் ..

11. . . . . . . . . . . . . .

(கல்வெட்டு முற்றுப் பெறவில்லை)

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | நாகப்பட்டினம் | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | மயிலாடுதுறை | வரலாற்று ஆண்டு : | கி.பி. 13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொறுக்கை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | 215/1917 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 11 |

இடம் : வீரட்டானேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப மேற்குச் சுவர்

குறிப்புரை : கல்வெட்டின் ஆரம்பம் கட்டடத்துள் மறைந்துள்ளது. விருதராஜபயங்கர வளநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீஇராஜநாராயண சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் திருவீரட்டான முடையார் கோயிலுக்குப் பலவாறாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றிய விவரங்களை குறிப்பிட்டுள்ளனர். அவற்றின் அளவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1. ..கிழமையும் பெற்ற .. தையத்து நாள் விருதராச பயங்கர வளநாட்டு ப்ருஹ்மதேயம் ஸ்ரீ இராஜநாராயண சருப்பேதி மங்கலத்து மகாஸபையோம் எழுத்து

